ஞானசம்பந்தம்

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

மலர் 47] விபவ ஆண்டு சித்திரைத்திங்கள் 10-5-8௮ [இதழ் 6

தருமை ஆதீனம் ஆதிபரமாசாரியர்



ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

-: குருபூஜை விழா :-

(5 — 6 — 1988

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தசுவாமிகள்

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர்

அருள்வாக்கு

உன்னுருவம் கண்டிருப்ப
தோகெட்டேன் முத்திசிவன்
தன்னுருவங் கண்டிருக்கத்
தக்கதே — முன்னறிஞர்
ஓது சிவன்தோற்ற
மொன்றுமே காண்பரெனும்
போத மறந்தனையிப் போது.

— முத்திநிச்சயம் 8

ஆசிரியர் :-

வித்துவான்

இராமலிங்கத் தம்பிரான்

சுவாமிகள்

துணையாசிரியர் :-

மகாவித்துவான்

சி. அருணைவடிவேல்

முதலியார்

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத்திங்கள்இதழ்

மலர் 47 | 10–5–88 | இதழ் 6

உட்பொருள்

எண்		பக்கம்
1	திருத்தருமை ஆதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயில் பெருவிழா அழைப்பிதழ்	க
2	ஞானுனுபூதி சொன்ன நற்குரவர் ...	281
3	தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை ...	287
4	சைவசமயமும் பரிணுமக்கொள்கையும்	294
5	திருக்குறள் இசைப் பாடல் ...	297
6	அபிராமி அந்தாதி ...	298
7	கடிதங்கள்	301, 308, 315
8	மேலை நாட்டுத் தத்துவ மேதைகள் ...	302
9	விகட சக்கர விநாயகர் – விளக்கம் ...	307
10	போதமும் சித்தியும் ...	309
11	நல்லக்குடி - தலச் சிறப்பு ...	313
12	மூர்க்கர், சோமாசிமாறர் ...	316
13	செய்திகள் ...	321
14	பார்வையாளர் குறிப்பு (நகல்) ...	324
15	எதிர்காலம் ...	325
16	இதழ்வழிச் சைவசமயக் கல்வி IV. பாடம்–4. ...	329

ௐ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்

ஸ்ரீ ஞானம்பிகை உடனாகிய ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி

திருக்கோயில்

பெருவிழா அழைப்பிதழ்

பெருங்கருணைத் தடங்கடலாகிய சிவபெருமான் ஆன்மாக்கள் மீது வைத்த எல்லையில்லாப் பெருங்கருணையினாலே காணாத அருவினுக்கும், உருவினுக்கும், காரணமாய்நிகழ்குறியாம் சிவலிங்கமாதி திருவுருக்கொண்டு எழுந்தருளியிருக்கின்ற தலங்கள் பலவற்றுள், இந்திரன், அகத்தியர், தருமன் ஆகியோர்களால் பூசிக்கப்பெற்றதும், காவிரி முதலிய தீர்த்தங்களால் சிறப்புற்றதும், வில்வாரண்யம் என்னும் திருநாமம் உற்றதும் ஆகிய சிறப்புக்களை உடையது தருமபுரம். இத்தலத்தில் ஸ்ரீ ஆலவாய்ச் சொக்கநாதப் பெருமான் திருவருளையும், கமலை ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிகர் குருவருளையும் நிரம்பப் பெற்றுத் திகழ்ந்த ஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள், தம் குருமூர்த்திகளது அருளாணையின் படி, சைவபரிபாலனம் என்றும் நிகழ்ந்துவருவதற்குரிய ஞான பீடத்தை நிறுவி வீற்றிருந்து, ஜீவசமாதி கூடிய திருக்கோயிலே ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயில். இதன்கண் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஞானம்பிகை உடனாகிய ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமிக்கு, விபவ ஆண்டு வைகாசித் திங்கள் 14 ஆம் நாள் (27—5—88) வெள்ளிக்கிழமை தொடங்கிப் பெருவிழா நடைபெறும். இந்நாட்களில் திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடும் நடைபெறும். சிவநேசச் செல்வர்கள் யாவரும் வந்திருந்து திருவிழாக் காட்சியைத் தினமும் தரிசித்தும் சொற்பொழிவுகளைக் கேட்டும் நலம்பெறுவார்களாக.

திருக்கயிலாய பரம்பரைத்
தருமை ஆதீனம்

தருமையாதீனப் மடாலயம்
விபவ – வைகாசி
1988

} **கார்பார் சொக்கநாதத்தம்பிரான்**

திருநாள் விபரம்

விபவ ஆண்டு வைகாசித் திங்கள்

தமிழ்த் தேதி	ஆங்கிலத் தேதி	கிழமை	திரு நாள்	விபரம்
13	26—5—88	வியாழன்		காலை 9-00 மணிக்குமேல் கணபதி ஹோமம். நவக்கிரகஹோமம்.
				அஸ்தநக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் இரவு 6-00 மணிக்குமேல் 7-30 மணிக்குள் தனுர் லக்னத்தில் யஜமான அனுக்ஞை. சுவாமி அனுக்ஞை. விக்னேஸ்வர பூஜை. வாஸ்து சாந்தி. மிருத்ஸங்க்ரஹணம், அங்குரார்ப் பணம், ரக்ஷாபந்தனம்.
14	27—5—88	வெள்ளி	1	அஸ்தநக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் காலை மணி 6-00 க்குமேல் 7-30 க்குள் விருஷப லக்னத்தில் ஸ்ரீ ஞானபுரீசுவரர் மகத்துவஜா ரோஹணம்.
15	28—5—88	சனி	2	கற்பகவிருக்ஷக் காட்சி.
16	29—5—88	ஞாயிறு	3	பூதம், பூதகி, இடும்பவாகனக் காட்சி.
17	30—5—88	திங்கள்	4	நந்தி, காமதேனு, குதிரைவாகனக் காட்சி.
18	31—5—88	செவ்வாய்	5	சகோபுர ரிஷபவாகனக் காட்சி.

விபவ ஆண்டு வைகாசித் திங்கள்

19	1—6—88	புதன்	6	யானை, அன்னம், ஆட்டுக்கடாவாகனக் காட்சி.
20	2—6—88	வியாழன்	7	இரவு மணி 7-30 க்குமேல் 9-30 க்குள் தனுர் லக்னத்தில் திருக்கல்யாண வைபவம், புஷ்ப விமான வெள்ளிரதக் காட்சி.
21	3—6—88	வெள்ளி	8	குதிரை, கிளி, யானைவாகனக் காட்சி.
22	4—6—88	சனி	9	விடியற்காலை மணி 5க்குமேல் 6-45க்குள் பஞ்சமூர்த்திகளும் தேருக்கு எழுந்தருளல், காலை 8க்கு மேல் 9 மணிக்குள் மிதுன லக்னத்தில் திருத்தேர் வடம்பிடித்தல்.
23	5—6—88	ஞாயிறு	10	காலைஸ்ரீசபாநாயகர் தீர்த்தம்கொடுத்தருளல். பிறகு பஞ்சமூர்த்திகளும் ரிஷபாரூடராய் எழுந்தருளிக் காவிரியில் தீர்த்தம் கொடுத்தருளல். இரவு துவஜாவரோஹணம்.
24	6—6—88	திங்கள்		மௌன உற்சவம்.
25	7—6—88	செவ்வாய்		ஸ்ரீ சண்டேசுவரர் உற்சவம்.
26	8—6—88	புதன்		காலைஉத்ஸவப் பிராயச்சித்தாபிஷேகம், இரவு 8மணிக்குமேல்9மணிக்குள் தனுர்லக்னத்தில் பஞ்சமூர்த்திகள் யதாஸ்தானம்.

தருமபுரம், அனைத்துலக சைவசித்தாந்த

தோத்திர சாத்திர

27, 28, 29—5—88

நாள்	முற்பகல் 10-00 மணி முதல் — 1-00 மணி வரை
27—5—88 வெள்ளி	**வரவேற்புரை :** திரு. தி. ந. இராமச்சந்திரன், பி. ஏ., பி. எல்., **ஆசியருளல் :** தருமை ஆதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் **முதன்மையுரை :** பேராசிரியர் வித்துவான் திரு. க. வெள்ளைவாரணனர்
28—5—88 சனி	**இரண்டாம் அமர்வு :** **தலைவர்:** டாக்டர் திரு. டி. பி. சித்தலிங்கையா **கட்டுரையாளர்கள் :** டாக்டர் திரு. பி. எஸ். சோமசுந்தரம் — திருஞானசம்பந்தரும் மெய்கண்டாரும் டாக்டர் திரு. சு. சாமிஐயா — நாவுக்கரசரும் மெய்கண்டாரும் திரு. சி. என். சிங்காரவேலு — நாவுக்கரசரும் உமாபதிசிவமும் டாக்டர் திரு. ஜி. பாஸ்கரன் — நாவுக்கரசரும் அருள்நந்திசிவமும்
29—5—88 ஞாயிறு	**நான்காம் அமர்வு :** **தலைவர் :** டாக்டர் திரு. எஸ். பி. சபாரத்தினம் **கட்டுரையாளர்கள் :** டாக்டர் திரு. டி. பி. சித்தலிங்கையா — மாணிக்கவாசகரும் மெய்கண்டாரும் டாக்டர் திரு. கு. சுந்தரமூர்த்தி — மாணிக்கவாசகரும் உமாபதிசிவமும் திரு. அ. பாலகுருவாயன் — மாணிக்கவாசகரும் அருள்நந்திசிவமும்

ஆராய்ச்சி நிறுவனம் நடத்தும்

ஒப்பாய்வுக் கருத்தரங்கு

மூன்று நாட்கள்

பிற்பகல்

2-30 மணி முதல் — 5-00 மணி வரை

முதல் அமர்வு :

வாழ்த்துரை : தொண்டைமண்டல ஆதீனம்
ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்

தலைவர் : முனைவர் திரு. ச. அகத்தியலிங்கம்

கட்டுரையாளர்கள் :

டாக்டர் திருமதி. கோமதி சூரியமூர்த்தி
— திருஞானசம்பந்தரும் அருள்நந்திசிவமும்

டாக்டர் திரு. இரா. செல்வக்கணபதி
— திருஞானசம்பந்தரும் உமாபதிசிவமும்

மூன்றும் அமர்வு :

தலைவர் : டாக்டர் திரு. ஆர். பாலசுப்பிரமணியன்

கட்டுரையாளர்கள் :

டாக்டர் திரு. ஆ. ஆனந்தராசன், — சுந்தரரும் மெய்கண்டாரும்

டாக்டர் திரு. எஸ். கங்காதரன், — சுந்தரரும் உமாபதிசிவமும்

டாக்டர் திரு. தெ. ஞானசுந்தரம்
— சுந்தரரும் அருள்நந்திசிவமும்

ஐந்தாம் அமர்வு :

தலைவர் : மகாவித்துவான் சி. அருணைவடிவேலு முதலியார்

கட்டுரையாளர்கள் :

திரு. சி. சு. மணி, — கீழைநாட்டுச் சாத்திரங்கள்

டாக்டர் திரு. மு. சிவச்சந்திரன், — கீழைநாட்டுத் தோத்திரங்கள்

டாக்டர் திரு. எஸ். பி. சபாரத்தினம்
— திருமுறைகளும் ஆகமங்களும்

நன்றியுரை : வித்துவான் திரு. சொ. முத்தையன்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்
300 ஆவது ஆண்டு நினைவு விழா
முதல் திருநாள்

27—5—88 வெள்ளி] மாலை 6-30 மணி

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் 300 ஆவது ஆண்டு
நினைவு விழாவைத் தொடங்கிவைத்து,
தருமை ஆதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்
அருளாசி வழங்குவார்கள்.

சாத்திரப் பேரவை

வரவேற்புரை :

வித்துவான்
ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள்
கட்டளை விசாரணை, திருநள்ளாறு தேவஸ்தானம்.

தொடக்கவுரை :

மாண்புமிகு. டாக்டர். ச. அகத்தியலிங்கம்,
துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

சிறப்புரை :

திருமுறை ஆராய்ச்சிக் கலைஞர்
திரு. க. வெள்ளைவாரணனர்
சிதம்பரம்.

பொருள்: "குமரகுருபரரும் சைவசித்தாந்தமும்"

விரிவுரைகள்:

டாக்டர். திருமதி. கோமதி சூரியமூர்த்தி
மதுரை.
— குமரகுருபரர் நூல்களில் பதி இயல்பு.

டாக்டர். திரு. தெ. ஞானசுந்தரம்
சென்னை.
— குமரகுருபரர் நூல்களில் பசு இயல்பு.

டாக்டர். திரு. கு. சுந்தரமூர்த்தி
திருப்பனந்தாள்.
— குமரகுருபரர் நூல்களில் பாச இயல்பு.

மெல்லிசை

செல்வன் மு. மூவேந்தன் குழுவினர்
தருமை ஆதீனக் கலைக் கல்லூரி, மாணவர்.

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் 300 ஆவது ஆண்டு நினைவு விழா

இரண்டாம் திருநாள்

28—5—88 சனி] [மாலை 6–30 மணி

கருத்தரங்கம்

வரவேற்புரை :

ஸ்ரீமத் மௌன மகாலிங்கத்தம்பிரான் சுவாமிகள்
கட்டளை விசாரணை, மௌனமடம் திருச்சிராப்பள்ளி.

சிறப்புரை :

மாண்புமிகு. திரு.என். கிருஷ்ணசாமி ரெட்டியார்
முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி, சென்னை.

அரங்கப்பொருள் :

" ஸ்ரீ குமரகுருபரர் ஒரு பல்கலை வித்தகர் "

ஆய்வுரைகள் :

திரு. சி. என். சிங்காரவேலு
சென்னை.
— இலக்கிய வித்தகர்.

டாக்டர் திரு. டி. பி. சித்தலிங்கையா
மதுரை.
— தத்துவ போதகர்.

டாக்டர் திரு. ச. கங்காதரன்
மதுரை.
— இலக்கண விற்பன்னர்.

திரைப்படம்

" திருவிளையாடல் "

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் 300 ஆவது ஆண்டு நினைவு விழா

மூன்றாம் திருநாள்

29—5—88 ஞாயிறு] [மாலை 6-30 மணி

சிந்தனை மேடை

வரவேற்புரை:

திரு. வி. ஆறுமுகம் பிள்ளை, (இ. ஆ. ப. ஓய்வு)
மயிலாடுதுறை.

சிறப்புரை:

மாண்புமிகு. டாக்டர். எஸ். முத்துக்குமரன்
துணைவேந்தர், பாரதிதாசன் பல்கலைக் கழகம்,
திருச்சிராப்பள்ளி.

இணைப்பாளர் :

மகாவித்துவான்
திரு. சி. அருணைவடிவேல் முதலியார்
காஞ்சிபுரம்.

பங்கேற்போர் :

திரு. சி. சு. மணி
பாளையங்கோட்டை.
— குமரகுருபரரின் தெய்வப் பற்று.

டாக்டர் திரு. எஸ். பி. சபாரத்னம்
சென்னை.
— குமரகுருபரரின் மொழிப்பற்று.

பேராசிரியர் திரு. அ. பாலருவாயன்
சென்னை.
— குமரகுருபரரின் தேசப்பற்று.

கலைநிகழ்ச்சி

" திருஞானசம்பந்தரே தென்னிசையின் தந்தை "

முனைவர் திரு. வீ. ப. கா. சுந்தரம்
மதுரை.

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் 300 ஆவது ஆண்டு நினைவு விழா

நான்காம் திருநாள்

30—5—88 திங்கள்] [மாலை 6–30 மணி

பட்டி மன்றம்

வரவேற்புரை :

டாக்டர் திரு. மு. சுவாமிநாதன்
மயிலாடுதுறை.

நடுவர் : மகாவித்துவான், முதுமுனைவர்
திரு. ச. தண்டபாணி தேசிகர்
மதுரை.

பொருள் : "கந்தர்கலிவெண்பா
தோத்திர இலக்கியமா? சாத்திர இலக்கியமா?"

தோத்திர இலக்கியமே :	சாத்திர இலக்கியமே :
டாக்டர் திரு. சு. சாமிஐயா சிதம்பரம்.	டாக்டர் திரு. கு. சுந்தரமூர்த்தி திருப்பனந்தாள்.
திரு. ந. மெய்ப்பொருள் தஞ்சாவூர்.	டாக்டர் திரு. சு. திருநாவுக்கரசு மயிலம்.
திரு. மயில்வாகனன் சிதம்பரம்.	திரு. சொ. முத்தையன் தருமபுரம்.

இன்னிசை

மதுரகான இசைச்செல்விகள்
T. V. சுசீலா & இந்திரா சகோதரிகள்
திருப்பனந்தாள்.

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் 300 ஆவது ஆண்டு நினைவு விழா

ஐந்தாம் திருநாள்

31—5—88 செவ்வாய்] மாலை 6-30 மணி

வழக்காடு மன்றம்

வரவேற்புரை :

திரு. சி. ஆர். குஞ்சிதபாதம் ஐயர், பி. ஏ., பி. எல்.,
வழக்கறிஞர், மயிலாடுதுறை.

நடுவர் : பேராசிரியர்

திரு. தி. வ. காந்தமதி நாதன்
மயிலாடுதுறை.

பொருள் : " நீதிநெறி விளக்கம் திருக்குறளின் வழி வந்ததே என்பது குற்றம் "

வழக்குத் தொடுப்பவர் : வழக்கு மறுப்பவர்

டாக்டர்
திரு. சி. சிவசங்கரன்
மயிலாடுதுறை.

டாக்டர்
திரு. பழ. முத்தப்பன்
மேலைச்சிவபுரி.

விகடம்

நகைச்சுவை மாமணி
திரு. திருமங்கைதாசன் குழுவினர், திருச்சேறை.

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் 300 ஆவது ஆண்டு நினைவு விழா
ஆறும் திருநாள்

1—6—88 புதன்] [மாலை 6—30 மணி

பட்டி மன்றம்

வரவேற்புரை : செந்தமிழ்ப் புரவலர்

திரு. இரா. இராஜசேகரன், பி. எஸ்சி., பி. எல்.,
மயிலாடுதுறை.

நடுவர் : திருவண்ணாமலை ஆதீனம் குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள்
(தவத்திரு குன்றக்குடி அடிகளார்)

பொருள் : பண்டார மும்மணிக்கோவையில் விஞ்சிநிற்பது பக்திச் சுவையா? தத்துவ உணர்வா?

பக்திச் சுவையே ! தத்துவ உணர்வே!

டாக்டர்
திரு. அ. கலியபெருமாள்
மயிலாடுதுறை.

திரு. சாமி. கிருஷ்ணமூர்த்தி
தருமபுரம்.

திரு. தெ. இராசாமணி
தருமபுரம்.

டாக்டர்
திரு. மு. சிவச்சந்திரன்
தருமபுரம்.

திரு பொன். முத்தையன்
கும்பகோணம்.

திரு. மு. வைத்தியநாதன்
திருச்சி.

கலைநிகழ்ச்சி

ஸ்ரீ குருஞானசம்பந்தர் தொடக்கப்பள்ளி
மாணவ மாணவியர், தருமபுரம்.

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் 300 ஆவது ஆண்டு நினைவு விழா

ஏழாம் திருநாள்

2—6—88 வியாழன்] [மாலை 6-30 மணி

ஒப்பியல் அரங்கம்

வரவேற்புரை :

திரு. இரா. சிவபுண்ணியம், பி. ஏ., பி. எல்.,
வழக்கறிஞர், மயிலாடுதுறை.

இணைப்பாளர் :

டாக்டர் திரு. எஸ். என். கந்தசாமி
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

உரைநிகழ்த்துவோர் :

பேராசிரியர் திரு. த. அகரமுதல்வன்
மேலையூர்.
— குமரகுருபரரும் திருமுறைகளும்.

டாக்டர் திரு. மு. சிவச்சந்திரன்
தருமபுரம்.
— குமரகுருபரரும் நீதி நூல்களும்.

டாக்டர் திரு. த. அமிர்தலிங்கம்
சென்னை.
— குமரகுருபரரும் சிற்றிலக்கியங்களும்.

பொம்மலாட்டம்
ஆறுபடை வீடு
ஸ்ரீ கணநாதர் பொம்மை நாடகசபை

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் 300 ஆவது ஆண்டு நினைவு விழா

எட்டாம் திருநாள்

3—6—88 வெள்ளி] [மாலை 6-30 மணி

வினாவிடை அரங்கம்

வரவேற்புரை :

திரு. இ. எஸ். கணபதி
மயிலாடுதுறை.

முதன்மையுரை : செந்தமிழ்ச்செல்வர்

வித்துவான் திரு. ம. வே. ஜெயராமன், எம். ஏ.,

பெங்களூர்.

இணைப்பாளர் :

டாக்டர் ஔவை. து. நடராஜன்

தனிஅலுவலர், உலகத்தமிழ்ச்சங்கம், சென்னை.

வினாத்தொடுப்போர் :

திரு. இரா. சிவபுண்ணியம்

மயிலாடுதுறை.

திரு. இரா. இராமலிங்கம்

மயிலாடுதுறை.

திரு. இரா. இராஜசேகரன்

மயிலாடுதுறை.

திருமதி. ப. நீலா

தருமபுரம்.

திரு. இரா. மருதநாயகம்

தருமபுரம்.

திரு. இரா. செல்வநாயகம்

தருமபுரம்.

கலைநிகழ்ச்சி

ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்நிலைப்பள்ளி

மாணவ மாணவியர், தருமபுரம்.

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் 300 ஆவது ஆண்டு நினைவு விழா

ஒன்பதாம் திருநாள்

4—6—88 சனி] [மாலை 6-30 மணி

கவியரங்கம்

வரவேற்புரை :

திரு. எஸ். பாஸ்கரன், பி. ஏ., பி. எல்.,

மயிலாடுதுறை.

முதன்மையுரை :

மாண்புமிகு. கே. வேங்கடசாமி

உயர்நீதி மன்ற நீதிபதி, சென்னை.

தலைமைக் கவிஞர் :

டாக்டர். திரு. சொ. சிங்காரவேலன்
மயிலாடுதுறை.

கவியரங்கேறுவோர் :

திரு. அரங்க. முத்துமணி
தஞ்சை.
— பேசும் மொழி தந்தானோ?
(திருச்செந்தூர்)

பாவலர் திரு. ச. பாலசுந்தரம்
தஞ்சை.
— முத்தெடுத்து அணிந்தாரோ?
(மதுரை)

வித்துவான் திரு. சாமி. கிருஷ்ணமூர்த்தி
தருமபுரம்.
— பொருள்கேட்டு ஆண்டானோ?
(தருமபுரம்)

வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன்
தருமபுரம்.
— கலைமகளும் மகிழ்ந்தாளோ?
(காசி)

இன்னிசை விரிவுரை

திருமதி. கௌரிராஜகோபால் குழுவினர்
சென்னை.
— சுந்தரர் ஹரிகதை

பத்தாம் திருநாள்

5—6—88 ஞாயிறு] [காலை 9-00

குருபூஜைத் திருநாள்

வரவேற்புரை :

திரு. துரைராஜு பிள்ளை
கடைக்கண் விநாயகநல்லூர் எஸ்டேட், சீர்காழி.

தொடக்கவுரை : கயிலைமாமுனிவர்

ஸ்ரீமத் காசிவாசி முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள்
ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள்.

சிறப்புரை :

திரு. ச. மெய்கண்டதேவன், இ. ஆ. ப.
இயக்குநர், சர்க்கரை வளர்ச்சிக் கழகம், சென்னை.

விரிவுரைகள் :

வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர்
தருமபுரம்.
— சிவபோகசாரம்.

வித்துவான் திரு. தா. குருசாமி
மதுரை.
— சொக்கநாதவெண்பா.

வித்துவான் திரு. சு. மு. சுந்தரராஜன்
திருவாரூர்.
— ஞானப்பிரகாசமாலை.

திரு. நீ. சு. சுந்தரராமன்
மதுரை.
— சிவஞானதேசிகர் திருவருட்பா.

காலை 10-00 மணி

ஸ்ரீ சொக்கநாதப்பெருமான் சிறப்பு வழிபாடு
ஸ்ரீ சொக்கநாதர் சந்நிதியில்
ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம்
திருச்சிராப்பள்ளி, திரு. ஏ. கே. சி. நடராசனுக்குத்
'தருமை ஆதீன இசைப் புலவர்'
என்னும் பட்டம் வழங்கி ஆசிஅருளல்.

குருபூஜை விழாமலர் :

"திருமந்திரம்"
(மூன்றும் பகுதி) ஏழு, எட்டு, ஒன்பது தந்திரங்கள்

பகல் 12-00 மணி

ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயில் வழிபாடு

நண்பகல் 1-00 மணி

மாகேசுவர பூஜை

மாலை 5-00 மணி

வரவேற்புரை :

வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர்
தருமபுரம்.

முதன்மையுரை :

திரு. லெ. நாராயணன் செட்டியார்
அதிபர், விசாலாட்சி ஆலை, மதுரை.

சிறப்புரை :

திரு. ஆர். சிங்காரவேலு, பி. ஏ., பி. எல்.,
சார்பு நடுவர், மயிலாடுதுறை.

விரிவுரைகள் :

திரு சு. சுவர்ணகாளீசுவரன்
— குருவழிபாடு.

திருமுறைத்தொண்டர்
திரு. என். இராமமூர்த்தி ஐயர், சென்னை.
— பலன்தரும் திருமுறை.

மாலை 7-00 மணி

தருமை ஆதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்
குருமூர்த்த வழிபாட்டிற்கு எழுந்தருளல்

இரவு 8-30 மணி

திருமுறை இசையரங்கு
சோமாஸ்கந்த சிவாசாரியார் குழுவினர்
செம்பொனார்கோயில்

6—6—88 திங்கள்] [காலை 7-00 மணி

பட்டினப்பிரவேசத் திருநாள்
ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலில்
சிவபூசகர்கள் சிவபூசை செய்தல்.

காலை 9-30 மணி

வரவேற்புரை :

திரு. த. விவேகானந்தன், தருமபுரம்.

முதன்மையுரை : சித்தாந்தக் கலாநிதி

திரு. தி. ந. இராமச்சந்திரன் பி. காம், பி. எல்.,
தஞ்சாவூர்.

சிறப்புரை ;

திரு. மி. ப. சோமசுந்தரம், சென்னை.

விரிவுரைகள் :

திரு வி. நாகராஜன், திருச்சி.

— தாயுமானவர்

வித்துவான் திரு. சு. முத்துக்கிருட்டிணன்,
மயிலாடுதுறை.

— சிவப்பிரகாசர்

வித்துவான் திரு. சொ. முத்தையன், தருமபுரம்.

— பட்டினத்தார்.

காலை 10–00 மணி சொக்கநாதர் வழிபாடு.

ஸ்ரீ சொக்கநாதர் சந்நிதியில்
ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம்
டாக்டர் திரு. சீர்காழி கோ. சிவசிதம்பரத்திற்கு
'தருமை ஆதீன இசைப்புலவர்'
என்னும் பட்டம் வழங்கி ஆசிஅருளல்.

பகல் 12–00 மணி ஞானபுரீசுவரர் வழிபாடு

நண்பகல் 1-00 மணி மாகேசுவர பூஜை

மாலை 5-30 மணி

வரவேற்புரை :

வித்துவான் திருமதி. ப. நீலா, தருமபுரம்.

சிறப்புரை : அறப்பணிச் செல்வர்

டாக்டர். திரு. கே. அரங்கசாமிப்பிள்ளை, சிதம்பரம்.

விரிவுரைகள் :

புலவர். திரு. கே. கணபதி, தருமபுரம்.

— அருணகிரிநாதர்.

திரு. எம். பாலசுப்பிரமணியன், கோவை.

— கச்சியப்பர்.

இன்னிசை

டாக்டர். திரு. சீர்காழி. கோ. சிவசிதம்பரம்
குழுவினர், சென்னை.

இரவு 10-00 மணி

தருமை ஆதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்
பட்டினப்பிரவேசம்

உ
குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 47 ★ இதழ் 6

தருமை ஆதீனத் திங்கள் இதழ்
விபவ சித்திரை 10—5—1988

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே.

— திருஞானசம்பந்தர்.

ஞானனுபூதி சொன்ன நற்குரவர்

குருபூஜைப் பெருவிழா :

திருக்கயிலாய பரம்பரை, தருமபுர ஆதீனம் கடந்த 450 ஆண்டுகளாகச் சிவநெறியையும், செந்தமிழையும் பேணிக்காத்து, வளர்த்து வருதலைச் சைவத் தமிழ் உலகம் நன்கு அறியும். சிவ ராஜதானியாய், சுத்தாத்துவித சைவசித்தாந்தப் பெருநெறியை உலகறியச் செய்துவரும் இவ்வாதீன ஸ்தாபகர் ஸ்ரீ குருஞான சம்பந்தர். ஞானனுபூதிச் செல்வராய், பேசா அனுபூதி நிலையினை, உலகறியத் தம் பனுவல்களில் ஒல்லும் வகை பேசிக் காட்டிய பேரருளாளர் ஸ்ரீ குருஞானசம்பந்தர். மெய்கண்ட சந்தானத்தில் திருவாரூரில் வாழ்ந்திருந்த கமலை ஞானப்பிரகாச தேசிகரின் மாணாக்கருள் ஒருவராய், அருளற்புதங்கள் நிறைந்த பெருவாழ்வு வாழ்ந்து, தருமபுர ஆதீனத்தை நிறுவி, ஞானநூல் பல அருளிச் செய்த ஸ்ரீ குருஞானசம்பந்தரின குருபூஜைப் பெருவிழா நிகழும் வைகாசித்திங்கள் 23 ஆம் நாள் (5–6–88) ஞாயிற்றுக்கிழமை தருமபுர ஆதீனத்தில் மிகச்சிறப்பாக நடைபெறவுள்ளது.

ஞான பூமி :

தருமபுரம் 'ஞான பூமி' என்றும், ஆதீனம் ஞானப் பயிர் வளர்க்கும் 'சைவப் பண்ணை' என்றும், ஸ்ரீ குருஞானசம்பந்தரை உள்ளிட்ட தருமை ஆதீன குருமூர்த்திகள் 'ஞானனுபூதிச் செல்வர்கள்' என்றும், அனுபூதி நிலையே இவ்வாதீனத்தின் தனிப்பெருஞ் சிறப்பு என்றும் அண்மைக்காலத்தில் வாழ்ந்து மறைந்த திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீ ஞானியார் சுவாமிகள் பெருமிதத்தோடு குறித்தருளியுள்ளார்கள. திருக்கயிலாய மரபு வழிவந்த சிவஞானமும், ஸ்ரீ குருஞானசம்பந்தர் வழிவந்த அனுபூதி நிலையும், தருமை ஆதீன குருபரம்பரை வரலாற்றிலும், தருமை ஆதீன பண்டார சாத்திரங்களிலும் பரிபூரணமாய் நிறைந்திருத்தலை அறிஞர் உலகம் நன்கு அறியும். ஸ்ரீ குருஞானசம்பந்தரின் குருபூஜைத் திருநாளில் ஞானசம்பந்தம் தன் நேயர்களுக்குத் தருமை ஆதீன குருமரபை நினைவூட்டுவதோடு, குருமுதல்வரின் அனுபூதி வெளிப்பாடுகளுள் சிலவற்றை நினைவு கூர்ந்து மகிழ்கிறது.

உபதேச மரபு :

புறச்சந்தானுசாரியருள் நான்காமவராகிய உமாபதிசிவத்தை அடுத்துத் திருக்கயிலாய பரம்பரை, மெய்கண்ட சந்தானம் இடையறுது வளர்ந்து வந்த திறத்தைத் தருமை ஆதீனத் திருக்கூட்டத்து அடியவர்களுள் ஒருவராய், முதல் சாத்திரப் பேருரையாளராய்த் திகழ்ந்த ஸ்ரீ வெள்ளியம்பலவாண முனிவர், தம் முத்தி நிச்சயப் பேருரையில் தெளிவுபட விரித்துரைத்துள்ளார். உமாமதி சிவத்திடம் அருளுபதேசம் பெற்றவர் அருள்நமசிவாயர். அருள் நமசிவாயரின் மாணுக்கர்களுள் ஒருவராகிய காழி கங்கை மெய்கண்டார் வழியில் அடுத்து, சிற்றம்பலநாடிகள், சம்பந்த முனிவர், சிவபுரம் ஞானப்பிரகாசர், சிவபுரம் தத்துவப்பிரகாசர், திருவாரூர் செட்டித்தெரு ஞானப்பிரகாசர், கமலை ஞானப்பிரகாசர், ஸ்ரீ குருஞானசம்பந்தர் என இவ்வாறு திருக்கயிலாய பரம்பரை இடையறவு படாது வளர்ந்து அமைந்த திறம் எண்ணி, எண்ணி இறும்பூது எய்தத் தக்கது. இவ்வுபதேச மரபில் ஞான நூல்கள்பலவும் சைவசித்தாந்தப் பெருநெறியை அநுபூதி நிலையில் விளக்கும் வண்ணம் தோன்றிப் பயன்விளைத்தன.

அருளியல் வாழ்வு :

கி. பி. 15 ஆம் நூற்றுண்டின் இடைப் பகுதியில் தென்பாண்டி நாட்டில் ஸ்ரீவில்லிபுத்தூரில், கார்காத்த வேளாளர் மரபில் ஸ்ரீ குருஞானசம்பந்தர் அவதரித்தார்கள். மதுரை ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமானை, பூஜாமூர்த்தியாகக் கைவரப்பெற்று, அவன் அருளால்

கமலை ஞானப்பிரகாசரை ஆசாரியராக அடைந்து சிவஞானோப தேசம் செய்விக்கப் பெற்றூர்கள். திருவருளாலும் குருவருளாலும் நிகழ்ந்த அருளற்புத நிகழ்ச்சிகள் ஸ்ரீ குருஞானசம்பந்தரின் பரிபக்குவ நிலையை உலகுக்கு உணர்த்தின. குருவாணையை ஏற்றுத் தருமபுரத்தில் 'ஞானப்பிரகாசன்' திருமடம் கண்டு, ஓடி வரும் காரணர்களுக்கு முப்பொருள் உண்மை உணர்த்தி அருளுபதேசம் செய்தார்கள். சிவபோகசாரம், சொக்கநாத வெண்பா முதலாய ஞானப்பனுவல்கள் எட்டினையும், சிவஞான சித்தியாருக்குச் செய்யுள் நடையிலான 'ஞானவரண விளக்கம்' என்றபேருரையையும் அருளிச்செய்து ஞானனுபூதிச் செல்வராய்த் திகழ்ந்த ஸ்ரீ குருஞானசம்பந்தர் தருமையில் ஜீவசமாதி கூடி அருளினூர்கள்.

பேசா அனுபூதி :

'அனுபூதி' என்ற சொல்லுக்குத் 'தானே கண்டறிந்ததும், பிறருக்குச் சொல்ல இயலாததுமான அறிவு' என்றும், 'நினைவிற்கு அயலாகி, வேறுகிய உணர்வு' என்றும் அகராதிகள் பொருள் உரைக்கின்றன. 'பேசா அனுபூதி' என இதனை அருணகிரிநாதர் குறிப்பர். 'பரமரகசியம்' என்பர் ஸ்ரீ குருஞானசம்பந்தர். திருவருளால் தாம் எய்திய அருள் அனுபவத்தை – அனுபூதிச் செல்வத்தை – வார்த்தைகளுக்குள் வாராதெனினும் ஒல்லும் வகையான் மக்களின் ஈடேற்றம் கருதி எடுத்துரைக்கும் அற்புதத்தை ஸ்ரீ குருஞானசம்பந்தர் நூல்களிலே காணமுடிகின்றது. சொக்கநாத வெண்பாவிலும், 'அனுபூதி மாலை', 'அனுபூதி வெண்பா' என்றும் ஸ்ரீவெள்ளியம்பலவாணரும் பிறரும் குறிக்கும் சிவபோக சாரத்திலும் ஸ்ரீ குருஞானசம்பந்தர் வழங்கியருளும் அனுபூதிச் செல்வங்களில் சிலவற்றை அவர்கள் குருபூஜைத் திருநாளை முன்விட்டு நினைவு கூர்தல் பொருத்தமாகவே அமைகிறது.

அனுபூதி விளக்கம் :

வினவிடை அமைப்பில், சிவபெருமானின் திருவருள்திறத்தை. வெவ்வேறு இடங்களில் முன்பின்னுகச் சொக்கநாத வெண்பாவில் இடம் பெற்றிருக்கும் இரண்டு வெண்பாக்களால் ஸ்ரீ குருஞான சம்பந்தர் விளக்கியருளும்திறம் சிந்தைக்கு விருந்தாகஅமைகிறது. மதுரையில் சொக்கநாதப் பெருமான் நிகழ்த்திய அறுபத்து நான்குதிருவிளையாடல்களுள்ஒன்று எல்லாமும்வல்ல சித்தரானது. இதனைச் சமத்காரமாக நினைவு கூர்ந்து,

" அன்பர்க்கு அருள்புரிவ தல்லாமல் தேவரீர்
வன்பர்க்கு அருள்புரிய மாட்டீரேல் — உம்பர்தொழும்
நல்லார் புகழ்மதுரை நாதரே தேவரீர்க்(கு)
எல்லாமும் வல்லசித்த ரேன்? "

என்ற பாடலில் எல்லாமும்வல்ல சித்தர் என்ற பெயர் உமக்கு எவ்வாறு பொருந்தும் என வினத்தொடுக்கிறார். அடுத்துவிடையும் பகர்கிறார். அனுபூதி நிலையில், உயிர்களின் பரிபக்குவ மற்ற நிலையைத் தம்மேல் ஏற்றிக்கொண்டு, அன்பேதும் இல்லாத என்னையும் ஒருபொருளாக ஏற்று ஆண்டவர் அல்லரோ தாங்கள்! எனவே, தங்கள் கருணை பெரிது. நீங்கள் எல்லாமும்வல்ல சித்தர் என்பது பொருத்தமே என்பதை உணர்கிறேன் எனக் கூறி, சிவபெருமான் 'கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும்' திறத்தை நிலைநாட்டுகின்றார். அப்பாடல் வருமாறு,

" என்போல் மலகடினர் எவ்விடத்துங் கண்டதுண்டோ
இன்பே மதுரைக் கிறைவனே — அன்பேதும்
இல்லா தெனையாண்ட எண்ணத்தால் தேவரீர்
எல்லாமும் வல்லசித்த ரே "

ஞானவாயில் :

மனம், மொழி, மெய் என்ற முக்கரணங்களுள் மனம் ஒன்றை நினைக்கிறது. மொழி நினைவைச் சொல்லால் வெளிப்படுத்து கின்றது. மெய் ஒன்றை இயற்றுகின்றது. இம்முத்தொழிலையும் சிவனருளைப் பற்றுகக் கொண்டே இயற்ற வேண்டும் என்பது நம் முன்னோர் உரைத்த அருநெறி. 'உயிராவணமிருந்து' என்று தொடங்கும் திருத்தாண்டகத்தில் அப்பர்பெருமான் 'நின்அருட் கண்ணால் நோக்காதார் அல்லாதாரே' என்றும், வினு விடைத் திருத்தாண்டகத்தில் 'அப்படியும் அந்நிறமும் அவ்வண்ணமும் அவனருளே கண்ணாகக் காணின் அல்லால் எதையும் காணவும் முடியாது, காட்டவும் முடியாது' என்பதையும், 'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்பதனையும் விளக்கியுரைக்கும் ஸ்ரீ குருஞானசம்பந்தர் முதலில் குரு சீடனுக்குச் சொல்வதாயுள்ள அனுபூதிப்பாடலைத் தருகின்றார்.

" ஏதேது செய்திடினும் ஏதேது பேசிடினும்
ஏதேது சிந்தித் திருந்திடினும் — மாதேவன்
காட்டிடுவ தானவருட் கண்ணைவிட்டு நீங்காது
நாட்டம் அதுவாய் நட "

என்பது அப்பாடல். இப்பாடலில் முக்கரணங்களின் இயக்கமும் சிவனருளாகிய நாட்டத்தையே கண்ணாகக் கொண்டு இயங் தல் வேண்டுமென்கிறார். அனுபூதி நிலையில் 'அவனருளே கண்ணாகக் காணக்' கற்றால், யாவும் நம் செயல் அன்று. இறைவன் செயலே என்ற பெருஞானம் தாமே வந்து இணையும். இக்கருத்தமைந்த அனுபூதிப்பாடலை அடுத்துத் தருகின்றார். குருவே உன் ஆணைவழி நடக்கத் தொடங்கினேன். எல்லாம் இறை செயலாகவே காண்கின்றேன். தன்செயலே காணவில்லை என்கிறார். அப்பாடல் வருமாறு,

" ஏதேது செய்தாலும் ஏதேது சொன்னாலும்
ஏதேது சிந்தித் திருந்தாலும் — மாதேவா
நின்செயலே என்று நினதருளா லேஉணரின்
என்செயலே காண்கிலே னே "

வினைவலி கூறல் :

" பரபரக்க வேண்டா பலகாலுஞ் சொன்னேன்;
வரவரக்கண் டாராய் மனமே! - ஒருவர்க்கும்
தீங்கு நினையாதே, செய்ந்நன்றி குன்றாதே;
ஏங்கி இளையா திரு "

என அறிவுறுத்துகின்றார் ஸ்ரீ குருஞானசம்பந்தர். இங்கே 'வரவரக் கண்டு ஆராய்மனமே' என்ற தொடருக்கு அனுபூதி விளக்கமாக 'வினைக்கோட்பாட்டினை' விரித்து வேறு ஓர் பாடலில் விடை கூறியருளுகிறார்கள்.

" அவரவர் வினைவழி அவரவர் வந்தனர்
அவரவர் வினைவழி அவரவர் அனுபவம்
எவரெவர்க் குதவினர் எவரெவர்க் குதவிலர்
தவரவர் நினைவது தமைஉணர் வதுவே "

பிறப்பும், பிறப்பின்வழி வந்த இன்பதுன்ப அனுபவங்களும் அவரவர் ஈட்டிய வினைவழி வந்தன என்ற ஞானம் பிறந்தால், பரபரக்கும் நிலை தாமே அடங்கும் என விளக்கியருளும் திறம் மெய்சிலிர்க்க வைக்கிறது.

நோவது ஏன் ?

தேசத்திற்கும், சிவாலயங்களுக்கும் தீங்குவருமாறு உலகவர் மன்னனை நொந்துரைப்பர். இறைவன் அருள் இல்லையோ என

ஏங்குவர். இதனைத் 'தேசம் சிவாலயங்கள்' என்ற பாடல் வழிக் குறித்தருளும் ஸ்ரீ குருஞானசம்பந்தர், ஞானானுபூதி நிலையில் உண்மை உணர்த்துவராய், விடைபகர்வராய்,

" ஈசன் பலகீனன் என்றக்கால் ஆலயத்தில்
மோசம் வந்ததென்று மொழியலாம் — ஈசனே
ஆக்குவதும் ஆக்கி அழிப்பதுவும் தானானால்
நோக்குவதென்! யாம்பிறரை நொந்து "

என அருளிச்செய்கிறார். ஆக்குவதும், அழிப்பதும் அவனே என்று தெளிவு பிறந்துவிட்டால், நாடு மற்றும் சமயத்துறையில் தீங்கு நிகழுங்கால், நமதுதவறுகளுக்கு அவன்தரும் தண்டனைகள் இவை என்ற ஞானம் சித்திக்கும். இவ்வாறு ஸ்ரீ குருஞானசம்பந்தரின் ஞானானுபூதிச் சிந்தனைகள் மிகப்பலவாய் உள்ளன.

வருக! அருள் பெறுக :

இத்தகு ஞானானுபூதிப் பெருநிலை வாய்க்கப் பெற்ற தருமை ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூஜைப் பெருவிழா இவர்கள் ஜீவசமாதி கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஞானம்பிகை உடனுய ஸ்ரீ ஞானபுரீசுவரர் ஆலய வைகாசிப் பெருவிழா 27–5–88 வெள்ளிக்கிழமை தொடங்கி 5–6–88 ஞாயிற்றுக்கிழமை வரை பத்து நாள்களுக்குச் சீரும் சிறப்புமாகத் தருமை ஆதீனத்தில் நடைபெறவுள்ளன. 5–6–88 ஞாயிற்றுக் கிழமை ஆதீனத் திருமடத்தில் ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூஜைப் பெருவிழாவும். 6 6 88 பட்டினப்பிரவேசமும் சிவபூசை மகாநாடும் நடைபெறவுள்ளன. தருமை ஆதீன அடியவரும், ஸ்ரீ காசிமடத்தின் ஸ்தாபகருமாகிய ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளின் 300 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி இவ்வாண்டு திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடு ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளின் பனுவல் களைப் பல்வேறு கோணத்தில் ஆராயும் நோக்கில் அமைகிறது. தருமை ஆதீனம் 26 ஆவது குருமூர்த்திகளாக எழுந்தருளி அருள்பாலித்து வரும் **ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்** திருவுளப்பாங்கின் வண்ணம் நிகழும் குருபூஜைப் பெருவிழாவிற்குச் சைவப் பேரன்பர்கள் வருகை தந்து குருவருளும் திருவருளும்பெற்று உய்யுமாறு ஞானசம்பந்தம் அன்புடன் அழைக்கிறது.

குருவருள் போற்றிக் குவலயம் காப்பீர்!

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

சீகாழியில் நடைபெற்ற திருமுலைப்பால் திருவிழாவில்

வழங்கியருளிய

ஆசியுரை

22—4—1988

சீகாழிப்பதி சைவர்கட்குச் சிவராச தானியாக விளங்குவது. தமிழக வரலாற்றில் கி. பி. இரண்டாம் நூற்றாண்டு முதல் ஆறும் நூற்றாண்டின் இடைப்பகுதி வரை இருண்ட காலம் எனப் பேசப் படுகிறது. இக்காலமே களப்பிரர் ஆட்சிக்காலம். இக்காலத்தில் தான் காரைக்கால் அம்மையார், கண்ணப்பர், திருமூலர் போன்ற நாயன்மார்கள் விண்மீன்கள் எனத் தோன்றிச் சிவஒளி பரப்பினர். ஆறும் நூற்றாண்டின் இறுதியில் அப்பர் விடிவெள்ளியாகவும், ஞானசம்பந்தர் உதய சூரியனாகவும் தமிழகத்தில் தோன்றினர். இவ்விருவரையும் சேக்கிழார் சைவநெறி பெற்ற புண்ணியக் கண் இரண்டெனப் போற்றுகின்றார். எனவே இவர்கள் காலமே சைவத் தின் பொற்காலம். தமிழகத்தின் பொற்காலம். இவ்விரு பெரு மக்களின் தோற்றத்தையும், எட்டாம் நூற்றாண்டில் தோன்றிய சுந்தரர் தோற்றத்தையும் சேக்கிழார் அவதாரம் என்று குறிப்பிடு கின்றார். சிறுத்தொண்ட நாயனார் திருமகனாரையும் சீராள தேவரெனும் திருமைந்தர் அவதரித்தார் என்று குறிப்பிடுகின்றார்.

அவதாரம் என்பது மேல்நிலையில் உள்ளவர்கள் கீழ் நிலைக்கு இறங்கிவந்து தம் பயன் கருதாது மன்னுயிர்கட்கு அருள் செய்வதைக் குறிக்கும். தேவார மூவர்களும் பொதுவாக உயிர் களைப் பற்றிய, சிறப்பாக மக்களைப்பற்றிய, துன்ப நீக்கத்திற்கும், இன்ப ஆக்கத்திற்கும் வழிகாணவே அவதரித்தனர். திருத் தொண்டத் தொகை அருளிய சுந்தரர் அவதாரத்தைப் பற்றி குறிப்பிடவந்த சேக்கிழார், "தீதகன்று உலகம் உய்யத்

திருஅவதாரம் செய்தார்'' என்று தீது அகலலாகிய துன்ப நீக்கத் திற்கும், உலகம் உய்தலாகிய இன்ப ஆக்கத்திற்கும் அவதாரம் செய்தார் என்று தொகுத்தே சுட்டினுர்.

திருநாவுக்கரசரைப் பற்றிக் குறிப்பிடும்போது சிறிது வகைப் படுத்தி " அலகில்கலைத்துறை தழைப்ப, அருந்தவத்தோர் நெறி வாழ" உலகில் வரும் இருள் நீக்கி ஒளிவிளங்கு கதிர்போல. மலரும் மருள்நீக்கியார் வந்து அவதாரம் செய்தார் " என்பார் சேக்கிழார். கலை–கலித்தல்; நீக்குதல், கலைத்துறை தழைப்பதால் துன்ப நீக்கமும், அருந்தவத்தோரும், அவர்தம் நெறியும் வாழ்வ தால் இன்ப ஆக்கமும் தரவந்தது அப்பர் அவதாரம் மேலும் உலகில் வரும் இருள் நீக்குதல் துன்பநீக்கம்; ஒளிவிளங்கு கதிர் போல மலர்தல் இன்ப ஆக்கம்.

திருஞானசம்பந்தர் அவதாரம் பற்றிக் குறிப்பிட வந்த சேக்கிழார் விரிவுபடுத்தியே பேசுகின்றுர். முதலில் அவர் அழுத தற்கு மூன்று காரணம் தொகுத்துக் காட்டுகின்றுர். வேதநெறி தழைக்கவும், மிகுசைவத்துறை விளங்கவும், பூதபரம்பரை பொலியவும் என்பன அவை. வேதநெறி பொது நெறி எனவே வேதநெறி தழைத்தோங்க என்றும், சைவம் சிறப்பு நெறி யாதலால் மேம்பட்ட என்ற குறிப்பில் மிகுசைவத்துறை விளங்க என்றும், இவ்விரண்டும் முறையே தழைத்தோங்குதலும், விளங்குதலும் உயிர்களின் பொருட்டே என்பார் பூதபரம்பரை பொலிய என்றும் அருளிச்செய்தார். பூதம் என்பது உயிர். பரம்பரை என்பது வழிவழியாக வருவதைக் குறிக்கும். உயிர்கள் நுட்பமானவை, அவை கண்களுக்குத் தெரியா. உயிர்களைப்பற்றி நிற்கின்ற பூதகாரியமாகிய உடல்களைக் கொண்டுதான் உயிர்களை அறிகிறோம். எனவே உயிர்களைப் பூதபரம்பரைபொலிய என்றுர். பொலிதல் - விளங்குதல்; வளர்ந்து நிலைபேறடைதல் ஞான சம்பந்தரின் திருத்தொண்டைப் பரவுதற்கு, அவர்தம் வரலாற் றைப் பேசுதற்கு அவர்தம் பாதமலர் தலைக்கோடலே வழியாம் என்கிறுர் சேக்கிழார். அவனருளாலே அவன் தாள் வணங்குதல் தானே அரன்நெறி, அஃதே அடியார்நெறிக்கும் பொருந்துவதைக் காட்டுகின்றுர் சேக்கிழார்.

ஞானசம்பந்தர் அவதாரத்திற்குப் பல காரணங்களை, ஐந்து பாடல்களால் காட்டுகின்றுர். அவற்றைப் பத்தொன்பது காரணங் களாகச் சிவக்கவிமணி சி. கே. எஸ் விளக்கியுள்ளார். அவற்றைப் பதினுறு காரணங்களாகவும் சுருக்கிக் காட்டலாம். மண்ணில் வளர்மதிக் கொழுந்தாகத் திகழ்ந்த ஞானசம்பந்தரின் வயதும்

பதினாறு. மதியின் கலைகளும் பதினாறு. எனவே அவதாரக் காரணங் களும் பதினாறாகக் கோடல் நாம்பெறும் பேறும், என்றும் திருவருட் பொருத்தமாகவே அமைகிறது.

(1) பரசமயத் தருக்கு ஒழிய – பரசமயம் ஒழிய என்னாது அவற்றின் தருக்கு ஒழிய என்பது குறிப்பிடத்தக்கது. 'ஆழ்க தியவர்' என்னாது 'ஆழ்கதீயது' என்ற ஞானசம்பந்தர் திருவாக்கும் நினைவு கூரத்தக்கது.

(2) சைவ முதல் வைதிகமும் தழைந்தோங்க-அமுதகாரணம் குறிப்பிடவந்த சேக்கிழார் வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறை விளங்க எனத் தனித்தனியே குறிப்பிட்ட சேக்கிழார் இங்கு இரண்டையும் ஒன்றாக இணைக்கிறார். வேதம் பொதுநெறியாக இருந்தாலும் சைவத்தை முதன்மையாகக் கொண்டது; முக்கிய மாகக் கொண்டது என்பதை உணர்த்துவதற்கே இங்ஙனம் அருளினார். இதனை ஞானசம்பந்தரும் "வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது நாதன் நாமம் நமச்சிவாயவே" என்ற நமச்சிவாயத் திருப்பதிகத்தால் நமக்கு உணர்த்துகின்றார். வேதத்தின்நடுப்பாகமாகிய ஸ்ரீருத்திரத்தில்வேதமும் "நமசிவாயச சிவதராயச" என்று சிவத்தைத்தான் - சிவநாமத்தைத்தான் முதன்மையாகப் போற்றுகின்றது. பின்வந்த காசிவாசி செந்தில் நாதையரும்வேதத்திற்கும் சிவாகமங்கட்கும் வேற்றுமைகண்டிலம் என்றுவரையறைசெய்துள்ளார்.வேதசம்பந்தமுடையதுவைதிகம். எனவே சைவம் வேதசம்பந்தமுடையதாலும், வேதம் சைவத்தை முதன்மையாகக் கொண்டமையாலும் சைவம் வைதிக சைவம் எனப்பெற்றது. "பழைய வைதிக சைவம் பரக்கவே" என்ற ஆன்றோர்வாக்காலும், "இராசாங்கத்தமர்ந்தது வைதிக சைவம் அந்தோ" என்ற தாயுமானார் வாக்காலும் உண்மை உணரலாம்.

(3) தூய திருநீற்று நெறி எண் திசையும் தனி நடப்ப - தூய நெறிக்குத் தூய்மையான திருநீறே சின்னமாக-அடையாளமாகத் திகழ்கிறது. முடிபான - நிலையான பேற்றை (பேரின்பத்தை) அடைய வழிகாட்டும் சிவநெறியின் சின்னமும் நிலைமாறுபாடு அடையாத திருநீறாக இருப்பது சிவநெறியின் சிறப்பாகும். இது குறித்தே திருநாவுக்கரசரும் நிலையிலா இன்பம் நாடுகின்ற நெஞ்சைப் பார்த்து "நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா" என்று நெஞ்சை நிலைபேறுடைய சிவநெறிக்கு அழைக் கின்றார். தனி நடப்ப என்பது ஒப்பாரும் மிக்காரும் இன்றி நடப்ப என்பதைக் குறிக்கும். வேறொரு துணையின்றித் தனித்தே நடக்கும் வல்லமையுடையது என்பதையும் குறிக்கும்.

(4) ஏழுலகும் களிதூங்க - பூவுலகம் மத்திய உலகமானதால், மேல் மூன்றுலகும், கீழ் மூன்றுலகும் சேர்ந்து ஏழுலகும் பெரு வாழ்வு வந்ததென மகிழ்ச்சிக் கடலில் திளைக்கின்றது. உலகு என்றது ஆங்காங்குள்ள உயிர்களைக் குறிக்கும்.

(5) அண்டர் குலம் அதிசயிப்ப அந்தணர் ஆகுதிபெருக - அந்தணர் ஆகுதியில் கலிமெலிகிறது; அகல்கிறது; வளம் பெருகு கிறது. பிறவிப்பயனை அடைகிறார்கள் அந்தணர்கள். இதனைக் காணும் அண்டர்குலம் நாம்இப்படி ஆகுதி வேட்கும் நிலைபெற்றோ மில்லையே என்று அதிசயிக்கின்றனர். "புவனியில் போய்ப் பிறவாமையில் நாள் நாம் போக்குகின்றோம் அவமே" என்று வருந்தவும் செய்கின்றனர் என்கிறார் மாணிக்கவாசகர்.

(6) வண்டமிழ் செய்தவம் நிரம்ப - தமிழ் தவம் நிரம்பியது; வேதம், 'இவன் இறைவன்' என்று சுட்டிக்காட்டாது 'அல்ல, ஈதல்ல' என்று அன்மைச் சொல்லினால் துதித்து இளைத்து நிற்க, தமிழ், 'பெம்மான் இவன்'' என்று இறைவனைச் சுட்டிக் காட்டும் பெருமை பெற்றது. மேலும் தமிழ் தன்னைப் பயில்வார்க்கு இது வரை அறம்முதலிய நான்கினையும்பொதுவகையால் அறிவித்ததே யன்றி நன்னெறியாகிய ஞானத்தைக் காட்டி வீட்டு நெறி காட் டும் சிறப்புடையதாய் அமையவில்லை. அந்நிலை பிள்ளையாரது திருவாக்கினின்றும் போந்தஞானத்தமிழாம் தேவாரத்தால்தான் நிறைவேறிற்று- எனவே தவம் நிரம்ப என்றார்.

(7) மாதவத்தோர் செயல் வாய்ப்ப - மாதவம் என்பது சரியை, கிரியை முதலாகிய சிவபுண்ணியங்கள். செயல்வாய்த்தல் என்பது குறை நீங்கி நிரம்புதல். திருவோத்தூரில் ஆண்பனை பெண்பனை ஆயினமையும் திருமயிலையில் எலும்பு பெண்ணுரு வாயினமையும் ஆகிய பிள்ளையாரின் அருள் வரலாற்றுநிகழ்ச்சிகள் மாதவத்தோர் செயல் வாய்த்தலாம்.

(8) திசையனைத்தின் பெருமை எலாம் தென்திசையே வென் றேற - தென்திசையே வென்றேற என்றதனால் புறச்சமயங்களை வெற்றி கொண்டமையும் சைவ சமயத்தை நிலை நிறுத்தியமையும் கூறப்பட்டன. வெல்லுதல் - தீமைகளை நீக்குதல்; மதுரை நிகழ்ச்சி ஈண்டு இணைத்து எண்ணத்தக்கது, ஏறுதல்-நன்மைகளை ஆக்குதல்; இது பல இடங்களில் காணத்தக்கது. சுந்தரரின் அவதாரத்தைக் கூறவந்த சேக்கிழார் ' மாதவம் செய்த தென்திசை வாழ்ந்திட'' என்று குறிப்பதும் இங்கு நினைவு கூரத்தக்கதாம்.

(9) மிசை உலகும் பிற உலகும் மேதினியே தனி வெல்ல - விண்ணுலகு, மிசை உலகு என்றும் கீழ் உலகு பிறஉலகு என்றும் குறிக்கப் பெற்றன. இவ்வுலகங்களை இவ்வையகம் வென்றது என்பது, வீட்டு நெறி அடைதற்குரிய சாதனமாகிய வழிபாடு நிகழ்த்துதற்குத் திருக்கோயில்கள் அமைந்துள்ளமையும் அவை இவர் அவதாரத்தால் சிறந்து ஓங்கினமையும் ஆகும்.

(10) அசைவில் செழுந்தமிழ் வழக்கே அயல்வழக்கின் துறை வெல்ல – தமிழ் வழக்கு, தமிழ்நாட்டின் இறைவழிபாட்டு வழக்கு. இது, அயல்நாட்டு வழிபாட்டுத் துறையினை வெல்லும்படி நிகழ்ந்தது. மேலும் தமிழ் வழக்கு, தொன்மையும், நன்மையும், உண்மையும் பண்பும் நிறைந்து அசைக்கமுடியாத கொள்கைப் பிடிப்புடையதாகலின் அசைவில் செழுந்தமிழ் வழக்கென்றார்.

(11) இசை முழுதும் மெய்யறிவும் இடம் கொள்ளும் நிலை பெருக-தமிழின் முப்பிரிவுகளுள் ஒன்றுஇசை, ஈண்டு பண்ணமைதியைக் குறித்தது. பிறஇடங்களில் இசைப்பகுதி ஓரோர் நிலையில் இடம் பெற இங்கு முழுமையும் நிறைந்தது என்றார். மேலும் இசை, வெற்றிசையாய் அமையாது மெய்ஞ்ஞானம் சேர்ந்த மெய்யிசையாய் நிலைத்தது என்றார் அதனால்தான் சம்பந்தரைப் போற்றியுரைக்கும் பொழுது சுந்தரரும், "நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்" என்று எடுத்து ஓதினார்.

இங்கு 8, 9, 10, 11 எனும் நான்குகாரணங்களையும் ஓர் இயைபு கொண்டு சேக்கிழார் கூறுவதைக் காணலாம். மூவுலகையும் மேதினி வெல்ல, அதனினும் தென்திசை வெல்ல, அதனினும் தமிழ் வழக்கு வெல்ல, அதனிலும் இசையும் மெய்யறிவும் இவர் தமிழில் நிலைபெருக என்று எடுத்தோதியிருப்பது சிந்தித்து மகிழத் தக்கது. மேலும் இசை பொய்யுணர்வாகிய காமம் முதலிய வற்றிற்கும் இடம்தரும். இதுவே உலகியலில் பெரும்பகுதி. இது கொண்டுதான் சமணர்கள், இசை காமத்தை வளர்க்கும் கருவி என்று இசையை வெறுத்தனர். இசை மெய்யுணர்வையும் வளர்க்கும் சிறந்த கருவி என்பதை நாளும் இன்னிசையால் தமிழ் பரப்ப வந்த ஞானசம்பந்தர் அவதாரம் விளக்கிற்று. இடங்கொள்ளுதல் மட்டுமல்லாமல் இடங்கொள்ளும் நிலைபெருகச் செய்தார் என்பது குறிப்பிடத்தக்க சிறப்பு.

(12) தாளுடையபடைப்பென்னும் தொழில்தன்மை தலைமை பெற - இறைவனின் ஐந்தொழில்களுள் அடிப்படையானது படைத்தல். முடிநிலையானது அருளல். எஞ்ஞான்றும் படைப்பு மேல் தொழில்களுக்கு வாயிலாக அமைவதன்றித் தானே

அருளாகாது. ஆனால் ஞானசம்பந்தரைப் படைத்தலே பிறஉயிர்களுக்கு இறைவனின் அருளாக நிறைந்தது என்பார் படைப்பென்னும் தொழில் தலைமை பெற என்றார்.

(13) நாளுடைய நிகழ்காலம் எதிர்காலம் நவை நீங்க - இந்நாள் வரை நிகழ்ந்து வந்த தீமைகள் பிள்ளையார் திருஅவதாரத்தால் நீக்கப்படுவதன்றி இனி நிகழ்கால, எதிர்காலத் துன்பங்களும் விலகும்படி இவர்தம் திருஅவதாரம் நிகழ்ந்தது என்றார். குலச்சிறையார்,

"சென்ற காலத்தின் பழுதிலாத்திறமும்
இனி எதிர்காலத்தின் சிறப்பும்
இன்று எழுந்தருளப் பெற்றபேறுஇதனால்
எற்றைக்கும் திருவருள் உடையோம்"

என்று எடுத்தோதியதும் ஈண்டு இணைத்துச் சிந்திக்கத்தக்கதாம்.

(14) வாளுடையமணி வீதி வளர்காழிப் பதி வாழ-காழிப்பதி ஊழிக்காலத்துடன் அன்றி இனியும் மேன்மேலும் சிறந்து வாழ என்றருளினர் சேக்கிழார்.

(15) ஆளுடைய திருத்தோணிஅமர்ந்த பிரான் அருள்பெருக-பெருமானது அருள் பிள்ளையாரின் மூலம் குருவருளாகிப் பெருகிட என்றார்.

(16) பவம் பெருக்கும் பரசமயப் புரைநெறிகள் பாழ்பட-ஞானசம்பந்தரின் திருஅவதாரம் 'பரசமயக் கோள் நீக்குதல்' என்பதனை முடித்துக் காட்டுவாராய், "பரசமயத் தருக்கு ஒழிய" என்று தொடங்கியதோடு பொய்ம்மையைப்பெருக்கும் பரசமயப் புரைநெறிகள் பாழ்பட்டுப்போக "சராசரங்களெல்லாம், சிவம் பெருக்கும் பிள்ளையார் திருஅவதாரம் செய்தார்" என்று அருளினர் சேக்கிழார் பெருமான்.

இங்ஙனம் நமது புண்ணியக் கண்ணாகிய ஞானக்குழந்தை அவதரித்த காரணங்களைச் சேக்கிழார் சுவாமிகள் நிரல்பட அருளியுள்ளார். களப்பிரரும், பல்லவரும் ஆட்சி செய்த இருண்ட காலத்தமிழகத்தில் ஒளிவளர் விளக்காகத் திகழ்ந்த காரைக்காலம்மையார், திருமூலர் இவர்கட்கெல்லாம் வழங்காத ஆசிரியத் தலைமையைப் பெருமான் திருஞானசம்பந்தருக்குத்தான் வழங்கினார். ஆசாரியருக்குரிய முதன்மை, சீடர்கட்கு இறைவனைக் காட்ட

வேண்டும். அதனை இவர் வாழ்வில் 'பெம்மான் இவன் அன்றே' என்று காட்டியமையால் உணரலாம். மேலும் ஆசாரியருக்கு உரிய அங்கங்களாகிய முத்துச்சிவிகை,முத்துக்குடை, திருச்சின்னம் முதலியன இவருக்குத்தான் வழங்கப்பெற்றன. இவற்றாலும் சைவ ஆசாரியர் ஞானசம்பந்தரே என்பதைத் தெளியலாம். மேலும் சமீபகாலத்தில் வாழ்ந்த தூயதமிழில் எழுதியும் பேசியும் வந்த மறைமலையடிகளும் அவர்தம் ஆசிரியர் வைதிகசைவசண்ட மாருதம் சூளை திரு. சோமசுந்தரநாயகரும் ஞானசம்பந்தரையே குருவாகவும் உபாசனா மூர்த்தியாகவும் கொண்டமையாலும் தெளியலாம். இந்நிலைமை உலகியலில் வைத்துப்பார்த்தால் சுதந்திரப் போராட்டத்தில் கோபாலகிருஷ்ணகோகலே, பால கங்காதரதிலகர் போன்றோர் தகுதிமிக்க தலைவர்களே ஆயினும், இறைவன் திருவருள் காந்தியடிகளையே மகாத்மாவாக - தேசப் பிதாவாக உலகிற்கு வழங்கியதுடன் ஒப்பிட்டு மகிழலாம். "ஆட்பாலவருக்கு அருளும் வண்ணமும் ஆதிமாண்பும், கேட்பான் புகில் அளவில்லை கிளக்க வேண்டா" என்ற ஞானசம்பந்தர் வாக்கே இவ்வருள் நிலைக்கு விளக்கந்தருவதும் கண்டு மகிழலாம்.

இத்தகைய பிள்ளையார் அவதரித்த இப்புண்ணிய மண்ணில் ஆண்டுதோறும் ஞானப்பால் உண்ட ஐதிக நிகழ்ச்சியினைச் சிறப்பாகக் கொண்டாடுவதும் அதனை ஒட்டித் திருமுறைகளை ஓதுகின்ற பணிபுரியும் ஓதுவாமூர்த்தி ஒருவருக்குத் "திருமுறைக் கலாநிதி" என்னும் பட்டமும் 1001 பொற்காசுகளும் வழங்கி ஞானசம்பந்தரின் சிறப்பு நாளில் இறைவனின் ஆசிக்கவசமாகப் பொன்னுடை போர்த்திச் சிறப்புச் செய்வதும் தொடர்ந்து நிகழ்ந்து வருவன. அவ்வகையில் இவ்வாண்டு தருமை ஆதீன ஓதுவாமூர்த்தி திரு. சோ. உத்தராபதி தேசிகருக்கு அச்சிறப்புக்கள் திருஞானசம்பந்தரின் திருமுன்னிலையில் நிகழ்த்தப் பெறுகின்றன. இன்றுதொடங்கி ஆறு நாட்கள் இங்குச்சிறப்பான சிவஞான உரை நிகழ்ச்சிகளும் இன்று முதல் பத்து நாட்கள் இறைவழிபாட்டு நிகழ்ச்சிகளும் நடைபெற இருக்கின்றன.

இப்புண்ணியத் திருநாட்களில் அன்பர்கள் அனைவரும் வழி பாட்டில் கலந்து கொண்டு எல்லா நலன்களும் பெற்று நீடு வாழ ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

சைவசமயமும் பரிணாமக்கொள்கையும்

திரு. சி. முருகேசன், எம். எஸ்சி., எம். பில்.,

புதுக்கோட்டை.

சமயம் விஞ்ஞான முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ளது என்பது சிலரது குற்றச்சாட்டு. புதுமைக் கருத்துக்களை சமயம் புறக்கணிக்கிறது என்பது இவர்களது எண்ணம். சைவசமயத்தைப் பொருத்தமட்டில் இது ஒரு பொருந்தாத கொள்கையாகும். சைவம் விஞ்ஞானக் கருத்துக்களை தன்னிடத்திலே கொண்டது. 19 ஆம் நூற்றுண்டில் சார்லஸ் டார்வின் தனது பரிணாமக் கொள்கையை வெளியிட்டபோது, அது சமயத்தை மாசுபடுத்துவதாகக் கூறி அவர்மீது களங்கம் சுமத்தப்பட்டது நாம் அறிந்த ஒன்றே. உண்மையை எடுத்தியம்பிய ஓர் அறிஞன் சமயவாதிகளால் தூற்றப் பட்டான் என்பது எத்துணை வேதனைக்குரியது? நமது சைவசமயம் பரிணாமத்தைப்பற்றி என்ன கொள்கையைக் கொண்டுள்ளது என்பதைச் சற்றே காண்போம்.

டார்வின் தனது பரிணாமக் கோட்பாட்டை வெளியிடுவதற்குப் பல நூற்றுண்டுகளுக்கு முன்பே அதை வெளியிட்டு, ஆதாரங் களுடன் நிறுவி, அதே நேரத்தில் பரிணாமக்கொள்கை இறை உண்மைக்குப் புறம்பானதல்ல என்பதை உலகினர்க்கு உணர்த்திய பெருமை சைவ சமயத்திற்கு மட்டுமே உரியது. ஒன்பதாம் நூற்றுண்டில் வாழ்ந்த மாணிக்கவாசகர் தமது திருவாசகத்தில்

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய், மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி, முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்"

என்று கூறுகிறார். புல், பூண்டு, கல்லினுள் இருக்கும் தேரை, பாம்பு, பறவை, மனிதன் என்று ஒரே ஆன்மா படிப்படியாகப் பரிணமித்துப் பின் இறைவன் திருவடியை அடைகிறது என்பதை இதைவிட விளக்கமாக யாரால் கூறமுடியும்?

சைவசித்தாந்தத்தில் பரிணமக்கொள்கை :

சைவ சித்தாந்தத்தின்படி, மும்மலங்களில் ஒன்ருன 'மாயை' தான் உலகியல் பொருள்களும், மனித உடல்களும் தோன்றுவதற்கான மூலப்பொருள். அவன், அவள், அது என்றமூன்றும் மாயையிலிருந்து தோன்றி மாயையிலேயே ஒடுங்குகின்றன. மாயை ஒரு சடப்பொருள். அது தானுக எதையும் தோற்றுவிக்க இயலாது' இறைவன் ஆன்மாவின் பொருட்டு மாயையைத் தொழில்படச் செய்கிருன். ஆணவமல மறைப்பால் அறிவுவிளங்காது, தன் தலைவனையும் உணராது, அல்லற்படும் ஆன்மாவுக்கு இறைவன் தன் பெருங்கருணைத் திறத்தால், மாயையை இயங்கச் செய்து, தனுகரண புவனபோகங்களை அளிக்கிருன்.

''நித்தமாய் அருவாய்ஏக நிலையதாம் உலகத்திற்கோர்
வித்துமாய் அசித்தாய் எங்கும் வியாபியாய் விமலனுக்கோர்
சத்தியாய் புவனபோகந் தனுகரணமும் உயிர்க்காய்
வைத்ததோர் மலமாய்மாயை மயக்கமும் செய்யும்அன்றே''

என்பது அருள் நந்தி சிவாசாரியரின் வாக்கு.

மாயை என்னும் பதத்தை 'மா', 'யா' எனப்பிரிக்கலாம். 'மா' என்ருல் ஒடுங்குதல் என்று பொருள். 'யா' என்பது தோற்றம். எனவே மாயை என்றசொல், உலகப்பொருள்கள் யாவும் இதனிடமிருந்து தோன்றி, இதனிடத்திலேயே ஒடுங்குகின்றன என்பதைக் குறிக்கும்.

மாயை ஒன்றே எனினும் அதனை சுத்தமாயை, அசுத்தமாயை என இரண்டாகப் பிரிப்பர் சித்தாந்திகள். சுத்தமாயை-குண்டலினி பிந்து, குடிலை, மாமாயா, சிவசக்தி என்று பலபெயர்களில் அழைக்கப்படும். அசுத்தமாயை - பிரகிருதிமாயை, மோஹினி, அதோமாயை எனப் பலபெயர்களால் சுட்டப்படும். இந்த இரு மாயைகளிலிருந்தும் உற்பத்தியாகும் பொருள்களைத் தத்துவங்கள் எனக் குறிப்பிடுவது வழக்கு. சுத்தமாயையிலிருந்து தோன்றும், தத்துவங்கள் சுத்ததத்துவங்கள். முதலில்தோன்றும் சுத்ததத்துவம். 'நாதம்'. இதைச் 'சிவதத்துவம்' என்றும் கூறுவதுண்டு. நாதத்திலிருந்து பிறப்பது 'பிந்து' இது 'சக்திதத்துவம்' எனப்படும். பிந்துவிலிருந்து 'சதாக்கியம்' (சதாசிவதத்துவம்) தோன்றுகின்றது. சதாக்கியத்திலிருந்து மாகேசுவர தத்துவம் உற்பத்தியாகும். அதிலிருந்து சுத்தவித்தை தோன்றும். இதனைப் பின்வரும் சிவப்பிரகாச நூற்பாவால் அறியலாம்.

" உன்னல் அரும் பரசிவன் தன் அருளாலே நாதம்
உதிக்கும் மிகும் குடிலேதனில் விந்துவரும் நாதம்
தன்னில் அதில் ஒளிவளரும் சதாசிவராம் அவரில்
தயங்க வரும் ஈசர்வித்தை தனை அளிப்பர் அதனால்
மன்னும் அவர் இவ் வகைஐவர் வாய்மையினால் முன்னே
வந்திடும் என்றுரை செய்த விந்துவழா வகையே
முன் உதவும் சூக்குமாதி ஒருநான்கும் என்று
மொழிந்திடுவர் அருங்கலேகள் முதிர்ந்துளோரே "

அசுத்த மாயையிலிருந்து காலம், நியதி, கலை என்பன தோன்றுகின்றன. கலையினின்றும் வித்யாதத்துவமும், அராகதத்துவமும் பிறக்கின்றன. இவை இரண்டையும் சேர்த்து புருடதத்துவம் என்று கூறுவதுண்டு. கலையிலிருந்து தோன்றும் மற்றுமொரு தத்துவம் "மூலப்பிரகிருதி" இதில் சத்துவம், இராஜதம், தாமசம் என்று முக்குணங்கள் காணப்படுகின்றன. பிரகிருதியும், குணங்களும் சேர்ந்து சித்தம், புத்தி இரண்டும் உண்டாகக் காரணமாகின்றன. புத்தியிலிருந்து அகங்காரம் வெளிப்படுகிறது. அகங்காரம் 'தைஜசம்', 'வைகரி', 'பூதாதி', என மூன்று வகைப்படும். தைஜச அகங்காரம் மனம். மற்றும் ஐம்பொறிகளாகிய மெய், நாக்கு, கண், மூக்கு, காது ஆகியவற்றைத் தோற்றுவிக்கும். இவைகளே ஞானேந்திரியங்கள். வைகரியிலிருந்து கர்மேந்திரியங்களான வாய், கை, கால், எருவாய், கருவாய் ஆகியவை தோன்றுகின்றன. பூதாதியிலிருந்து தன்மாத்திரைகளான சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகியவை பரிணமக்கின்றன. தன்மாத்திரைகளிலிருந்து தான் பஞ்சபூதங்களான நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், பூமி – ஆகியவை தோன்றுகின்றன. இவ்வாறாக மாயை மொத்தம் 36 தத்துவங்களைத் தோற்றுவிக்கிறது.

(தொடரும்

திருக்குறள் இசைப் பாடல்

[இல்வாழ்க்கை]

கவிஞர் காராளன்

இல்லறம் என்பதே நல்லறமாம்—வாழ்வில்
எவ்வகையானும் ஏற்கும் அறங்களில் (இல்லறம்)

அன்பே இல்லறப் பண்பாகும்—நல்
அறமே அதனது பயனாகும்—வாழ்வில் (இல்லறம்)

பழியஞ்சிப் பொருளெலாம் நாடவைக்கும்—அதைப்
பகிர்ந்துண்ணும் இன்பத்தைச் சேரவைக்கும்—அற
வழிநின்று துறவுக்கு மேலிருக்கும்—இங்கு
வாழ்வாங்கு வாழ்வாரை வான்அமைக்கும்—வாழ்வில்
(இல்லறம்)

புலன்மிக்கு வறுமைக்கு நலன்கொடுக்கும்—தென்
புலத்தார்க்கும் இறைவர்க்கும் மலர் தொடுக்கும்—தன்
உறவுக்கும் விருந்துக்கும் வளம் கொடுக்கும்—தனக்கு
உற்றதுணை யார்வரினும் கரம்கொடுக்கும்—வாழ்வில்
(இல்லறம்)

கல்வியும் அறமும் பயில்பவர்க்கும்—செய்
கருமத்தைக் கடவுளாய் நினைபவர்க்கும்—இங்குப்
பல்வேறு தருமங்கள் முயல்பவர்க்கும்—தலைமைப்
பாங்களிக்கும் அவர்க்கே பரிசளிக்கும்—வாழ்வில்
(இல்லறம்)

கட்டுரை எண். 95

அபிராமி அந்தாதி

டாக்டர் புலவர் திரு. K. சந்தானராமன் M.A. D., Lit., Ph. D., D. P. P. A., D, U. N., I. U.
பருத்தியூர்.

நன்றே வருகினும், தீதே விளைகினும் நான் அறிவது
ஒன்றேயும் இல்லை; உனக்கே பரம்; எனக்கு உள்ள வெல்லாம்
அன்றே உனதென்று அளித்து விட்டேன்; அழியாத குணக்
குன்றே! அருட் கடலே! இமவான் பெற்ற கோமளமே!

அ. அழியாத குணக் குன்றே!

(1) என்றும் அழிவில்லாத குணக்குன்று என அபிராமியை அழைக்கிருர்.

(2) அனைத்தையும் கடந்து நிற்கும் பராசக்தியாகிய அன்னை 'சகுணப்ரம்ம' மாக வரும் பொழுது சிறப்பு மிக்க குணங்களில் குன்றெனத் திகழ்கிருள்.

"ஷாட்குண்ய பரிபூரிதா"-"அறுவகைகுணங்கள் நிறைந்தவள்" என சகஸ்ரநாமம் புகழ்கிறது. ஆற்றல், ஈச்வரத்தன்மை, செல்வம், புகழ், ஞானம், வைராக்யம் ஆகியவை அவ்வறுங் குணங்கள் என்பர். 'எண்குணத்தான்' என்பார் வள்ளுவர். அவற்றினுல் நிறைந்து குன்றெனத் திகழ்பவள் அன்னை.

(3) நற்குணங்களில் குன்றெனத் திகழும் ஏனையோர் காலத்தால் அழிவர். அன்னை காலத்தையும் கடந்து நிற்பவள். ஆதலால் 'அழியாத குணக் குன்று' என்ருர். அக்குணங்கள் அவளிடம் என்றும் அழியாமல் நிற்கின்றன எனினும் ஆம்.

ஆ. அருட் கடலே !

(1) பேரருளால் கடலெனத் திகழ்பவள்.

(2) கடல்போல் வற்றாத, எல்லையற்ற, ஆழங்காண வியலாத கருணை கொண்டிருப்பதால் 'அருட் கடல்' என்றார்.

'கருணா ரஸ ஸாகரா' - 'கருணை என்னும் ரஸம் நிறைந்த கடலையுடையவள்' என சகஸ்ரநாமமும் போற்றுகிறது.

இ. இமவான் பெற்ற கோமளமே!

(1) மலையரசனான இமவான் பெற்ற மென்மைத் தன்மையுடைய பெண்ணே! என்கிறார்.

(2) குணக்குன்று என்பதற்கும் அருட் கடல் என்பதற்கும் ஏற்ப அவள் எடுத்த பார்வதி என்ற வடிவத்தை நினைவு படுத்தினார். தனது கடலொத்த கருணையால் கல்லான இமவானுக்கும் பெண்ணாகத் தோன்றி, தாட்சாயணி போலன்றி, குணத்தால் மிக உயர்ந்த பார்வதியைக் கோமளம் என்றார்.

குணத்தின் உயர்வு, கருணையின் ஆழம், இமவானுக்கு அருள் செய்த மென்மை ஆகியவற்றை முறையே குன்று, கடல், கோமளம் ஆகிய சொற்கள் உணர்த்தின.

ஈ. எனக்கு உள்ள வெல்லாம் அன்றே உனதென்று அளித்து விட்டேன்.

(1) எனக்கென உடைமையாய் இருக்கும் உடல், பொருள் ஆவி என்ற மூன்றினையும் உன்னைச் சரண் புகுந்த அன்றே அல்லது நீ உனது வாசக் கமலம் தலை மேல் வைத்து ஆண்டபொழுதே உன்னுடைய தென்று சமர்ப்பித்துவிட்டேன்.

(2) கடவுள், தன்னை ஆண்டு கொண்ட பின் தனக்கென – தன் செயலென ஏதுமின்றி, அனைத்தும் அவனருட் படியே நிகழும். மனக் கலக்கம் ஏதுமின்றி இருக்கும் இந்நிலையினை 'சர்வசங்க பரித்யாகம்' என்றும், பூரண ஆத்ம சமர்ப்பணம் என்றும் வடநூலார் போற்றுவர். 'Religious Retirement' என்பர் ஆங்கிலத்தில்.

உ. நன்றே வருகினும் தீதே விளைகினும் நான் அறிவது ஒன்றேயும் இல்லை; உனக்கேபரம்.

(1) உன்னிடத்தில் அனைத்தையும் அளித்துவிட்டதால் என்னை நாடி நல்லனவே வந்திடினும், தீமையே விளைந்திடினும் அவை குறித்து அடியேன் நினைப்பது ஏதும் இல்லை. அவை நின் செயலே யாகும்.

(2) தீதும் நன்றும் பிறர்தர வாரா. எனினும் அடியார் அனைத்தையும் இறைவனிடம் விட்டு விடுவதால் அனைத்துக்கும் அவனே பொறுப்பாகிறான். நன்மை ஏற்படின் அது இறைவனின் கருணையால் வந்தது என்றும், தீமை நேர்ந்தால் அது தனது முன் வினையால் விளைந்தது எனவும் கருதுவது அடியார் இயல்பு. அவ்வகையில் பட்டர் "நன்றே வருகினும் தீதே விளைகினும்" என்றுரைத்தார்.

(3) பக்குவப்பட்ட மனத்தால் நன்மை தீமைகளைச் சமமெனக் கருதும் நிலையினை "இருவினை ஒப்பு" என்பர் சித்தாந்தச் சான்றோர்கள். "எல்லாம்விடுத்து என்னையே சரண்புகுக! அனைத்து இடர்களிலிருந்து விடுவிப்பது என் பொறுப்பு" என்றார் கீதையில் கண்ணன்.

(4) "நன்றே வந்தாலும், தீதே விளைந்தாலும் அவற்றுக்குக் காரணமானவன் நானல்ல. அனைத்துக்கும் நீயே பொறுப்பு" என்று உணர்த்த "உனக்கே பரம்" என்றார். எதற்கும் கவலையற்ற நிலையில் இருப்பவரை "அவர் 'பரப் பிரம்மமே' என்று இருக்கிறார்" என்பது வழக்கு. அவ்வகையில் பொருள்தருவதே "உனக்கே பரம்" என்ற சொற்றொடர்.

(5) அன்றே என்றன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய்! என்னை ஆட்
கொண்ட போதே கொண்டிலையோ?
இன்று ஓர் இடையூறு எனக்கு உண்டோ?
எண்தோள் முக்கண் எம்மானே!
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே?

அபிராமி அந்தாதிப் பாடல் இத்திருவாசகத்தை அமைப்பாலும் கருத்தாலும் ஒத்திருக்கிறது.

(6) இல்லது முள்ளது நீயறிவாய்! உலகே! வினைதான்
வல்லது செய்யினும் மற்றது நீ உன் மனம் பொறுத்து
நல்லது செய்வது உனக்கே புகழ்! தொண்டன் நான் [உன் சித்தம்
அல்லது பிள்ளை அறியேன் உரைத்தது என்ன ஆவதுவே?

— உலகம்மை கலித்துறை அந்தாதி

(7) " என்றன் உடல் பொருள் யாவுமே நீயென
இருப்போர்க்கு இரங்காவிடில்
என்னையும் நகைத்து உன்னையும் நகைப்பதற்கு
இடன் அல்லவோ? "

இவ்வாறு முருகனை வினவுகிறது சுவாமிமலை நவரத்தினமாலை.

(8) இறைவன் கடல், பக்தன் அலை. கடலின் செயல்வேறு அலையின் செயல்வேறு அன்று. தாயின் அணைப்பில் கவலையற்று உறங்கும் சேய்போல் பக்தன் சரணாகதியில் இன்பம் காண்கிறான். இவ்வாறு விளக்குகிறார் சுவாமி சித்பவானந்தர் தனது கீதை விளக்கவுரையில்.

நன்றும் தீதும் ஒன்றெனக் கருதும் மனப் பக்குவம் எய்துதல் இப்பாடலின் பாராயண பலன் ஆகும்.

(தொடரும்)

கடிதம்

தெ. முருகசாமி, எம். ஏ., பி. ஓ. எல்., காரைக்குடி - 1.
முதல்வர்,
இராமசாமி தமிழ்க் கல்லூரி. 13—4—88

திருவருள், ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் பொன்னார் திருவடிகட்குப் பணிவான வணக்கங்கள்.

எப்பிரல் மாதம் 9, 10 தேதிகளில் நடைபெற்ற திருக்கோயில், சமயம், கலை, சமுதாயம் பற்றிய கருத்தரங்கில் சுவாமிகள் எழுந்தருளி, தலைமைப் பேருரையருளிய திருவருளைக் கண்ணாரக் கண்டும் காதாரக் கேட்டும் மகிழ்ந்தேன். மகாசந்நிதானங்களைக் காணும் பேறு பெரும் பேறாக இருந்தது.

சுவாமிகள் அருளிய தலைமை உரை மிகச் சிறப்பாக இருந்தது. கலைஞானம், மெய்ஞ்ஞானம் பற்றிய விளக்கங்கள் அருமையாக இருந்தன. "சமூக வளர்ச்சி என்பது பண்பாட்டு வளர்ச்சியோடு இணைந்ததாகவே அமைய வேண்டும். பொருளாதார வளர்ச்சியில் சிறந்து, தனிமனித ஒழுக்கமும் சமூகப் பண்பாடும் குறையுமானால் அதனை உண்மையான வளர்ச்சியாக அறிஞர் உலகம் ஏற்காது" எனக் கூறியருளியவை பொன்னே போல் பொறிக்கத் தக்கவை.

மேலை நாட்டுத் தத்துவ மேதைகள்
(Western Philosophers)

சுவாமி வீரபாகு

(மலர் 47. இதழ் 5, பக்கம் 251 இன் தொடர்ச்சி.)

2. பிளேட்டோ (Plato) - தொடர்ச்சி (7)

(கி. மு. 427-347)

உடலும் உய்வும் :

மானுட வாழ்வு நிலையான ஒன்றல்ல. மரணம் என்பது எல்லோரும் மண்ணுலக வாழ்வில் அனுபவபூர்வமாகக் காண உள்ளது. உடல், மரணம் எய்தியதும் உய்வும் (Living) ஓர் எல்லையில் முடிவெய்துகிறது. உடல் அழிந்தவுடன் உய்வும் முடிவடைகிறது என்ற எண்ணம் பாரெங்கும் பரவலாக நம்பப்பட்டது. பின் மனித சிந்தனை வளர வளர, உடல் அழிந்த பின்னும் உய்வு-வாழ்வு ஏதோ ஓர் உருவில் தொடர்கிறது என்ற கருத்துத் தோன்றத் தொடங்கியது. உடலைக் கடந்த நிலையில் ஆன்மா (Soul) என்ற ஒன்றுண்டு; அஃது இறப்பிற்குப்பின்னும் ஓர் உய்வைக்கொள்கிறது என்ற எண்ணம் வளரத்தொடங்கியது. ஏன்? மனிதனுக்கு மட்டும் தான் ஆன்மா உண்டா? மரங்கள், நதிகள், - உலகிலுள்ள ஒவ்வொரு உயிரினத்திற்கும் ஆன்மா அல்லது சக்தி (Soul or Spirit) ஒன்று உண்டு என அறிவுத்துறையில் வளர்ச்சியுற்ற மக்கள் ஆழக் கருதத்தொடங்கினர். தத்துவஞானம் வளரத்தொடங்கிய நிலையில் உடலைப் பாதிக்கும் எதுவும் ஆன்மாவை ஒரு சிறிதும் பாதிக்காது என்ற கருத்து தலை எடுத்து நின்றது. (It was an early belief that' that affected the body, had little or no effect upon the soul) இவ்விதம் ஏற்பட்ட அழுத்தமான நம்பிக்கை மானுட ஆன்மா, மானுட உடலிலிருந்து வேறுபட்டதுஎன்றும், இந்த ஆன்மாவானது அழியா நிலை (Immortality) கொண்டது என்றும், இறப்பு உடலை அழித்த பின்னும் இவ்வான்மா ஒருவித உய்வைக் கொண்டிருக்கிறது என்றும், தத்துவார்த்த நம்பிக்கையை, ஆன்மீகத்துறையில் வளர்ச்சியுற்ற அறிவு மிக்க மக்கள் சமுதாயம் சிந்திக்க நேர்ந்தது. இந்த நம்பிக்கையில் இந்து சமுதாயத்தைப் போலவே, கிரேக்க சமுதாயமும் முன்னணியில் நின்றது எனலாம்.

அழியாநிலைக் கோட்பாடு :

பிளேட்டோ தம் "டைமீஸ்" (Timeaus) என்றநூலில் விரிவாக ஆன்மாவின் அழியாநிலைக் கோட்பாட்டினை (The immortality of the soul) விவரிக்கின்றார். உலக ஆன்மா (The soul of the world) என்றும், மானுட உயிர்களின் ஆன்மா (The soul of human being) எனவும் பிரித்துப் பேசுகிறார் பிளேட்டோ. புராணமுறை வாசகங்களில் (Mythological terms) பிளேட்டோ இதனை விரிவுற விளக்குகிறார். சென்ற கட்டுரையில் குறிப்பிட்டது போல, பிளேட்டோ உலகச்சிற்பி "டிமியர்ஜ்" (Demiurge) பற்றிக்குறிப்பிடுகிறார். அவர் உலகுக்கு ஓர் ஆன்மாவை ஊட்டிப்படைக்கிறார் என்றும், அந்த ஆன்ம சக்தியே உலகத்தை இயக்கவும், அழகுபட ஆக்கவும் ஐக்கியப்பாட்டோடு அமையவும் காரணமாகிறது என்பதும் பிளேட்டோவின் விளக்கம். உலக ஆன்மா என்பது கருத்துக்கள் உலகிற்கும் (World of ideas) நாம் அறிந்து அனுபவிக்கும் பொருள் உலகிற்கும் (Material world) இடைப்பட்டதாகும் என்கிறார் பிளேட்டோ. இஃது ஓர்ஒப்பற்ற சட்ட ஒழுங்குகளின்படி நடைபெறக் கூடியது. அதன் இயல்பிற்கு ஏற்ப இச்சட்ட ஒழுங்குகள் அமைந்துள்ளன. இதுவே எல்லாச் சட்ட முறைகட்கும் காரணமானதாகும். இதனால்தான் ஐக்கியபாடு, முறை, வாழ்க்கைநிலை, மனம், அறிவுடைமை ஆகிய அத்தனையும் அமைகின்றன. (It acts according to definite laws, order of life, mind and knowledge.)

படைப்புச் சிற்பி :

"டிமியர்ஜ்"என்ற அககடவுள் தன்மைபொருந்திய காருண்யம் மிக்க சிற்பிதான் கிரகங்களும், தனிப்பட்ட ஆன்மாக்களும் இயங்க வகுத்துப் படைத்தவர். ஆனால் ஒன்று. பிளேட்டோவின் போதனையின்படி தனிப்பட்ட ஆன்மாக்கள் அத்தனையும் அநாதி. அவைகள் உடல்தரித்து உய்வுபெறும் முன்னேயே இருந்தன. (These individual souls, Plato taught, are eternal, having existed even before they came into bodies) ஆன்மாக்கள், தம்முன்வாழ்விலே (Pre-existence) நிறைவுமிக்க கருத்துக்கள் (Realm of perfect ideas) உலகிலேயே தூய கருத்துக்களை அறிந்திருந்தன. ஆனால் உடலுக்குள்ளே புக்கபின் ஆன்மாக்கள் தாம் முன் புரிந்து அறிந்தவற்றை மறந்துவிட்டன. ஆன்மாக்கள் உடல் புகுந்துவிட்ட காரணத்தால் தரத்தால் தாழ்வுற்றன. உடல் வாசத்தால் உருமாறிக் கேடு உற்றன. உடல்தொடர்பே இதற்குக் காரணமாக அமைந்தது.

ஆன்மாவின் குறிக்கோள் :

இந்த நிலையிலிருக்கும் ஆன்மா என்ன குறிக்கோளைக் கொள்கிறது? ஆன்மாவின் குறிக்கோள் யாக்கையிலே இருந்து விடுதலை

அடைதலே - அப்படி விடுதலையடைந்து உண்மை நிலையை உணர்ந்து அறிவதே நோக்கமாகும் - குறிக்கோள் ஆகும். இன்னொன்று. பல விதமான அனுபவங்களை அடையும் போது, ஆன்மா, தான் முன் நிலையிலே அறிந்திருந்த தூய கருத்துக்களை (Pure ideas) நினைந்து அறிய வாய்ப்பைப் பெறுகிறது. எனவே ஞானம் என்பது ஆன்மாவுக்குப் புதியதோர் அனுபவம் அல்ல; ஆனால் இஃதொரு திரும்ப நினையும் ஞாபகமே (Reeall) ஆகும். எனவே ஆன்மா உடல் உறவு ஏற்பட்டபின் அவற்றை மறந்து விட்டது - அவ்வளவு தான். (Knowledge, then, is not a new thing for the soul, but is simply a recall of what has been forgotten because of the body)

மானுட ஆன்மா (Human soul) சுத்த அறிவின் (Pure reason) ஓர் அம்சமே ஆகும். உடல் சம்பந்தத்தால் ஆன்மா நிலைதடுமாறிற்று. ஆன்மா உடம்புள் வருதற்கு முன்னமேயும் இருந்தது தான். ஆன்மா தன்னை உடலாகிய சிறைக் கூடத்திலிருந்து விடுவித்துக் கொள்ள இயலும். உடல் அழிந்த பின்னும் அதற்கு உய்வு உண்டு என்பது உறுதி. ஆகையால் ஆன்மா அழிவற்றது என்ற கோட்பாட்டைப் பிளேட்டோ மேற்கொண்டார். மேற்கொண்டு எல்லா இடங்களிலும் வலியுறுத்தினார்.

ஆன்மா எங்ஙனம் அழியா நிலை கொண்டது?

பிளேட்டோ, மானுட ஆன்மா அழியா நிலையை நிருபிக்கப் பல சான்றுகள் கூறுகிறார். முதலில், ஆன்மா முற்றிலும் மிகவும் தெளிவான எளிமைத் தன்மை (Simple) கொண்டது. அஃது எவ்விதத்திலும் பகுக்க முடியாதது. நாசப் படுத்த இயலாதது. மேலும் ஆன்மா என்பது வாழ்க்கை (Life). வாழ்க்கையாய் இருக்கும் ஆன்மா வாழ்க்கை அல்லாததாக (Not-life) எப்படி ஆக முடியும்? ஆக முடியாது. வாழ்க்கையாய் இருக்கும் ஒன்று வாழ்க்கையாகத் தான் எப்போதும் இருக்க முடியும். வாழ்க்கை அல்லாததாய் இருக்கும் ஒன்று எப்போதும் வாழ்க்கை அல்லாததாய்த் தான் இருக்க முடியும். ஒன்று மற்றொன்றாய் அல்லது இரண்டுமாய் ஆக இயலாது. (சைவசித்தாந்தம் சித்து, அசித்து எனப் பேசுவது ஈண்டுக் கருதத்தக்கது.)

ஆன்மா உடல் பெற்று வாழ விரும்பியது. உடல் பெறுதற்முன் அஃது ஏதேனும் ஒரு நட்சத்திர மண்டலத்தில் இருந்தது. அது, தன் விண்ணுலக வீடு பேற்றினை விட்டு (Heavenly abode) மண்ணுலகம் வந்து உடல் பெற்று வாழத் தொடங்கியது. அந்த நாளிலிருந்து ஆன்மா உடற் சிறையை விட்டு வெளியேற முயல்கிறது. ஆன்மா தன் முயற்சியில் வெற்றியடைந்தால் தன் விண்ணுலகு வீடுபேற்றினைப் பெற்று மீண்டும் தன் நட்சத்திர மண்டலத்தை

நாடிப் போகிறது. பின் மறுபடியும் பழைய நிலையில் கருத்துக்கள் உலகிலே கலந்து நின்று உயர் வாழ்வு எய்துகிறது. ஆன்மா தன் முயற்சியில் தோல்வி கண்டால் அது மேலும் கீழ்நோக்கிக் கீழ் நோக்கி இறங்குகிறது. ஓர் உடலிலிருந்து மற்றோர் உடலும் பெற்றுப் பிறவிச் சக்கரத்தில் உழல்கிறது. ஆன்மாவின் மறுபிறவிக் கோட்பாடு (The transmigration of the soul) தொடர்ந்து இயங்கு கிறது. ஆன்மா, பொருள் நிலையிலிருந்தும் அதன் தீமைகளி லிருந்தும் (From matter and its evils) தன்னை விடுதலை செய்து கொள்ள முடியாமல் போகலாம். அப்படிப் போனாலும் கூட ஆன்மா அழிவினை எய்தாது. அழிவற்ற முன் இருப்பும், ஆன்மாவின் அழியா நிலையும், பிளேட்டோவின் கோட்பாட்டிலே அடிப்படையானது (The eternal pre - existence and immortality of the soul is a fundamantal doctrine of Plato.)

சாக்ரட்டீஸும் சாகாநிலைக் கோட்பாடும் :

சாக்ரட்டீஸ் விஷம் அருந்தி இறப்பதற்கு முன்னும், விஷம் அருந்தி விட்டு மரணமடைவதற்கு இடைப் பட்ட நேரத்திலும் ஓர் அன்பரை விளித்து அவரிடம் சாகாநிலைக் கோட்பாட்டினைப் பற்றிச் சற்று விரிவாக விவரித்துப் பேசுகிறார். சாக்ரட்டீஸ் பற்றிய கட்டுரை யிலும் முன்னர்க் குறிப்பிடப் பட்டுள்ளது. சாக்ரட்டீஸ் பேசுகிறார்: "இவர்கள் என் உடம்பைத்தான் மண்ணில் புதைத்து மறையச் செய்ய இயலும்; ஆன்மாவை அவர்களால் ஒன்றும் அழித்து விட முடியாது. அதுபேரின்பப் பெருவாழ்வினை எய்தும்." என்று அழுத்த மாக ஆன்மாவின் அழியா நிலைத் தன்மையை (immortality) எடுத் துரைக்கிறார் சாக்ரட்டீஸ்

மேலும் சில மேற்கோள்கள் :

ஆன்மாவின் அழியா நிலைக் கோட்பாட்டினைப் பற்றிப் பிளேட்டோ பல இடங்களில் பலபடப் பேசுகிறார். சில மேற்கோள் களைச் சிந்தனைக்கு எடுத்துக் கொள்வோம்.

"ஆன்மா அழிவற்றது. தத்துவ ஞானத்தில் தன்னை ஆழ்த்திக் கொண்டவன் இறப்பினைப் பற்றி இம்மியளவும் கவலைப்பட மாட்டான். அதற்கு எதிராக அவன் அகமகிழ்ச்சியே அடைவான், ஏனெனில் இறப்பிற்குப் பின்னும் இன்னுமொருவாழ்வு அவனுக்குக் காத்திருக்கிறது.

"இறப்பு என்பது ஆன்மாவினையும் ஆக்கையையும் பிரிப்ப தொரு நிகழ்ச்சியாகும். மெய்ப்பொருள் - உலகப்பொருள், கருத் துக்கள் - புலன்நுகர் பொருள்கள், தூய சிந்தனை - புலக்காட்சி; ஆன்மா - உடம்பு இந்த இருமைகளில் முதலில் வருவனவே உண்மையிலேயும் நன்மையிலேயும் முதன்மையானவை.

"தத்துவஞானி உடம்பைப் பற்றிச் சிரத்தை கொள்ளலாகாது. அவனது பொறுப்பெல்லாம் ஆன்மாவைப்பற்றியதே ஆகும். கூடுமானவரை உடலொடு கூடிநில்லாது ஒதுங்கி வாழவேண்டும். ஆன்மாவைப் பற்றியே அதிக கவனம் செலுத்தவேண்டும். உடம்பு அழிவுக்கென்றே உள்ளது. ஆனால் உயிரோ (ஆன்மாவோ) நிலையானது; அழிவற்றது.

"சாக்ரட்டீஸின் கருத்தின்படி ஓர் அழுத்தமான தத்துவ ஞானி உடல் தொடர்பைத் துண்டித்துக்கொண்டு ஆன்ம லயத்தில் ஆனந்தம் காணவேண்டும். தத்துவஞானி ஒருத்தியை மணக்கலாம். அவளுடன் கூடிவாழலாம். மக்களைப் பெறலாம். மண்ணிலே உலவித் திரியலாம். ஆனால் அவன் அவற்றை எல்லாம் மறந்த-மனமுடையவனாய் (Absent – minded) எப்போதும் வாழவேண்டும்; பற்று அற்றவனாகவே நின்று பழகவேண்டும்.

"நாம் வாழும் போது,- உடலோடு ஒன்றி உறவுகொண்டு உலவும் போது,- ஆன்மா, உடல் மாயையில் ஊறிக்கிடக்கும்போது -சுத்த அறிவு (Pure knowledge) தலை எடுக்கவே எடுக்காது. உண்மை.

"மெய்யான தத்துவ ஞானி எக்காலும் உடல் – உறவிலிருந்து ஆன்மாவை விடுவிக்கவே பாடுபடுவான்.

"ஒரே ஒரு நாணயத்தை (Coin) அடைய, தத்துவஞானி எதனையும் தியாகம் செய்யத் தயாராக இருக்கவேண்டும். அச்செம்பொருள் தான் ஞானம் (Wisdom) என்பது. அஃது ஆன்ம சொரூபத்தில் தான் அடைய இயலும். உடலோடு கலந்து ஒன்றிய நிலையில் ஞானம் தோன்றாது. தத்துவம் தலை எடுக்காது.

"தூய்மை என்றால் என்ன? உடம்புக்கு அடிமைப்பட்டிருப்பதையும், அதன் தேவைகளை நிறைவேற்றுவதையும் விட்டு (Freedom from slavery to the body and its needs), விடுதலை பெற்றுத் தனித்து நிற்கும் நிலையே தூய்மை நிலை எனப்படும்.

ஆதார நூல்கள் :

A History of Western Philosophers by Bertrand Russell.
Basic Teachings of Great Philosophers by S. E. Frost
100 Great Thinkers by Jay E. Greene
Living Biographies of Great Philosophers by Thomos &Thomos
Philosophy made Simple by Richard H. Popkin and Avrom Strole
Get to know Philosophy by Hugh Harris.

(தொடரும்)

விகட சக்கர விநாயகர் - விளக்கம்

வித்துவான் திரு. நா. குருசாமி தேசிகர்
மதுரை.

திகழ் + தசக்கரம் - திகடச் சக்கரம் என்று புணர்ந்ததற்கு விதி - வீரசோழியம் - சந்திப்படலம் 18-ஆம் செய்யுள் :-

" நான்கொடு முன்னுளென்ப தாமுயிரின் பின்பு நவ்வருமே
லேன்ற ஞகாரம தாம் பதினேந்திரேடெ டெண்ணிரண்டாய்த்
தோன்று முடற்பின் றகாரம் வரினிரண் டும்மொருகா
லான்ற வைந்தாமுட லாமுன்பி லொன்றுக் கழிவுண்டே "

என்ற இந்த இலக்கண விதியை - கச்சியப்பசிவாசாரியார்க்கு முருகப் பெருமான் உணர்த்தினர். இது அறியத் தக்க செய்தி. இவர் வரலாற்றில் இதனைக் காணலாம்.

இனி, 'விகட சக்கர விநாயகர்' காஞ்சீபுரத்து ஏகாம்பரநாதர் கோயிலில் உள்ளவர். இவர் பெயர்க் காரணத்தைக் கச்சியப்ப சிவாசாரியார் உணர்ந்து 'விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்' என்று விநாயகர் காப்புச் செய்கிருர்.

விகடசக்கர விநாயகர் - பெயர்க் காரணத்தை ஆறுமுகநாவலர் விளக்கி எழுதியுள்ளார். நன்றி உணர்வோடு அதனைச் சிந்திப்பாம்.

தக்கன் யாகம் அழிந்த பொழுது விட்டுணு விடுத்த சக்கரத்தை வீரபத்திரக்கடவுள் பூண்ட வெண்டலை யொன்று கவ்வியது; விட்டுணுவின் பொருட்டு அச்சக்கரத்தைப் பெறக் கருதி அவருடைய சேனுதிபதியாகிய விடுவசேனன் காஞ்சீபுரத்திற்சென்று சிவலிங்கம் தாபித்துப் பூசை செய்தான். வீரபத்திரக் கடவுள் அங்கு எழுந்தருளியபோது விடுவசேனன் அச்சக்கரத்தைத் தரும்படி பிரார்த்திக்க, அவர் 'சக்கரம் நமது கையில் இல்லை; கபாலம் கவ்வியதாயின் எவ்விதத்திலாயினும் அதுவே தரப்பெற்றுக்கொள்' என்ருர்.

விடுவசேனன் காலிரண்டையும் கையிரண்டையும் வளைத்து வாயையும் நாசியையும் கண்களையும் கரித்து அசைத்துப் பற்கள் தோன்ற விகடக்கூத்து ஆடினன். அதனைக் கண்டாரெல்லாரும்

நகைக்க, வெண்டலேயும் நகைத்தது; நகைத்தலும், சக்கரம் அதன் வாயினின்றும் பூமியில் விழ விநாயகக் கடவுள் அதனை விரைந்து கவர்ந்து கொண்டு ஒன்றுமறியாதவர் போன்றிருந்தனர்.

விடுவனேசன் அதுகண்டு, அவர் முன்பும் விகடக் கூத்தாடி வேண்ட, அவர் அச்சக்கரத்தைக் கொடுத்தருளினர். இதனால் விகட சக்கர விநாயகர் என்னும் திருநாமம் உண்டாயிற்று.

பெயர்க்காரணம் அறிந்து போற்றுவது தெளிவு நல்கும்.

கடிதம்

தமிழ்நாடு தேசீய போக்குவரத்துத் தொழிலாளர் சம்மேளனம்

பி. சுப்பிரமணியம்,
ஐ. என். டி. யு. சி.
ஜெனரல் செகரட்டரி

4417, சம்பந்தமூர்த்தி தெரு
மதுரை - 625001
6—4—1988.

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானர் அவர்களின் பாதகமலங்களில் பணிந்து எழுதிய கடிதம்.

நான் ஸ்ரீ மடத்திற்கு வந்து சந்நிதானத்தை முதன்முறையாகத் தரிசிக்கும் பேறு பெற்றது எனது வாழ்நாளில் புனிதமானதாகும். அதற்கும் மேலாகத் தங்களின் அருள் வாக்கியங்களைக் கேட்டு அளவிலாத அருளும் ஆனந்தமும் அடைந்தேன்.

1. பிரணவத்திற்குத் தாங்கள் தந்த விளக்கம் இதுவரை கேட்டிராதது. அற்புதமானது. உண்மையானது. பிரணவத்தின் பொருள் அம்மை அப்பரே என்பதைத் தெளிவாக உணர்ந்தேன்.

2. இறைவன் எப்போது என்ன செய்கிறுன் என்பதும், எந்த வேளைகளில் எந்த சமூகம், ஆலயம் தனி நபர்களுக்கு அருள் புரிகிறுன், ஆட்கொள்கிறுன் என்பதும் நமது அறிவிற்கு அப்பாற்பட்டது என்ற அருளுரை நடைமுறையில் எவ்வளவு பொருத்தமானது என்று உளப்பூர்வமாக உணர்ந்தேன்.

3. வாய்மை பற்றிய அறிவுரை எனது கருத்துக்கு ஓர் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதுபோன்ற அறிவுரைகளும், தங்களின் பரிபூர்ண ஆசியும் அடிக்கடி எனக்குக் கிட்டவேண்டும் எனப் பன்முறை வணங்கி ஆண்டவனின் அருளை வேண்டுகிறேன்.

கட்டுரை எண். 5.

போதமும் சித்தியும்

டாக்டர். திரு. மு. சிவச்சந்திரன்

பொதுவும் சிறப்பும் :

பொருள்கள் பொது, சிறப்பு என இருவகைப்படும் என்பது முன்னரே எண்ணப் பெற்றது. அவை பற்றிய விளக்கங்களை இதுபொழுது சிந்திக்கலாம். ஒரு பொருள், வேற்றுச் சாதிப் பொருளின் தன்மையினையும் தன்சாதிப் பொருளின் தன்மையினையும் விட்டு நீங்கி, தனக்கு மாத்திரமுரிய தன்மையோடு நிற்றல் சிறப்பு ஆம். அங்ஙனம் இன்றி வேற்றுச் சாதிப் பொருளை நீங்கித் தன் சாதிப் பொருளுக்கு ஒப்ப நிற்றல் பொது இயல்பு ஆகும். எடுத்துக்காட்டாகத் 'தேமா' என்னும் சொல்லைப் பார்க்கலாம். தேமா என்றால் தித்திப்பான கனிகளையுடைய மாமரம் என்று பொருள், தேமா என்னுமிடத்துப் பலா, தென்னை போன்றவைகளை நீக்கி நிற்றல் அன்னிய சாதியை நீக்கியதாம். இது பொது இயல்பு மாமரம் எனப் பொதுப்பட நிற்றலை அழித்து இனிப்புடைய இந்த மரம் என நிற்றல் தன் சாதியையும் நீக்கி நிற்றலாம். இங்ஙனம் இருத்தல் சிறப்பு இயல்பு ஆகும். இதுபோல, சித்தாந்த சாத்திர நூல்களில் கூறப்படும் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களுள் பதியாகிய பொருளுக்குப் பசுவும் பாசமும் அன்னிய சாதியாகும். சிவன், சதாசிவன், மகேசுவரன் என்னும் சத்தி பேத வடிவங்கள் மூன்றும் தன் சாதியாகும். பசு, பாசங்களின் இயல்பையும் தன் சத்தியாகிய சத்திபேத வடிவங்களின் இயல்பையும் அகன்றுநிற்றல் சொரூப சிவம் எனப்படும் சிறப்பியல்பாம். பசு, பாசங்களை அழித்துத் தன் சாதியாகிய சத்திபேத வடிவங்களோடு சமமாய் நிற்றல் பொது இயல்பாம்.

இதே போன்று பசுவர்க்கத்துள் சகலருக்குப் பதியும், பாசமும் அன்னிய சாதியாம். விஞ்ஞானகலர், பிரளயாகலர் தன்சாதியாம். பதி, பாசங்களின் இயல்பையும் விஞ்ஞானகலர் பிரளயாகலர்களின் இயல்பையும் நீங்கி நிற்றல் சகலருக்குச் சிறப்பு இயல்பாம். பதி பாசங்களை ஒழித்துத் தன் சாதியாகிய விஞ்ஞானகலர், பிரளயா கலர்களுக்குச் சமமாய்ப் பசு என நிற்றல் பொது இயல்பாம்.

இங்ஙனமே விஞ்ஞானகலர், பிரளயாகலர்களுக்கும் இணைத்துப் பார்க்கலாம்.

மலமாயை கன்மங்களுள் மலத்துக்கு அதாவது ஆணவத்திற்குப் பதியும் பசுவும் அன்னிய சாதியாம். மாயையும் கன்மமும் தன் சாதியாம். பதி, பசுக்களின் இயல்பையும் மாயா கன்மங்களின் இயல்பையும் அகன்று நிற்றல் மலத்தின் சிறப்பு இயல்பு. பதி பசுக்களை ஒழித்துத் தன் சாதியாகிய மாயா கன்மங்களுக்குச் சமானமாய் நிற்றல் ஆணவத்தின் பொது இயல்பாம்.

இங்ஙனமே மாயை, கன்மங்களுக்கும் எண்ணித் துணியலாம்.

இக்கருத்துகளைச் சூசகமாகச் சிவஞான சித்தியார் பாடல் குறிக்கின்றது.

"அன்னிய சாதியும் தன்சாதியும் அகன்று நிற்றல்
தன்னியல்பு; அன்னியத்தைத் தவிர்ந்துதன் சாதிக்குஒத்தல்
துன்னிய பொது இயற்கை; சொன்ன இவ் இரண்டினுள்ளே
மன்னிய பொருள்கள் யாவும்அடங்கிடும் மானமுற்றால்"

என்னும் பாடல் அக்கருத்துக்களை விளக்குகிறது.

காட்சி அளவை, நான்கு பிரிவுபடும் என்பது முன்னர்ச் சிந்திக்கப் பெற்றது. அவை குறித்த விளக்கங்களை இனிக் காண்போம்.

இந்திரியக் காட்சி, மானதக் காட்சி :

உயிரானது, அறிவாகிய சிற்சத்தி, மனம் என்னும் அந்தக் காரணத்தால் செலுத்தப்படும் கண் முதலிய ஞானேந்திரியங்களையும், ஐம்பூதங்களையும், தன்மாத்திரைகளையும், பொருந்தி. ஐயம், விபரீதம் ஆகிய குற்றங்கள் இன்றிப் பொதுப்பட அறிவது இந்திரியக் காட்சியாகும்.

இத்தகைய இந்திரியக்காட்சி அறிவு, புத்திதத்துவத்தின் கண், விபரீதம் ஐயம் ஆகிய மயக்கங்களின்றிப் பெயர், சாதி முதலிய விகற்பத்தோடு, உண்டாகும் அறிவு மானதக் காட்சியாகும். மானதக் காட்சி, மனத்தின் சம்பந்தமுடையது. இந்திரியக் காட்சி, நிர்விகற்பமாய் அதாவது பொதுப்பட அறிதலாகும். மானதக்காட்சி சவிகற்பமாய் அதாவது சிறப்பாய்ப் பிரித்து அறியும் அறிவாம்.

தன்வேதனைக் காட்சி, யோகக் காட்சி :

உயிரானது, அராகம் முதலிய ஐந்து தத்துவங்களாலும் செலுத்தப்பட்டு, அனுபவிக்கப்படும் இன்பதுன்பங்கள் ஆன்மாவின் அறிவிற்குப் பொருளாதல் தன்வேதனைக்காட்சியாம். மலசத்திகளை இயமம், நியமம் முதலிய அட்டாங்க யோக சமாதியால் கெடுத்து,

ஓரிடத்திருந்து பொருந்திய மூவிடத்தும் முக்காலத்தும் பொருள்கள் எல்லாவற்றையும் காண்கின்ற ஞானம் யோகக் காட்சியாகும். மூவிடம்; மேலும் கீழும் நடுவுமாகிய இடம்.

இன்பத்துன்பங்களை இந்திரியங்களின் துணை வேண்டாது அறிவில் காண்டல் தன்வேதனைக்காட்சி. மூவிடத்தும் முக்காலத்தும் உள்ள பொருள்களை அறிதல் யோகக்காட்சியாம்.

இக்காட்சி விளக்கங்களை முறையே சித்தியாரின் கீழ்வரும் இரு பாடல்களும் விளக்குகின்றன.

" உயிரினோடு உணர்வு வாயில் ஒளிவுருவாதி பற்றிச்
செயிரொடு விகற்பம் இன்றித் தெரிவது இந்திரியக்காட்சி;
அயர்வில் இந்திரிய ஞானம் ஐம்புலன் சார்ந்து உயிர்க்கண்
மயர்வற வந்த ஞானம் மானதக் காண்டலாமே"

" அருந்தின்பத் துன்பம் உள்ளத்து அறிவினுக்கு அராகமாதி
தரும்தன்வே தனையாம் காட்சி; சமாதியால் மலங்கள் வாட்டிப்
பொருந்திய தேச கால இயல்பு அகல் பொருள்களெல்லாம்
இருந்துணர் கின்ற ஞானம் யோகநற் காண்டலாமே"

அனுமானங்களின் வகைகள் :

அனுமானம், தன்பொருட்டனுமானம் என்றும் பிறர் பொருட்டு அனுமானம் என்றும் இரண்டு பிரிவுபடும். இயல்பு, காரியம், அநுபலத்தி என்னும் மூன்று ஏதுக்களுள் ஓர் ஏதுவுடைய பொருளை பக்கம், சுபக்கம், விபக்கம் என்னும் மூன்றில் வைத்து உணரும் அறிவு தன் பொருட்டு அனுமானம் ஆம். இவற்றின் அடிப்படையில் பிறர் தெளியச் சொல்லல், பிறர் பொருட்டு அனுமானம் ஆகும். இவற்றில் இயல்பு என்பது இயற்கை; காரியம் என்பது காரணத்தாலாயது; அநுபலத்தி என்பது அறியாமை - இல்லை என்றறியும் அறிவு. எடுத்துக்காட்டாக மா என்னும் சொல் மரமாகிய பொருளை உணர்த்தல் இயல்பு; புகையாகிய காரியம் நெருப்பாகிய காரணத்தை உணர்த்தல் காரியம்; குளிரின்மை பனியின்மையை உணர்த்தல் அநுபலத்தி. அடுத்துப் பக்கம்என்பது ஐயுற்றுத் துணியப்படுவதாகிய பொருள் இருக்கும் இடமாம். சுபக்கமாவது, துணியப்படுவதாகிய பொருளுக்கு உதாரணமாகக் காட்டப்படும் பொருள் இருக்கும் இடம் ஆகும். விபக்கம் என்பது அப்பொருள் இல்லாத இடம் ஆகும். எடுத்துக்காட்டாகத் துணியப்படுபொருள் நெருப்பு எனில், அது இருக்கும் இடம் மலை; எனவே மலை என்பது பக்கம்; இப்பொருள் உதாரணமாகும் இடம் இடம் அடுக்களை என்பது சுபக்கம் ; இது இல்லாத இடம் தடாகம் விபக்கம் ஆகும்.

இங்ஙனம் பிறர் பொருட்டு அனுமானத்தால் போதிக்கும் சொல், உடம்பாட்டு வாக்கியம், எதிர்மறை வாக்கியம் என இரண்டு வகைப்படும்.

புகையுள்ள இடத்திலே நெருப்புண்டு அடுக்களை போல என்று கூறும் சொல் உடம்பாட்டுச் சொல்லாம். விளக்கமாகிய நெருப்பில்லாத விடத்துப் புகையில்லையாம், மலரும் அரும்பும் நிறைந்த தாமரைத் தடாகத்தைப் போல என்று கூறும் சொல் எதிர்மறைச் சொல்லாம்.

இந்த இரண்டு வகைச் சொற்களையும் தொகை பொருந்திய மேற்கோளும், ஏதுவும், திருட்டாந்தமும், உபநயமும், நிகமனமும் என்னும் ஐவகை உறுப்புக்களோடும் இணங்க வைத்துத் தெளியக் கூறுவாரும் உளர்.

இக்கருத்துக்களைக் கீழ்வரும் சித்தியாரின் நான்கு பாடல்கள் விளக்கிக் கூறும்.

" பக்கம் மூன்றின் மூன்றேது வுடைய பொருளைப் பார்த்துரைத்
தக்க ஞானம் தன்பொருட்டாம்; பிறர் தம்பொருட்டு அனுமானம்
தொக்கஇவற்ருல் பிறந்தெளியச் சொல்லலாகும் அச்சொல்லும்
மிக்க அன்னுவயத்திஞேடு எதிரேகச் சொல்என இரண்டாம் "

" ஏது மூன்ரும் இயல்பு காரியத்தோடு அநுபலத்தியினது
ஓதின் இயல்பு மாமரத்தைக் காட்டல்; உறுகாரியம் புகைதன்
ஆதியாய அனல் காட்டலாகும்; அநுபவத்தியது
சீதம் இன்மை பனியின்மை காட்டல் போதுப்செப்பிடினே "

" மூன்று பக்கம்; பக்கம் நிகர் பக்கம் நிகரில் பக்கம் எனத்
தோன்றும்; பக்கம் துணிபொருளுக்கு இடமாம்; உவமை
[நிகர்பக்கம்;
ஆன்ற பொருள் சென்றடையாத இடமா நிகரில் பக்கம்; முதல்
ஏன்ற இரண்டும் பொருளுண்மைக்கு இடமாம் ஒன்று
[பொருளின்ரும் "

" புகையால் அனலுண்டு அடுக்களைபோல் என்னப் புகறல்
[அந்நுவயம்;
வகையாம் அனலிலா விடத்துப் புகையின்ருகும் மலரிஞேடு
முகையார் நீரில் போலென்று மொழிதல் எதிரேகச்சொல் இலை
தொகையார் உறுப்பு ஐந்தொடுங்கூடச் சொல்லுவாரும் உளர்
[துணிந்தே "

இவ் ஐந்து உறுப்புக்கள் பற்றி இனிக் காண்போம். (தொடரும்)

நல்லக்குடி - தலச் சிறப்பு

வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ.,

தேவாரத் திருப்பதிகங்கள் பெற்ற 275 தலங்களும் தேவாரத்தில் இடம் பெற்ற 188 வைப்புத் தலங்களும் சைவ மெய்யன்பர்கள் பலரும் பக்தியோடு வழிபடப்பெற்று வரும் திருத்தலங்களாக விளங்கி வருவன. அத்திருத்தலங்களில் மயிலாடுதுறைக்கு அருகில் நல்லத்துக்குடி எனவழங்கும் நல்லக்குடி திருநாவுக்கரசு சுவாமிகள் அடைவுத் திருத்தாண்டகத்தில் இடம் பெற்ற வைப்புத் தலமாகும்.

வழி :

தஞ்சை மாவட்டம் மயிலாடுதுறைக்குத் தென்கிழக்கே 2. கி. மீ. தூரத்தில் இத்தலம் உள்ளது. பேருந்து நிலையத்திலிருந்து கோடங்குடி செல்லும் பேருந்தில் சென்றால் கோயில் அருகே இறங்கலாம். மாயூரநாதர் ஆலயத்தின் கீழவீதியில் தென்கீழ்த் திசையில் புதுத்தெரு செல்லும் வழியில் சென்றாலும் நல்லத்துக் குடியை அடையலாம்.

தலப்பெருமை :

நல்லக்குடி இன்று நல்லத்துக்குடி என வழங்கி வருகிறது. மயிலாடுதுறையைப்போல இவ்வூர் குயிலாடுதுறை என வழங்கப் பெற்றது எனக் கூறுவர். தேவாரத்தில் குயிலாலந்துறை எனக் குறிப்பிடப்படும் தலமும் இதுவே யாகும். பெரியகிராமம். பெருமாள் கோயில், செல்லியம்மன் கோயில், விநாயகர்கோயில்களும் உள்ளன. அபயாம்பிகை சதகம் பாடிய கிருஷ்ணசாமி ஐயர் இவ்வூரில் வாழ்ந்த பெரியவராவார். அபயாம்பிகை அம்மையிடம் மிக்க ஈடுபாடு கொண்டு வாழ்ந்த இவர் இவ்வூரில் சிறந்த மகானாக விளங்கியுள்ளார்.

நல்லக்குடி சிவாலயம் ஊரின் தெற்கே உள்ளது. மேற்குநோக்கிய சிறிய கோயில். சுவாமி அம்பாள் விமானங்களும் இடையில் இரயில் ஓடு வேய்ந்த மண்டபமும் உள்ளன. 10 ஆண்டுகளுக்கு முன் மயிலாடுதுறை திரு. சுப்பிரமணிய செட்டியார் குடும்பத்தினர் திருப்பணி செய்து மகாகும்பாபிஷேகம் செய்வித்துள்ளனர். இப்போது கோயில்திருமதில் பிராகாரம் திருப்பணி செய்யவேண்டிய நிலையிலுள்ளது.

நல்லக்குடி, சூரியன்பூசித்த பெருமை உடையது. நாள்தோறும் மாலையில் சூரியனது கிரணங்கள் சிவலிங்கத்தின் மீது படிவதைக் காணலாம். தீர்த்தம் அருகிலுள்ளது. சூரியபுஷ்கரிணி எனச் சூரியன் பெயரால் இது விளங்கி வருகிறது. இதில் நீராடுவோர் தொழு நோய் முதலிய கொடிய சருமநோய்கள் பலவும் நீங்கப் பெற்றுவருகின்றனர்.

குயிலாலந்துறை என்று வேறொரு வைப்புத்தலம் தேவாரத்தில் குறிக்கப்படுகிறது, அத்தலமும் இதுவே யாதல் வேண்டுமெனத் தெரிகிறது. சுவாமி பெயர் அருள்மிகு ஆலந்துறையப்பர். அம்பாள் பெயர் குயிலாடுநாயகி. மயிலாடுதுறையைப் போல இவ்வூர் குயிலாடுதுறை என வழங்கப்பெற்றது என்பதாலும், அம்பாள் பெயர் குயிலாடுநாயகி என்பதோடு சுவாமி பெயர் ஆலந்துறையப்பர் என்பதாலும் குயிலாலந்துறை என்னும் தலமும் இதுவே யாதல் வேண்டுமெனக் கொள்ளலாம். குயிலாலந்துறை, சிலப்பதிகாரத்தில் குறிக்கப்பெறும் குயிலாலுவம் என்னும் வடநாட்டுத் தலமாதல் கூடும் எனச் சிலர் கருதுவர்.

நல்லக்குடி வைப்புத் தலமாக அமைந்த திருநாவுக்கரசர் தேவாரம் வருமாறு :-

நற்கொடிமேல் விடையுயர்த்த நம்பன் செம்பங்
குடிநல்லக் குடிநளிநாட் டியத்தான்குடி
கற்குடிதென் களக்குடிசெங் காட்டங்குடி
கருந்திட்டைக் குடிகடையக் குடிகா னுங்கால்
விற்குடிவேள் விக்குடிநல் வேட் டக்குடி
வேதிகுடி மாணிகுடி விடைவாய்க்குடி
புற்குடிமா குடிதேவன் குடிநீலக்குடி
புதுக்குடியும் போற்றஇடர் போகு மன்றே.

குயிலாலந்துறை வைப்புத் தலமாக அமைந்த திருநாவுக்கரசர் தேவாரம் வருமாறு :-

கயிலாய மலையெடுத்தான் கரங்க ளோடு
சிரங்களுரம் நெரியக்கால் விரலாற் செற்றோன்
பயில்வாய பராய்த்துறைதென் பாலைத் துறை
பண்டெழுவர் தவத்துறைவெண் டுறைபைம் பொழிற்
குயிலாலந் துறைசோற்றுத் துறைபூந் துறை
பெருந்துறையுங் குரங்காடு துறையி னோடு
மயிலாடு துறைகடம்பந் துறைஆவடு
துறைமற்றுந் துறையனைத்தும் வணங்குவோமே.

நல்லக்குடி ஆலயத்திற்குள்ளேயே விநாயகர், முருகன், தக்ஷிணாமூர்த்தி, சண்டேசர் உள்ளனர். பிராகாரத்தில் பரிவார மூர்த்திகளாக விளங்கிய இவர்கள் ஆலயங்கள் பழுதுபட்டு அழிந்தமையால் இம்மூர்த்திகளைக் கோயிலுக்குள் வைத்துள்ளனர்.

சுவாமி மேற்கு நோக்கி விளங்குகிறார். அம்பாள் தெற்கு நோக்கி எழுந்தருளியுள்ளார். தலமரம் வில்வம்.

நல்லக்குடிமேய நம்பனைக் கைதொழுது, அல்லல் அறுத்து ஆனந்தம் பெற்றிடுவோம்!

கடிதம்

C. VENKATARAMAN, Madras Bench,
Member,
Central Administrative Tribunal, 22–4–1988.

மிகவும் மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய, தருமபுர ஆதீனத்தின் தவத்திரு பீடாதிபதி அவர்கள் திவ்ய சமூகத்திற்கு அநேக நமஸ்காரங்கள். நான் சில தினங்களுக்கு முன் என்னுடைய சஷ்டியப்த பூர்த்தியை முன்னிட்டு ஹோமங்கள் நடத்துவதற்காகத் திருக்கடவூர் வந்திருந்ததைத் தங்களுக்கு நினைவு கூர்கின்றேன். ஸ்ரீ அமிர்தகடேசுவரர் கிருபையாலும், தங்களுடைய அருளாலும் நல்லாசியாலும் ஹோமங்கள் மிகவும் திருப்திகரமாக நடைபெற்றன. ஹோமங்கள் சுவாமி சந்நிதியில் நடைபெறுவதற்கான அனுமதியைத் தாங்கள் கொடுத்தருளியதற்கு என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன். திரு. ஞானப்பிரகாசம் (E. O.), மற்றும் திருக்கடவூரில் உள்ள தருமபுர ஆதீனத்தின் ஊழியர்களின் ஒத்துழைப்பை என்னால் மறக்க முடியாது. அவர்களுக்கு நான் மிகவும் நன்றியுள்ளவனாகின்றேன். ஸ்ரீ அமிர்தகடேசுவரர் கிருபையாலும் தங்கள் அருளாலும் நல்லாசியாலும் மிகவும் இனிதே நடைபெற்ற இந்த ஹோமங்களும் அதைச் சார்ந்த கடவுள் வழிபாடுகளும் எங்கள் நினைவில் என்றும் பசுமையாக நிலைத்திருக்கும். மிகவும் நமஸ்காரம்.

(ஒப்பம்) C. வெங்கடராமன்.

மூர்க்கர், சோமாசிமாறர்

வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் எம்.ஏ.,பி.எட்.,

[தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் 3—4—1988 ஆங்கிலமாத முதல் ஞாயிறன்று வழங்கிய அருளுபதேசத்தையொட்டி எழுதப்பெற்ற கட்டுரை.]

திருவீதியழகும் திருக்கோயில் பொலிவழகும் திருமடத்துச் சீரழகும் தருமையின் திருக்கோலம்! வானுயர்ந்த தென்னையின் வளம், ஆங்காங்கே கல்விக் கூடங்கள், திருமுறையின் கீதம், வேத முழக்கம் - இவை பல தருமையின் இனிய அங்கங்கள்! பூசை, திருவிழா, வழிபாடு, சமய விளக்கங்கள் - இன்னன தருமையின் திருத்தொண்டு! - எண்ணி மனம் களித்தவாறே, தருமைத் திருமடம் நோக்கிச் சென்றேன். மணி பத்து.

குருமணிகள் ஸ்ரீ சொக்கநாதர் வழிபாடு நிறைந்து திருமுறைப் பாராயணம் செய்தபின் சித்திராசனத்தில் அமர்ந்தார்கள். 'அரகர, முழக்கம் எழுந்தது. அன்பர்கள் குருமணிகளை வழிபட்டனர். திருநீறுபெற்றணிந்து அடக்கத்துடனும் ஆர்வத்துடனும் அமர்ந்த னர். திருமுறை ஓதலும் நாமாவளியும் நிறைந்தன. குருமணிகள் குருதோத்திரம் செய்து கொண்டு அருளுபதேசம் தொடங்கினார்கள்.

முதலில் மாதச் சிறப்புத் திருநாட்கள் பற்றி அருளினார்கள். நாயன்மார்களின் குருபூஜை நாட்களை அவர்கள் சிவப்பேறு பெற்ற நட்சத்திரங்களில் கொண்டாடி வழிபடுகின்றோம். ஆனால் தொகை யடியார் ஒன்பதின்மரின் குருபூஜை நாட்களைக் கொண்டாடுவது எந்நாளில்? என்ற ஐயத்தைப் போக்கி, ஆண்டின் இறுதிநாளில் எட்டுத் தொகையடியார்களின் குருபூஜையையும் உலக முதல்வராம் நடராஜப் பெருமானைப் பூசிக்கும் பேறு பெற்ற தில்லைவாழ் அந்தணர் குருபூஜையை ஒவ்வோராண்டின் முதல் நாளிலும் கொண்டாடும் மரபு இருத்தலைத் தெளிவுறப் புலப்படுத்தினார்கள். மேலும் தொகையடியார்களுக்கு அருவுருவநிலையில் ஒன்பது சிவலிங்கங்கள் தில்லையில் அமைக்கப் பெற்றுள்ளமையைச் சுட்டினார்கள். இது நவலிங்கக் கோயில் எனத் தற்போது வழங்கப் பெறுகின்றது.

"நாட்டமிகு தண்டிக்கும் மூர்க்கர்க்கும் அடியேன்; அம்பரான் சோமாசி மாறனுக்கும் அடியேன்" எனத் திருத்தொண்டத்தொகை குறித்தவாறு முன்னைய அருளுபதேசத்தில் தண்டியடிகள் நாயனார் பற்றிச் சிந்திக்கப் பெற்றது. ஏப்ரலில் மூர்க்கர், சோமாசிமாறர் வரலாறுகளை உபதேசித்தருளினார்கள்.

மூர்க்கம் என்ற சொல்லுக்கு வலிமை, கோபம் முதலிய பல பொருள் உண்டு. சூது ஆடி, அதனால் பெற்றவருவாயில் மாகேசுவர பூசை செய்தவர் மூர்க்க நாயனார்.

"தீய என்பன கனவிலும் நினைகிலாச் சிந்தை
தூய மாந்தர்வாழ் தொண்டை நன்னாடு"

என்று சேக்கிழாரால் போற்றப் பெற்ற சிறப்புடையது தொண்டை நாடு. இந்நாட்டில் பாலியாற்றின் வடகரையில் அமைந்திருப்பது திருவேற்காடு. இத்தலம் சென்னைக்கு அண்மையில் உள்ளது. வெள்வேலமரம் தலவிருட்சம் ஆதலால் திருவேற்காடு எனப் பெற்றது. வேதங்களே வேலமரமாக அமைந்தன. திருஞான சம்பந்தர் தேவாரப் பாடல் பெற்ற இத்தலத்தில் தற்போது கருமாரியம்மன் திருக்கோயில் பிரசித்தமாக உள்ளது. குருமணிகள் இதனைக் குறிப்பிட்டபோது ஓர் தத்துவவிளக்கம் காட்டியருளினார்கள். மக்களின் நிலைக்கேற்ப - தாத்திற்கேற்ப - காலநிலைக்கு ஏற்ப இறைவன் சபரிமலை அய்யப்பன், மாங்காடு காமாக்ஷி, இரத்தினகிரி பாலமுருகன், ஆதிபராசக்தி முதலிய திருவுருவங்கள் வாயிலாக ஆங்காங்கும் அருள்புரிந்து வருகின்றான் என்று விளக்கினார்கள். பாடல் பெற்ற தலமாம் திருவேற்காட்டில் சிவபெருமான் திருக்கோயிலினும் கருமாரியம்மன் கோயில் பக்தர் பலரால் வழிபடப் பெறுகின்றது. இதனைச் சிந்திக்கும் போது குருமணிகள் அருளிய தத்துவ உண்மையை நன்கு உணரலாம்.

வேளாளர் குலத்தில் அவதரித்துத் திருவேற்காடு எனும் தலத்தில் வாழ்ந்த மூர்க்கநாயனாரின் இயற்பெயர் தெரிந்திலது. இவர் அறிவு தெரிந்த நாளிலிருந்து சிவபெருமானது திருநீற்றினையே மெய்ப்பொருள் என உணர்ந்தவர். சிவனடியார்களுக்குத் திருவமுது செய்விப்பதைக் கடப்பாடாகக் கொண்டவர். அடியார்கள் அமுது செய்த பின்னரே தாம் உண்ணும் விரதத்தை நியமமாகக் கொண்டவர். அடியார்களுக்குத் திருவமுது செய்வித்து அவர்கள் வேண்டிய வண்ணம் பொருள்களையும் உதவியவர். இங்ஙனம் ஒழுகிய நாளில் சிவனடியார்கள் தொகை நாளும் பெருகிற்று. தமது உடைமை முழுதும் தீர்ந்தது. நிலம், ஆடை, அணிகலன் முதலிய எல்லாவற்றையும் விற்றார். மனமகிழ்வோடு அடியார்கட்கு அமுது செய்வித்தார்.

மேலும் மேலும் வரும் அடியார்களைத் திருவமுது செய்விக்க அவ்வூரில் எந்தவிதமான வழியும் கிடைக்கவில்லை. தாம் முன்னளில் கற்ற சூதினைக் கொண்டு பொருள் ஈட்டக் கருதினர். திருவேற் காட்டில் சூதாடுவோரும் இல்லை; சூதாடுகளமும் இல்லை; அடியாரை அமுது செய்விக்கும் தொண்டு முட்டுப்படாமலிருக்கக் கருதி அவ்வூரினின்றும் நீங்கினர். சிவபெருமான் வீற்றிருக்கும் தலங்கட்குச் சென்றார்; வழிபட்டார். ஆண்டுள்ள சூதாடுகளம் சென்று சூதாடினர்; கிடைத்தபொருளை இறைவன் அளித்தருளியது எனக் கருதி, மகிழ்வுடன் அவ்வூரில் அடியார்கட்குத் திருவமுது செய்வித்தார்.

சிலநாட்கள் சென்றன. குடந்தைப்பதியினை (கும்பகோணத்தை) அடைந்தார்; பொதுவிடங்களில் சூதாடினர். சூதினுல் பெற்ற பொருளை மாகேசுவர பூசைக்கெனவே அளித்தருளினர்.

சூதாடும்போது முதல் ஆட்டத்தில் இவர் தோற்பார்; பந்தயப் பணம் வென்றவர் கொள்ளவிடுவார். அதன்பின்னர்ப் பலமுறையும் தாமே வெற்றி கொள்வார்; எவரேனும் வஞ்சகச் சொற்களால் மறுத்தால்பேசுபவர்களைத் தம்உடைவாளால் குத்துவார். ஆதலால் இவ்வடியார் நற்சூதர், மூர்க்கர் என்னும் பெயர்களைப் பெற்றார். சேக்கிழார் இவர் சூதாடிய தன்மையை,

"முற்சூது தாம்தோற்று முதல் பணையம் அவர்கொள்ளப்
பிற்சூது பலமுறையும் வென்றுபெரும் பொருளாக்கிச்
சொற்சூதால் மறுத்தாரைச் சுரிகைஉருவிக்குத்தி
நற்சூதர் மூர்க்கர்எனும் பெயர்பெற்றார் நானிலத்தில்"

என அருளியுள்ளார்.

மூர்க்கர் சூதாட்டத்தில் வென்ற பொருளைத் தம் கையாலும் தீண்டமாட்டார். அமுதுஆக்குவோர் எடுத்துக்கொள்ளச் செய்வார் அடியாரை அமுது செய்வித்துக் கடைப்பந்தியில் தாமுண்பார். அன்போடு அமுதளித்த சூகாரம் இவ்வடியார் இறைவன் திருவருளால் குற்றம் முற்றும் நீங்கப் பெற்றார். சூதாடிப் பெற்ற பொருள் குற்றமுடையதே ஆயினும் அப்பொருள் சிவனடியார்கட்கு ஆக்கப்பட்டதால் குற்றம் நீங்கியது. அதனுல் இவர் சாலோகப் பேறு பெற்றார்.

சமய ஒழுக்கம் நிரம்பிய மூர்க்கர், சூதாடக் கற்றிருந்தமை தவறல்லவா? என்று ஓர் ஐயம் நமக்கு எழும். கலைபல கற்றவர் மூர்க்கர்; கலை என்ற நிலையிலேயே சூதாடவும் கற்றார்; படைக்கலப் பயிற்சி முதலியன போன்றதே சூதாடல் என்ற கலைப்பயிற்சியும் என ஐயத்தினை நீக்கி, விளக்கினர்கள். மேலும் பலமுறையும சூதில் தாம் வென்றுலும முதல் பணையத்தில் தாம் தோற்று, ஆடவந்தவர்

வெல்ல வழிவகுத்ததும் அவர் கொண்டிருந்த ஒருநெறி! வழுவும் வழுவமைதியும் போல இந்நிலையைக் கொள்ளவேண்டும் என அருளிச் செய்தமை நுட்பமான ஆய்வாக அமைந்தது.

மூர்க்கர் தவமும் செய்தார்; அவமும் செய்தார். இவர் செய்கை சண்டீசர் தந்தையார் எச்சதத்தன் நிலையை ஒருவகையில் ஒத்தது. எச்சதத்தன் சண்டீசரை உலகுக்கு அளித்தார்; அவரே சண்டீசர் செய்த சிவபூசைக்கு இடையூறும் விளைத்தார். சேக்கிழார் சண்டீசர் தந்தையாராகிய எச்சதத்தன் செயலை,

“ அருமை மணியும் அளித்து, அதுவே
நஞ்சும் அளிக்கும் அரவுபோல் ”

என்று விளக்குவார். இங்ஙனம் மூர்க்கர் நிலையும் எச்சதத்தன் நிலையும் ஒத்திருந்தமையைச் சுட்டியமை உளத்திற்கு மகிழ் வூட்டியது.

மூர்க்க நாயனுர் வரலாற்றைத் தொடர்ந்து சோமாசிமாறர் புராணம் அருளினுர்கள்.

சோமாசிமாறர் திருஅம்பர் என்ற தலத்தில் அவதரித்தவர். மறை ஓதும் அந்தணர். சிவவேள்வியை முறைப்படி ஆற்றியவர். தம்மை வந்தடைந்த சிவனடியார்கள் குலம், நலம், பண்பு முதலிய வற்ருல் எத்தன்மை உடையவராக இருப்பினும் அவரைப் போற்றி வாழ்ந்தவர். சித்தம் தெளியத் திருவைந்தெழுத்து ஓதுவதை நித்தம் நியமமாகக் கொண்டவர்.

குருமணிகள் யாகம் பற்றிச் சில பயனுள்ள குறிப்புக்களைப் புலப்படுத்தினுர்கள். யாகம்–வேள்வி. சிவயாகம்-சிவனை நோக்கிச் சிவார்ப்பணம் எனச்செய்யும் வேள்வி. வைதிக வேள்வி இந்திரன், பிரமன், திருமால் முதலியோரை நோக்கிச்செய்வது; அவரவர்கட்கு அர்ப்பணம் செய்வது. சிவவேள்வியே வீடுபேறு அளிக்கவல்லது. வைதிக வேள்வி சொர்க்கம் முதலிய சுகபோகங்களை அளிப்பது; அந்தமில் இன்பத்து அழிவில் வீடு நல்குவதன்று. இக்குறிப்புக்களை நல்கியதுடன் சிவவேள்வியில் அக்கினியைச் சிவகுமாரனுக - சிவாக்கினியாக மாற்றி அந்த அக்கினியில் பொருளை ஆகுதி செய்கிருர்கள். வைதிகவேள்வியில் நேரே அக்கினி பகவானிடத்தில் அளிக்கிருர்கள் என்று குறிப்பிட்டு வேள்விகள் பற்றி மேலும் ஆராய வேண்டும் எனத் தெளிவுபடுத்தினுர்கள்.

சோமாசிமாறர் சுந்தரரைக் குருவாகக் கருதி வழிபட்டவர். அவரோடு சார்ந்திருக்கக் கருதினுர். திருவாரூர் அடைந்தார்; சுந்தரரை அடைந்து, நட்புக் கொண்டார். சோமாசிமாறர் திரு அம்பரில் சிவவேள்வி செய்தபோது, சிவபெருமானும் உமாதேவியும் நீசவடிவத்துடன் வந்து அவிர்ப்பாகம் கொண்டனர் என்று

திருவம்பர்த் தலமான்மியத்தில் ஒரு வரலாறு காணப்படுகின்றது. இச்செய்தியைச் சேக்கிழார், சோமாசிமாறர் புராணத்தில் அருளிச் செய்யவில்லை. இது போலவே சேக்கிழார் குறிப்பிடாத மற்றும் ஒரு பகுதியைப் புலப்படுத்தினார்கள். விறன்மிண்டர், சுந்தரருக்கு இறைவன் மதிற்சுவரை ஒட்டிக் காட்சி தந்தமையை எண்ணித் திருவாரூரில் வசிப்பதில்லை என உறுதிபூண்டார். ஆரூரின் வடக்கே புத்தாற்றங்கரையில் வாழ்ந்தார். அடியார் வழிபாடு ஆற்றியிருந் தார். ஆரூர் செல்லும் அடியார்களின் காலை வெட்டுவது என்னும் சபதமும் கொண்டிருந்தார். சிவபெருமான் அடியாராக வந்தார். தம்மை ஆரூரினர் எனக்கூறினர். விறன்மிண்டர் அடியார் காலைத் துணிக்க ஓடினர். அடியாரும் ஓடினர். இருவரும் திருவாரூர்ப் பகுதியைஅடைந்தனர். 'வந்தோம் இப்பால்' என்றார் சிவனடியார். விறன்மிண்டர் தம்மை அறியாமல் ஆரூர் எய்தியது அறிந்தார். தம்கால்களைத் தாமே துணித்துக் கொள்ளமுற்பட்டார். அடியாராக வந்த சிவபெருமான் காட்சி நல்கினர் - எனவரும் தலவரலாற்றுப் பகுதியும் பெரியபுராணத்தில் இடம் பெருமையைச் சுட்டியருளியமை சீரிய ஒப்பீட்டாய்வாக அமைந்தது. சோமாசிமாற நாயனர் யாகத்தில் நீசவடிவத்தில் அவிர்ப்பாகம் ஏற்கவந்த சிவபெருமானைச் சில அந்தணர்கள் நீசர் என நிந்தித்ததால், அவர்கள் நீசராயினர். இவர்களை இன்றும் மத்தியானப் பறையர் என்று அழைக்கின்றனர். இவர்கள் தமிழ்நாட்டில் பல இடங்களிலும் உள்ளனர். சமீபகாலம் வரை அம்பரிலேயே சிலகுடும்பங்கள் இருந்தன. அக்குடும்பத்தினர் மத்தியான நேரத்தில் வீட்டை விட்டு வெளியில் வந்து சிறிது நேரம் இருந்து விட்டு வீட்டிற்குள் வருவர் என்பதும் இதற்குச் சான்று.

சோமாசி என்பது பட்டப் பெயர். மாறர் என்பது இயற்பெயர். சோம யாகம் எனும் சிவவேள்வி செய்தமையால் (சோமயாஜி - சோமயாசி) சோமாசி எனப் பெயர் வழங்கலாயிற்று எனப் பெயர்க் காரணம் அருளித் தெளிவுபடுத்தினார்கள்.

பயனுள்ள பல செய்திகள் அருளுபதேசத்தில் இடம்பெற்றன. அறிவுக்கு விருந்து நல்கி அன்பர்களை நெறிப்படுத்தும் அருளுப தேசம் நிறைந்தது. அலுவலக இளைஞர்கள், கோடை வெப்பம் தந்த தாகத்தை, இன்சுவைக் கனிச்சாறு ஈந்து தணிந்தனர். இனிய உணர்வுகளோடு இல்லம் ஏகினேம்.

சைவநெறி தழைத்தோங்கச் சரிதங்கள் தமை உணர்த்தி
உய்யுநெறி காட்டியருள் உயர்குருவின் தாள்தொழுவோம்!

வாழ்க குருமணிகள்!

செய்திகள்

ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு

திருக்கடவூரில் :

தருமை ஆதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஆண்டு ஜன்ம நட்சத்திர ஆயில்யத் திருநாள் (நாண்மங்கலவிழா) ஆலய வழிபாடு திருக்கடவூர் ஸ்ரீ அபிராமி அம்மை உடனுறை ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி திருக்கோயிலில் மிருத்தியுஞ்சய ஹோமம், ஏகாதச ருத்ரஜபம் முதலியவற்றுடன் 25—4—88 திங்கட்கிழமை அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி, ஸ்ரீ அபிராமி அம்மைக்கு விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகளும் ஸ்ரீ காலசம்ஹாரமூர்த்திக்கு சகஸ்ரநாம அருச்சனையும் நடைபெற்றன. நாண்மங்கல விழா மலராக 'ஆலய வழிபாடு' என்ற நூல் வெளியிடப் பெற்றது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் வழிபாட்டில் கலந்து கொண்ட அன்பர்கட்கு அருட்பிரசாதம் வழங்கினார்கள்.

நல்லக்குடியில் :

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஜன்ம நட்சத்திர ஆயில்யத் திருநாளில் மாதந்தோறும் பாடல் பெற்ற திருத்தலங்களில் வழிபாடுகளை முறையாகச் செய்வித்து அவ்வத் தலச் சிறப்புக்களையும் தேவாரத் திருப்பதிகங்களையும் வெளியிட்டருளி இதுபோது தேவாரப்பாடல்களில் காணப்பெறும் வைப்புத் தலங்களாக உள்ளனவற்றில் சிறப்பு வழிபாடுகள் நிகழ்கின்றன. சித்திரை ஆயில்யநாள், மயிலாடுதுறையை அடுத்துள்ள நல்லத்துக் குடி என வழங்கும் நல்லக்குடி ஸ்ரீ குயிலாடுநாயகி உடனுறை ஸ்ரீ ஆலந்துறையப்பர் திருக்கோயிலில் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் 25—4—88 அன்று சிறப்பாக நடைபெற்றது. வைப்புத் தலங்களில் நல்லக்குடி, என்றும் குயிலாலந்துறை எனவும் குறிக்கப் பெறுவது இத்தலம். 'நல்லத்துக்குடி' என வழங்கும் நல்லக்குடித் தலச் சிறப்பும் தேவார வைப்புத்தலங்களும்' என்ற நூல் வெளியிடப் பெற்றது. வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர், எம். ஏ., தலச்சிறப்புக்களை விளக்கி உரையாற்றினர். அன்பர்கள் வழிபட்டுப் பயன்பெற்றனர்.

குருவருளும் அருளுபதேசமும்

தருமை ஆதீனத் திருமடத்தில் ஆங்கிலமாத முதல் ஞாயிறு தோறும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தை அன்பர்கள் வழிபட்டு அருளுபதேசம் பெறும் பிரார்த்தனைக் கூட்டம் நிகழ்ந்து வருகின்றது. இம்மாதம் 83 ஆம் அருளுபதேசம் 1—5—88 அன்று திருமுறைப் பண்ணிசையுடன் தொடங்கி நடைபெற்றது.

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் திருத்தொண்டர் புராணத்தின் வாயிலாகச் சைவசித்தாந்தச் செந்நெறி விளக்கம் அருள்கின்றார்கள். இம்மாதம் சாக்கிய நாயனார் புராணம் உபதேசித்தார்கள். சேக்கிழார், சாக்கியர் புராணத்தில் பெருமானை 'அறுசமயத் தலைவராய் நின்றவர்' எனக் குறித்தலைச் சுட்டிக் காட்டி, புறப்புறம், புறம், அகப்புறம், அகம் என நாற்கூறுபட்ட அறுவகைச் சமயம் பற்றிச் சில குறிப்புக்களை நல்கி அவற்றிற்கு அப்பாற்பட்டு நின்று விளங்குபவன் சிவபெருமான் என விளக்கினார்கள். சாக்கியர் நெறி 'பூசை செய்யாமல் உண்பதில்லை' எனக் கொண்ட உயர்ந்த குறிக்கோள்நெறி என்பதை வரலாற்றின்வழி புலப்படுத்தினார்கள்.

ஆதீன அடியார்களும் அன்பர்களும் ஆசிரியர்களும் அலுவலகர்களும் மாணவர்களும அருளுபதேசம் கேட்டும் ஸ்ரீலஸ்ரீ குருமணிகளைத் தரிசித்தும் பயன்பெற்றனர். அடுத்து 84 ஆம் அருளுபதேசம் 5—6—88 அன்றுநடைபெறும். அன்பர்கள் கலந்துகொண்டு பயன் பெறுக.

ஸ்ரீ உமாபதி தேவநாயனர் குருபூஜை விழா

சந்தானகுரவருள் நான்காமவராகிய ஸ்ரீ உமாபதி தேவ நாயனார் குருபூஜை விழா விபவ - சித்திரை 17 ஆம் நாள் 29—4—88 வெள்ளிக்கிழமை மிகச் சிறப்பாக நடைபெற்றது. காலை 9 மணியளவில் தருமபுரம் ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயிலிலும் மாலை சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் திருக்கோயிலிலும் குருபூஜை விழாவினை முன்னிட்டு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. தருமை ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமிதிருக்கோயிலுக்குத் தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் இருவேளைகளிலும் எழுந்தருளி வழிபாடு ஆற்றினார்கள். தருமபுரத்தில் மாலை 7 மணி அளவில் வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர், எம். ஏ., ஸ்ரீ உமாபதி தேவ நாயனார் அருள்நூல்கள் பற்றியும், வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன், எம். ஏ., பி. எட்., ஸ்ரீ உமாபதி தேவ நாயனார் அருள் வரலாறு பற்றியும் உரையாற்றினர். சிதம்பரம்

ஸ்ரீ சபாநாயகர் திருக்கோயிலில் திருமுறைக்கலாநிதி எம். கனக சபையின்ளை திருமுறைப் பண்ணிசை நிகழ்த்தினர். பிரம்மஸ்ரீ. சிவராஜதீக்ஷிதர் தலைமையில் டாக்டர் திரு. சு. சுவாமி ஐயா, உமாபதி தேவ நாயனர் அருள் நூல்கள் பற்றி உரையாற்றினர். அன்பர்கள் தரிசனம் செய்தும் சொற்பொழிவுகளைக் கேட்டும் பயன் பெற்றனர்.

சித்திரைப் பெருவிழா

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான சீகாழி ஸ்ரீ சட்டைநாத சுவாமி தேவஸ்தானத்தில் 21—4—88 முதல் சித்திரைத் திருவிழா தொடங்கி நடைபெற்றது. சித்திரை 10 ஆம் நாள் (22—4—88) வெள்ளி அன்று திருமுலைப்பால் விழா. அன்றுகாலை தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் எழுந்தருளியிருந்தார்கள். ஸ்ரீ திருஞானசம்பந்த சுவாமிகள் சிவிகையில் எழுந்தருளியான வுடன் அற்புதவிளக்கச் சொற்பொழிவுகளும் திருப்பதிகம் ஓதுதலும் நடைபெற்றன. திருமுலைப்பால் விழாவில் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் தருமை ஆதீன ஓதுவாமூர்த்தி திரு. சோ. உத்திராபதி தேசிகர் அவர்கட்குத் 'திருமுறைக்கலாநிதி' என்னும் பட்டம் பொறித்த பொற்பதக்கம் வழங்கி1001 ரூபாய் அடங்கிய பொற்கிழி அளித்துப் பொன்னடை போர்த்திச் சிறப்புச் செய்தருளினர்கள்.

சித்திரைத் திருவிழா நாட்களில் கருத்தரங்கம், கவியரங்கம், பட்டிமன்றம், வழக்காடு மன்றம், திருமுறை வகுப்பு ஆண்டுவிழா, திருமுறை இசையரங்கம், நாட்டியம், பொம்மலாட்டம், விகடம் முதலிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

திருக்கடவூரில் :

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான ஸ்ரீ அமிர்தகடேசுவர சுவாமி தேவஸ்தானத்தில் சித்திரைப் பெருவிழா 21—4—88 முதல் தொடங்கி நடைபெற்றது. 26—4—88 காலசம்காரத் திருநாளன்று தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்கட்குப் பிரசாதம் வழங்கினர்கள். உற்சவ நாட்களில் சொற்பொழிவுகளும் திருமுறை விழாவும் தேவார வகுப்பு ஆண்டு விழாவும் நிகழ்ந்தன.

திருப்பனந்தாளில் :

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமி தேவஸ்தானத்தில் 21—4—88 முதல் சித்திரைப் பெருவிழா மிகச் சிறப்பான முறையில் நடைபெற்றது. உற்சவ நாட்களில் சமயச்சொற்பொழிவுகளும், இன்னிசையரங்கும் நிகழ்வுற்றன. அன்பர் பலர் சுவாமி தரிசனம் செய்தும் சொற்பொழிவுகளைக் கேட்டும் பயன் பெற்றனர்.

திருவையாற்றில் :

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான திருவையாறு ஸ்ரீ பஞ்ச நதீசுவரசுவாமி திருக்கோயிலில் 21—4—88 அன்று தொடங்கிச் சித்திரைப் பெருவிழா சிறப்பாக நடைபெற்றது. தன்னைத்தான் அர்ச்சித்தல், சகோபுரக் காட்சி,ஏழூர் வலம்வரல் முதலிய விசேஷத் திருநாட்கள் நிகழ்வுற்றன. உற்சவ நாட்களில் சமயச் சொற் பொழிவுகள் நிகழ்வுற்றன. அன்பர் பலர் வழிபாடாற்றியும் சொற்பொழிவுகளைக் கேட்டும் பயன்பெற்றனர்.

சீகாழி ஸ்ரீ முத்துச் சட்டைநாத சுவாமிக்குச் சிறப்பு வழிபாடு

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான சீகாழி ஸ்ரீ சட்டைநாத சுவாமிக்குச் சிறப்பு வழிபாடு 6—5—88 வெள்ளிக்கிழமையன்று சிறப்பாக நடைபெற்றது. காலையில் ஸ்ரீ முத்துச் சட்டைநாத சுவாமி யதாஸ்தானத்திலிருந்து புறப்பாடாகி வலம்புரி மண்டபத்திற்கு எழுந்தருளலும் அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றபின் இரவு புறப்பாடாகி யதாஸ்தானத்திற்கு எழுந்தருளலும் அதன்பின் புழுகாப்புத் தரிசனமும் நிகழ்வுற்றன. தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்கட்கு அருட்பிரசாதம்வழங்கினர்கள். வைத்தீசுவரன்கோயில், வித்துவான் திரு. வை. முருகையா தேசிகர், 'ஆபதுத்தாரணர் மாலை' பற்றி உரை நிகழ்த்தினர். அன்பர்கள் சொற்பொழிவு கேட்டும் சுவாமி தரிசனம் செய்தும் பயன்பெற்றனர்.

பார்வையாளர் குறிப்பு (நகல்)

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான

திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானம்

திருபுவனம் திருக்கோயில் தருமை ஆதீனத்தின் சிறப்பான நிர்வாகத்தில் மிகச் சிறப்பாகப் பரிபாலிக்கப்படுகின்றது. இங்கே பல ஆண்டுகளாக வழிபட்டுவரும் நான் ஆலயம் இவ்வளவு சிறப்பாகப் பராமரிக்கப்படுவதைப் பாராட்டத், தக்க வார்த்தைகள் இல்லை. ஆண்டவன் அருள் இதற்கு என்றும் துணை நிற்பதாகுக.

(ஒ-ம்) ஆர். சண்முக சிகாமணி, I. A. S.
ஆணையர் மற்றும் செயலர்
17—4—88 கூட்டுறவுத்துறை, சென்னை.

எதிர்காலம்

ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்
ஓய்வுபெற்ற ஆசிரியர்
ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

(விபவஹூ வைகாசிமீ 1௳ முதல் 32௳ முடிய)
(14—5—88 முதல் 14—6—88 முடிய)

ஸ்ரீவிபவஹூ வைகாசிமீ 1௳ ஸ்திரவாரம் அசுவதி நக்ஷத்திரம் பத்திரைகரணம கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் 12 நாழிகை 12 விநாடிக்கு கடக லக்கினத்தில் ஸ்ரீ லோகரட்சகரான சூரிய பகவான் மேஷ ராசியிலிருந்து ரிஷப ராசி சங்கிரமணமாக வைகாசி மாதப் பிரவேசம் செய்தருளுகின்றார். அன்று விஷ்ணுபதி புண்ணியகாலம். சங்கிரமண காலகிரக ஸ்திதியினால் உலகில் நல்ல மழை வருஷிக்கும். வயோதிகர், பெண்கள், வேதம் ஓதுபவர்கள், கலைஞர்கள், புலவர்கள் அரசாங்கத்தினரால் இரட்சிக்கப்படுவார்கள். தேசங்களில் ஆளுநர்கள் தெய்வநீதியாகச்செங்கோல் பரிபாலனம்செய்து வருவார்கள். உலகில் அதர்மம் வீழும். இளைஞர் பல்கலைகள் பயின்று தொழில் நுட்ப அறிவுடன் கடமைப்பணி ஆற்றி ஆக்கம்பெறுவர். ஆன்றோர்களால் சிவபுண்ணியகாரியங்கள், சிவாலயத் திருப்பணிகள், தெய்வ சம்ரோட்சணங்கள் நடந்து உலகம் சுபிட்சமுறும். உலகெங்கும் உள்ள திருமடங்கள் ஆசாரியபீடங்களில் ஈசுவரனையே பூசிக்கும் பாக்கியத்தில் திருவீற்றுள்ள சைவ சமயம் பரிபாலிக்கும் கர்த்தாவாக வந்துள்ள சிவஞான குருமகான்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானங்கள் ஜெகத்குருமகான்கள் உலகத்திற்கு அஹிம்ஸா தர்மம், மனுநீதி தர்மம், தெய்வநீதி ஆசியருள்வார்கள். உலகமாந்தர்கள்வேதங்கள்சாஸ்திரங்கள் உயர் ஞானம் அப்பியாசம் பெறும் பொருட்டு, பயிற்சிசாலைகள் அநேகம் ஏற்பட அனுக்கிரகித்து அவை வளர்ச்சியுற்று விளங்க அருளிச் செய்வார்கள். தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் நித்தியம் ஆறுகால பூசைகள், சிறப்பு பூசைகள், வசந்தோற்சவங்கள் க்ஷேத்திரங்களின் ஐதீகப்படி வழிவழி வந்த அர்ச்சகர்களின் பூர்வப்படிக்குள்ள புனித நியமத்தில் நன்கு நடைபெற்று வருவதினின்றும் உலகம் உய்யும்.

1. மேஷம் :- அசுவதி - பரணி - கார்த்திகை ¼

மேஷ ராசி 9 பாதங்களும் சுப பலன் தரும். பண வருமானம் வெகுவாக வரும். வாக்கு மேன்மையளிக்கும். அரசகண்யம் தரும்.

பொன்மணி பூஷணாதிகள் தரும். புண்ணிய ஸ்தலம் சென்றுவருதல், நல்லோர் பிரபலஸ்தர்கள் வருகை தருதல் புகழ்தல்ஆகும். எல்லாக் காரியங்களையும் செவ்வையாக நடத்தும். தார சௌக்கியம் நன்றாக இருந்துவரும். மே 30, 31 ஜுன் 1 இத்தேதிகள் சந்திராஷ்டமம். சனி, ஞாயிறு சுபம்.

2. ரிஷபம் :- கார்த்திகை ¾ - உரோகிணி - மிருகசீரிஷம் ½

ரிஷப ராசி 9 பாதங்களும் சுப பலன் தரும். பண வருமானம் கௌரவ ஸ்திதிக்கு ஏற்ப வந்து சேரும். பரோபகாரம் பொதுநல நன்மைகளில் ஈடுபாடு ஏற்படும். எல்லாக்காரியங்களையும் கெடியாக நடத்தும். அடிக்கடி வெளியூர்ப் பயணம் ஏற்படும். எல்லாவற்றி லும், கௌரவமும் அந்தஸ்தும் உயர்வும் தரும். தாரம், புத்திரர் களின் நலம் நன்றாக இருந்துவரும். ஜுன் 2,3,தேதிகள் சந்திராஷ் டமம். திங்கள், செவ்வாய் சுபம்.

3. மிதுனம் :- மிருகசீரிஷம் ½ - திருவாதிரை - புனர்பூசம் ¾

மிதுன ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பண வருமானம் வந்து கொண்டிருக்கும். வித்துவத்துவம் கலைத்துறை களில் கொடுக்கல் வாங்கல் லேவா தேவிகளில் நற்பலன் வரும். ஓர் நவீன பொருள் வாங்குதல் ஆகும். நல்லவர் பிரபலஸ்தர்களால் நன்மைகள் பல ஏற்படும். பழைய வழக்கு ஒன்றில் வெற்றியைத் தரும். எல்லாக்காரியங்களும் இராஜ கண்யமாக நடந்து கொண்டிருக்கும். தாரம், புத்திரர்களின் நலம் நன்றாக இருந்து வரும். ஜுன் 4, 5 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

4. கடகம் :- புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.

கடக ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பண வருமானம் கௌரவஸ்திதிக்கு ஏற்ப வந்துகொண்டிருக்கும். சம்பிரதாய விஷயங்களில், ஏற்றுக் கொண்ட நல்விஷயங்களில் திரண்ட பொருள் முதலீடு செய்யும். தெய்வ புண்ணிய காரியங்களை முன்னின்று நடத்தும். எல்லாக்காரியங்களும் தெய்வ பலத்தில் சித்தியாக நடந்து கொண்டிருக்கும். தாரம், புத்திரர்களின் நலம் நன்றாக இருந்து வரும். ஜுன் 6, 7 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

5. சிம்மம் :- மகம் - பூரம் - உத்திரம் ¼

சிம்ம ராசி 9 பாதங்களும் சுபபலனாக நடக்கும். பணவருமானம் வந்து நிறையும். சகோதரம் பந்துவில் சுப விசேஷம் ஏற்படும். வித்தியா வியாபாராதிகளில் உத்தியோகப் பதவியில் அரசாங்க நன்மைகளை ஏற்படுத்தும். நற்பாக்கியம் தரும். எல்லாக்காரியங்

களும் புத்தி மேன்மையில் செம்மையாக நடைபெற்று வரும். தாம்பத்திய வாழ்க்கையில் பிணக்கு இருப்பினும் பின் ஒருமனப் பட்டு சாஸ்திரோக்தமான தான தர்மங்கள் செய்யும். ஜுன் 8, 9 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபம்.

6. கன்னி :- உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½

கன்னியா ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் கணிசமாக வரும். வித்தியா வியாபாராதிகளில் கலைத்துறையில் ஜுன் 6 தேதி ஆனால் அரசாங்கத்தில் ஓர் நன்மையை ஏற்படுத்தும். புனித யாத்திரை சென்று வருதல் ஆகும். திடசித்த மாக எல்லாக்காரியங்களையும் நடத்தும். ஓர் இயந்திரம் வாங்குதல் ஆகும். தாரம், புத்திரர்களின் நலம் நன்றாக இருந்து வரும். மே 14, 15 ஜுன் 10, 11 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

7. துலாம் :- சித்திரை ½ - சுவாதி -விசாகம் ¾

துலா ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பண வருமானம் பெருமதிப்பில் வந்துகொண்டிருக்கும். வித்தியா வியாபாராதிகளில் கலைத்துறையில் விசேஷ பலனை ஏற்படுத்தித் தரும். காண்ட்ராக்ட், ஒப்பந்தங்களில் புதிய ஏற்பாடு ஆகும். நல்லோர் பிரபலஸ்தர் வருகை தருதல் மற்றும், மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் நிகழும். வீடு வாகன பிராப்தியில் நவீன அமைப்பு ஏற்படும். எல்லாக் காரியங்களும் சாஸ்திரோக்தமாக நடக்கும். தாம்பத்திய வாழ்க்கை தெய்வபக்தியுடனும் தானதர்மத்துடனும் நடந்துவரும். மே 16, 17 ஜுன் 12, 13 தேதிகள் சந்திராஷ்டமம். சனி, ஞாயிறு, சுபம்.

8. விருச்சிகம் :- விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை

விருச்சிக ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பண வருமானம் கணிசமாக வரும். சகோதரம் மனைவி நலனில் ஓர் செலவு ஏற்படும். நெருப்பில் ஓர் பொருள் சேதமாகும். நியமம் கட்டுபாடு வற்புறுத்தலில் பணியாளர்,நெருங்கிப் பழகுவோர் மனக் கசப்பாக இருப்பர். உற்றாரில் ஒருவர் சிறிது காலம் விலகி இருப்பர். ஓர் புனிதஸ்தலம் செல்ல ஆயத்தம் ஆகும். எல்லாக் காரியங்களையும் கெடியாக நடத்தும். மே 18, 19 தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள், செவ்வாய் சுபம்.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

தனுர் ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பண வருமானம் வெகுவாகவரும். வித்துவத்துவம் கலைத்துறைகளில்

பிரபலமும அரசாங்க நன்மைகளையும் உண்டாக்கும். குடும்ப நலம் சகோதரர்நலம் நன்றாக இருந்துவரும். புத்திரர் அல்லதுபுத்திரிக்கு சுபம ஏற்படும். மனை பூமி விஷயத்தில் ஓர் அதிர்ஷ்டம் வரும, அம்மான், மனைவி வழியில் ஈடுபாடும், நன்மைகள் பல ஏற்படுதலும் ஆகும். எல்லாக் குறிப்பிட்ட காரியங்களும, புத்திமேன்மையால் இராஜ கண்யமாக நடந்து கொண்டிருக்கும். மே 20, 21, 22 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

10. மகரம் :- உத்திராடம் $\frac{3}{4}$ - திருவோணம் - அவிட்டம் $\frac{1}{2}$

மகர ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பண வருமானம் கிரமமாக வரும். குடும்பத்தில் நெருக்கடி, பிரச்சினைகள் அதிகம் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். சனிபகவானுக்குத் திலதீபம ஏற்றி வருதல் நலம். வயிற்றில் எரிச்சல் அழற்சி வந்து குணமாகும். ஜீவனோபாயம் தொழில் துறைகளில் தெய்வானுகூலத்தினால் மேலிடத்திய நன்மைகள் இருந்துகொண்டிருக்கும். தாரபுத்திரர்களுக்கு நலம் தரும். மே 23, 24, 25 தேதிகள் சந்திராஷ்டமம். சனி, ஞாயிறு சுபம்.

11. கும்பம் :- அவிட்டம் $\frac{1}{2}$ - சதயம் - பூரட்டாதி $\frac{3}{4}$

கும்ப ராசி 9 பாதங்களும் சுப பலனாக நடக்கும். பண வருமானங்களில் நல்ல ஸ்திதியை ஏற்படுத்தும். வீடு வாகனங்கள் பிராப்தியில் நவீன சாதனம் பொருந்தும். வித்துவத்துவம், கலைத் துறைகளில் அரசாங்க நன்மையை உண்டாக்கித்தரும். எல்லாக் காரியங்களும் சமயோசித புத்தியில் நல்ல விதமாக நடந்து கொண்டிருக்கும். ஓர் நீர் இயந்திரம் வாங்குதல் ஆகும். தாரம், புத்திராகளுக்கு சௌக்கிய பலனையளிக்கும். மே 26, 27 தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள், செவ்வாய் சுபம்.

12. மீனம் :- பூரட்டாதி $\frac{1}{4}$ - உத்திரட்டாதி - ரேவதி.

மீன ராசி 9 பாதங்களும் சுப பலனாக நடக்கும். பணவருமானங்களில் நல்ல ஸ்திதியை ஏற்படுத்தும். வீடு வாகனபிராப்தியில் நல்லசௌக்கியம் தரும். பொன்மணி பூஷணங்கள் கௌரவத்துடன் அணிதல் ஆகும். ஒரு சில காரியங்கள் தயக்க நிலையாயினும் நல்லோர் மேலோர் அனுகூலம் செய்வதினின்றும் வெற்றிகரமாய் இயங்கும். பூர்வப்பொருளில் விக்கிரய சம்பவம் ஆகும். $1\frac{1}{2}$ மாதத்தில் திருப்தியான சூழ்நிலை ஏற்படும். தாரபுத்திரர்களின் நலம் நன்றாகஇருந்து வரும். மே 28, 29 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

அனைத்துலக சைவசித்தாந்த
ஆராய்ச்சி நிறுவனம்
இதழ்வழிச் சைவ சமயக்கல்வி-IV
பாடம் - 4.

பண்டார சாத்திரங்கள்:

முத்தி நிச்சயம்

(பேருரை)

சைவசித்தாந்தக் கலாநிதி
திரு. தி. ந. இராமச்சந்திரன்

தருமபுர ஆதீனப் பண்டார சாத்திரங்களில் ஆணியாம் சாத்திரம் முத்திநிச்சயம். இதற்கு ஸ்ரீமத். வெள்ளியம்பலவாணத் தம்பிரான் சுவாமிகள் அருளிய பேருரை ஓர் உரையாணியாம்.

ஞானசம்பந்தம் - மலர் 47, இதழ் 5 இல் அச்சாகியிருக்கும் சிற்றுரை பற்றிய கட்டுரையின் தொடர்ச்சியாக இக்கட்டுரையை வாசித்தல் பயனுடையதாகும். ஏறத்தாழ 120 நூல்கள் பேருரையில் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளன. தமிழ்ப் புலமையும், வடமொழியில் வல்லபமும், சாத்திர நுண் அறிவும் படைத்தாரே பேருரையின் முழுப் பயனைக் கொள்ள முடியும்.

இப்பேருரை 1946 ஆம் ஆண்டு தருமபுர ஆதீன வெளியீடாக வந்தது. சூரியனார் கோயில் ஆதீனத்தைச் சார்ந்த ஸ்ரீமத். இலக்கணம் முத்துக்குமாரத் தம்பிரான் சுவாமிகள், வேதாந்த சிரோமணி பிரமஸ்ரீ. இராஜகோபால சாஸ்திரிகள், வித்துவான் சிவஸ்ரீ. ச. தண்டபாணி தேசிகர் ஆகியோரின் அயராக் கூட்டு முயற்சியாலும், இவ்வாதீனத்து இருபத்துநான்கு, இருபத்து ஐந்து மகாசந்நிதானங்களாக விளங்கிய அருளாளர்களின் ஆசியாலும் சிறந்தமுறையில் இவ்வுரை வெளியிடப்பட்டது.

முதற்பாடலில் ''திகழ் முத்தி நிச்சயம் ஒன்று ஆவதென மொழிவேன் நான்'' என்பதை உரையாசிரியர் இப்படி விளக்கி அருளுகிறார். ''பிறர் பன்றி, குட்டியிட்டாங்கு நூலிலக்கணமின்றிச் செய்த பல நூல்கட்கும், 'அறிவிலானை அகத்தியன்' என்றும், 'பஞ்சதுட்டனைச் சாது' என்றும் பெயர் கூறுமாறு போல, பரதிமிரபாநு, பதிபசு, பாசப்பநுவல், பரமோபதேசம் என்றுசில பெயர் கூறிச் சித்தாந்தம் அல்லாததை ஆமெனமயங்கிக்கொண்டு

வழங்கினானன்றே; அவ்வாறின்றிக் குஞ்சரமின்ற கன்றென ஒன்றும் முற்கூறிய நூலிலக்கணம் முழுவதும் உடைத்தாய் இருத்தலின் கதிரோனை ஆயிரங்கிரணன் எனவும், சந்திரனை அமுத கிரணன் எனவும், சிவனைச் சங்கரன் எனவும் பெயர் கூறுமாறு போல உள்ள காரணத்தான் இதற்கு இதுபெயராம் எனக் கண்டார்க்கு ஒத்து நிகழச் செய்தலின் ஒன்றுவதெனமொழிவேன் யான் என்றது" - இதிலிருந்து செய்யப்பட்ட நூலின் ஒரு தனிச் சிறப்பு நனி விளங்கும்.

இரண்டாம் பாடலுக்கான உரையில் மெய்கண்ட சந்தான வரலாற்றைச் சுருக்கமாகஉரையாசிரியர் அருளியுள்ளார். திருமூல தேவர்க்குச் சதாசிவமுனிகள் என்றபெயர் உண்டு என்று உரை ஆசிரியர் அறிவிக்கின்றார். "ஆதியில் சநகரால் சம்பு சந்தானமும், மலையமான் சந்தானமுமாக இரண்டாய்ப் பின் பலவாகப் பரம்பிற்று" என்ற உரைச்செய்தி மிக முக்கியமானது. அதேபோல் சனற்குமாரரால் விஞ்ஞானதேவர் மெய்கண்ட தேவர் சந்தானம் இரண்டாய்ப் பின் பலவாயின.

இவ்வாறு சமயம் ஒன்றுகவும் சந்தானம் பலவாகவும் வருதலாற் பயன் என்ன? இதற்கு உரையாசிரியர் தரும் விடை வருமாறு: "ஏனைச் சமயங்கட்கு இஃதின்மையின் சிறப்புண்டாக லானும், ஆகமம் பலவாதலின் விதியும் விலக்கும் முத்தி நிலைகளும் பலவாகலின் அவ்வனைத்தும் அநுட்டித்து முடியாதாகலின், ஒன்று பற்றியே நடத்தற் பொருட்டு அவரவர் சந்தானத்திற்குரிய ஆகம வழியே நடந்து ஒழுக வேண்டுதலானும் பயன் உண்டு என்க."

பாடல் மூன்றுக்கான உரையில், ஆன்மாவிற்கு ஆனந்தம்இயல் பன்று; அதை வழங்குபவன் பதியே என்பதை நிறுவக் கீழ்வரும் ஆளுடைய பிள்ளையாரின் பாடலை மேற்கோளாகக் காட்டுகிறார்:

" கோல மாகரி யுரித்தவ ரரவொடு மேனக்கொம் பிளவாமை
சாலப் பூண்டுதண் மதியது சூடிய சங்கர ஞர்தம்மைப்
போலத் தம்மடியார்க்குமின் பளிப்பவர் பொருகடல் விடமுண்ட
நீலத் தார்மிடற் றண்ணலார் சிரபுரந் தொழவினை நில்லாவே"

அப்பர் அடிகள்: "தேனினு மினியர் பாலனநீற்றர்

" திங்கரும் பனையர்தந் திருவடி தொழுவார்
ஊனயந் துருக வுவகைகள் தருவார்" (திருவிடைம. குறுந். 10)

என்று அருளியுள்ளதையும் சான்றாணகைக் காட்டுகிறார்.

பாடல் நான்கில், "உலகில் இரதமுடைப் பொருளெல்லாம் தனக்கு இனிமையாகாது பிறர்க்கே இனிமை பயத்தலானும்,

எத்துணை வல்லமையுடைய நாடகியாயினும் தன்கழுத்தில் தான் ஏறி நடிக்க மாட்டாமையின்'' என்று எடுத்துக்காட்டிக், கிரியா விரோதத்தை நிறுவி ஆன்மானந்தத்தை மறுக்கிறார் உரை ஆசிரியர். மேலும் "பருகத் தொலையாப் பரயோகந் தன்னை'' ஊட்டுங் குருவே சிவன் என்றும் காட்டுகிறார்.

ஆன்மானந்தம் என்ற கொள்கை சுவானுபவத்தைப் பகுத்தறிய மாட்டாமையின் விளைந்த மயக்கவுணர்வு என்று ஐந்தாம் பாடலின் உரையில் உரையாசிரியர் நிறுவுகிறார். கொடுப்பான் சிவனே; கொள்வானே ஆன்மா. இதையே

" அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாது நீ பெற்ற தொன்று என்பால் ''

என்றதிருவாசக உண்மைகொண்டும் சாதிக்கிறார் உரையாசிரியர். ஆன்மா படிகம் போன்றது ஆதலாலே சார்ந்து பெற்ற குணம் ஆன்மாவினது அன்று என்று தெளிவுபடுத்துகிறார்.

பாடல் ஆறுக்கான உரையில் சிவன் தந்த ஆனந்தம்தான் சீவனைப் பிரகாசிப்பிக்கும் என்று கூறி, அக்கருத்தை, ' சிவப்ரத சிவாநந்த சிவயோகின் மகேஸ்வர'' என்று வரும் ஞானசித்தி வாக்கினால் துலக்குகிறார். தன்னிடத்தில் தோன்றுமின்பம் தன் குணம் என்றால் சிவசாக்ஷாத்காரங் கிடையாது என்று அடித்துக் கூறி, ஆன்மானந்த வாதியின் கூற்றை மறுத்துத் தள்ளுகிறார்.

பாடல் ஏழு, "..... பேதாய் பெறுவான் நீ ஆனந்தம் பேறு என்று உரைத்தது. அறியாது இருந்தனை நீ '' என்கின்றது. பெறுவான் ஆன்மா; ஆனந்தம்பேறு, என்றே பிரமாணங்கள் ஒருமிடறாகக் கூறுகின்றன. "அருளான ஆனந்தத் தாரமுதூட்டி'' என்று இரண்டு இடங்களில் திருமந்திரமும், "பரம்பரமான பரம சிவாநந்தம்'' என்று ஓர் இடத்தில் அதே திருமந்திரமும், "இனியன் தன்னடைந் தார்க்கு இடை மருதனே'' என்று அப்பர் அடிகளும், "சேர்வார் தாமே தானாகச் செயுமவன்" என்று ஆளுடைய பிள்ளையாரும், "தேனங்கத்தமு தாகியுள்ளூறுந் தேசனை'' என்று வன்றொண்டரும், "திளைத்தற்கு இனியானை'' என்று அவ்வன்றொண்டர் அதேபாடலில் சுட்டுவதும், "இனிது அருள் பருக மாட்டா அன்பிலாதவரை" என்று அரதன வாக்கிய அடிகளும், "அருளை வாய் மடுத்துப் பருகுதோறமுத மொத்து'' என்று திருவிசைப்பாவும் கூறுவன காட்டி மூலத்தின் கருத்தை மொய்ம்புற விளக்குகிறார் உரை ஆசிரியர். சீவன்முத்தி நிலையில் உள்ள அநுபவம் பற்றிச் சித்தியார்,

"தக்கபிரி யாப்பிரிய மின்றி யோட்டிற்
நமனியத்திற் சமபுத்தி பண்ணிச் சங் கரனே
டொக்கவுறைந் திவரவனை யவனிவரை விடாதே
யுடைந்தையாய்ச் சிவன்றேற்ற மொன்றுமே காண்பர்."

என்று கூறுகிறது. ஆனல் ஆன்மானந்த வாதியோ அந்நிலையில் "தன்னுருவம்கண்டிருப்பேன்" என்கிறன். இதுஎவ்வளவு பேதமை என்பதைத் தம்முரையில் நன்குபுலப்படுத்துகிறர் உரையாசிரியர். "சிவன்முத்தர் சிவமே கண்டிருப்பர்" என்ற உண்மையைத் தக்க ஆதாரங்களுடன் உரையாசிரியர் எட்டாம் பாடலுக்கான உரையில் விளக்கி நிறுவும் பெற்றி ஓதி ஓதி மகிழத் தக்கது.

ஒன்பதாம் பாடலுக்கான உரையில் ஆன்மானந்த வாதிக்குச் சாதன சாத்திய விரோதம் நிகழ்ந்தமை காட்டி உரையாசிரியர் அம்மதத்தை நிராகரிக்கின்றர். "ஈசனையே காண என தவம் முன் செய்தது எலாம் மோசமாய் வந்துமுடிந்ததே" என்பதுஎட்டாம் பாடலின் செய்தி. இதற்குக் கிடைக்கும் விளக்கம் பின்வருமாறு:

"ஈசனையே என்ற ஏகாரம் பிரிநிலை; முப்பொருளினுள்ளும் முத்தியிற்கண்டு அநுபவித்தற்கு விடயமாதல் சிவனிடத்த தாகலின் வேண்டும் என்பது அவாய் நிலையான் வந்தது அன்றி, என என்பதை இடைச்சொல்லாக்கிக் காணும் படியெனக் கிரியாவிசேடணம் ஆக்கினும் ஆம். "பார்முதிர் பனிக்கடல் கலங்கவுள் புக்கு" (திருமுருகு) என்றாற் போல அன்றி என என்பதற்கு என்பதைக் கருதி எனப் பொருள் உரைப்பினும் அமையும். காண என்பது "சுடச் சுடரும் பொன் போல்" என்றாற் போல இருமுறைப்பட நின்றது அதன் விருப்பமிகுதி தோன்றற்கு. ஈண்டு மோசம் என்றது பயனின்மை குறித்து நின்றது; என்னை? முத்தியிற் சிவனைக் காணுமையின். அதனை யுத்தேசித்துச் செய்த வெல்லாம் பயன் தராமையின்."

தவம்என்பது கற்பனகற்று அநுட்டித்தல். அநுட்டிக்கப்படாத நிலையில் மகாப்பிரயோசனம் பறிபோகும். சித்தாந்தம் செப்பும் பரம முத்தியே மகாப்பிரயோசனம், ஆகுல நீர பிற.

ஆன்மானந்தம் உண்டு என்பானைக் குறிவழி உபாய நிலையால் நிராகரிக்கும் செய்தி பாடல் பத்தில் பகரப்பட்டிருக்கின்றது. எப்படி ஒருவன் ஆனந்தம் ஆன்மாவிற்கு இயல்பாக உண்டு என்று சொல்ல முடியும்? அப்படிக் கூறுவான், தான் சிவஞானம் பெற்றவனுகக் கூறினல் அக்கூற்று உண்மை அன்று. இதை உரையாசிரியர்:

"தான்அன்றி நிற்களமும் சச்சிதா நந்தனைநீ
யான்என் குணம்என் இடும்புஎன் னே"

என்பது, தன்னியல்பு தோன்றாது மழுங்க அவிழ்ச்சி கொடுத்துக் குழைந்திருக்கப் பெற்றால் பெறப்படும் சச்சிதானந்த ரூபனுதலால் அவ்வுபாய நிலையானே சாட்சாத்காரம் பெற்றுழித் தான்முழுதும் தோன்றாது அவனே புலப்படத் தோன்றக் கண்டிருந்தும் என்ன காரணத்தால் அவனை யான் என்றும் என் குணம் என்றும் கூறும் முரண் உண்டானது? "ஊன நீ ஞானகுணம் பெற்று இன்னும் நான்நான் என நவிலும் ஈனகுணம் போனது இலையே" என்பது, அநாதியே பெத்தனுன நீ சிவகருணையான் ஒரோ வழிச் சிவஞானம் பெற்ற பின்பும் முன்போல் நான் நான் என நவிலும் முரண் உண்டாயிருத்தலான் நீ ஞானம் பெற்றதும் இல்லை; அதனானே மலபந்தம் நிவர்த்தியானதும் இல்லையாதல் வேண்டு மென்றவாறு" என்று தெளிவித்திருக்கிறார்.

பாடல் பதினென்றுக்கான உரையில், "ஆகமம் முதலியன ஆநந்தபேதங் கூறும்வழி அபராநந்தம் பராநந்தமென விடயா நந்தத்தையும் பரமாநந்தத்தையுமே கூறியதன்றி ஆன்மாவிற்கும் ஆநந்த முண்டெனப் பேரின்பத்தை இரண்டாகப் பகுத்துக் கூறாமையானும் ஆன்மாவிற்கு ஆநந்தம் இன்று என்பதே கொள்ளப்படும் என்க" என்று உரையாசிரியர் விளக்கி இதற்கு ஆதாரமாக அசிந்திய விசுவத்தில் சமாதிராஜ படலத்திலிருந்து மேற்கோள் காட்டுகிறார்.

ஆன்மாநந்தம் என்பது ஆன்மாவிற்குச் சிவனார் வழங்கும் ஆநந்தம் என்று தான் பொருள். "சிவன் ஆநந்தரூபன் ஆகலின் அவனை ஒருவன் அநுபவத்து அறியவேண்டும்; பாசஞ் சடமாகை யால் ஆன்மாவே அநுபவித்து அறிவன்; அதனால் அவனுக்கு அநுபவ உரிமை உளதாதல் பற்றிச் சிவன் கொடுப்பதும், அவன் பெறுவதுமாகக் கூறும் விவகாரத்தால் ஆன்மாநந்தம் என்று வழங்கப்படும்."

சிவனைப் போல் சீவனுக்கும் இயல்பாக ஆனந்தம் உண்டு என்றால், சீவன் ஏன் பல் பிறவிப்பட்டு முடிவில் அவ்வானந்தம் பெற வேண்டும்? கண் ஒளியுடைப் பொருளாயினும் பேரொளி படைத்த ஆதித்தனுக்கு ஈடாகுமா? ஆன்மாச் சிவனெடு சித்துருவத்தால் ஒத்திருப்பினும் ஆநந்தத்தால் ஒத்த நிலைமை இலன்." இதைப் பன்னிரண்டாம் பாடலின் உரைதெளிவு படுத்து கிறது. இப்பாடலுக்கு மிக விரிவான உரை வரைந்திருக்கிறார். வெள்ளியம்பலவாண முனிவர்.

பேரின்பம் ஆன்மாவின் குணமாகாது. காய்ச்சப்பட்ட இரும்பு தீயின் வேலையைப் புரியும். இங்குச் செயலை விளைவிப்பது தீயே அன்றி இரும்பன்று. சிவனும் சீவனும் சித்துப் பொருள்கள் என்றா லும், சிவன் அருட் சித்து, சீவன் அருளைச் சேரும் சித்து. அருளைச்

சேர்ந்து ஆன்மா பேரின்பம் துய்க்கும். இதுபதின்மூன்றும் பாடலுக்கான உரையில் அழகாக எடுத்துரைக்கப் பட்டிருக்கிறது.

அநாதியே தொடர்ந்துவரும் இருள் நீங்க, அப்போது பேரின்ப வடிவாய் வந்து கலந்து கோடலின் அதனைச் சிவ போகம் என்பர். அங்ஙனம் கூறுது அதை ஆன்மாநந்தம் என்பது பொருள் அற்ற வாசகம். பதினைந்தாம் பாடலின் உரை இதைத் தெளிவு படுத்துகிறது.

ஆன்மானந்தவாதி தன்மதத்திற்குப் பிரமகீதை, வேதாந்தம் போன்றவற்றை ஆதரவாகக் காட்டினுல், அது செல்லாது என்று பதிறும் பாட்டின் உரை பகர்கின்றது. இங்கு, பேரின்பமே சாட்சியாயுள்ள பிரமம் என்று சங்கரர் தமது தச சுலோகியில் கூறியதை மேற்கோள்காட்டி, ஆன்மாநந்த வாதத்தை மறுக்கிருர் உரையாசிரியர். சங்கரர் அருளிய ஆத்மபோதம், சிவதோத்திரம் திருக்குத் திருசிய விவேகம் ஆகிய நூல்களின் பகுதி சைவ சித்தாந்தக் கருத்துக்கு அரண் ஆவதைக் காட்டுகிறது. இப் பாடலுக்கு முனிவர் வரைந்திருப்பது அகல உரை. சங்கரர் கொள்கைகளை அவர் எங்ஙனம் துருவித்துருவிப் பார்த்துள்ளார் என்பதற்கு இப்பாடல் உரையே சரியான கரியாகும்.

"புசிப்போம சிவபோகம்", "உள்ளமல நீங்கி யோங்கு சிவாநந்த வெள்ளந்திளைத்து" என்றெல்லாம் குருஞானசம்பந்தர் அருளியவற்றிற்கு இங்குத்தெளிவான விளக்கம்தருகிருர் முனிவர். சிவன் "மங்கையோடிருந்தே யோகுசெய்வான்", "திளைத்தற்கினியான்" என்று காட்டுகிருர். சிவாநுபவ முதிர்ச்சியை யறிவிக்கும் சொற்களைச் சரியாகப் புரிந்துகொள்ளாமற் போனல் பாதகம் நேரிடும். ஆகவே பாடல்பதினேழுக்கான உரையை சர்வசாக்கிரதையாகக் கொண்டுசெலுத்துகிருர் முனிவர். சிவசக்திகள் தன்மதன்மி பேதவிவகார நிமித்தந் தேவி தேவன் என இரண்டாகக் கூறப்படுவனவேயன்றி உண்மையில் பொருள் ஒன்றே. இவ்விரண்டன் ஒருமை சைவசித்தாந்த சாரம். சுந்தரரும் "தாயுந் தந்தை பல்லுயிர்க்குந் தாமேயாய தலைவனுர்" என்று அருளியுள்ளார்.

"சிவசத்திதன்னைக்கண்டு ஆங்கு அருளாற் சச்சிதானந்தம்எனும்
மன்னைத் திளைத்து வாழ்வார்"

என்று பாடல் பதினெட்டு அருள்கின்றது. சிவனைப் பெற்றிருத்தலே முத்தி. சிவனை யவன் திருவடி ஞானத்தால் சேரச் செய்புவது" என்றும், "பரஞானத்தாற் பரத்தைத் தரிசித்தோர் பரமே பார்த்திருப்பார்" என்றும், "அருள்தரு கை கொடுத்து ஏற்றும் ஐயாறன் அடித்தலமே" என்றும்,

"காட்டா தனவெல்லாங் காட்டிச் சிவங்காட்டித்
தாட்டா மரை காட்டித் தன் கருணைத் தேன் காட்டி"

என்றும் வரும் அருள் ஞானவாசகங்கள் முன்சொன்ன செய்திக்கு அரண். இப்பாடல் உரையுள், (பக். 203), "இதனாலும் மறைஞான பண்டாரங் கூறுவன எல்லாம் முன்னூலில் இல்லாப்பொருள்களே யாம் என்பது கண்டுகொள்க" என்று முனிவர் உரை வரைந் திருப்பதினால், முத்தி நிச்சயம், அப்பண்டாரம் கூறியகொள்கையை மறுக்க அவதாரமான நூல் என்று தெளிவாகத் தெரிகின்றது.

சச்சிதானந்த ரூபனான பரமசிவனோடு சற்சித்து ரூபியான சிவான்மாவிற்கு முழுதுஞ் சமதை கூறும் சிவசமவாதத்தைப் பாடல் பத்தொன்பது நிராகரிக்கின்றது. ஆன்மானந்தவாத நிராகரணத்தாற் போந்தது உயிர் சற்சித்து ரூபி மாத்திரம் மெனவும், சிவசமவாதி எல்லாவற்றானுந் சமதை கூறுங்கால் ஆநந்தம் உண்டெனவும் கூறவேண்டு மன்றே! அவ்வாறன்றிச் சற்சித்து என்றும் தருமம் மாத்திரம் ஒத்தலின் ஒருபுடை ஒப்புமை யான் அன்றிச் சமதையும் கூடாது என்பதாம்.

அளவை நூல்களில் நல்ல தேர்ச்சியுடையாரே பேருரையைப் பயன் கொள்ள முடியும். முனிவர் கூறும் வாசகங்கள் அளவை நூல் பரிபாஷைச் சொற்கள் கொண்டு இயங்குவன. இப்பாடல் உரையில் அவர் கூறும்: "தீபாலோகம், பட்ச தருமம் பட்சத்தில் உண்டாதல், அந்வயவெதிரேகி அனுமானம், அசித்தி என்கிற ஏத்துவாபாசம், சபக்ஷசத்துவம், விருத்த வேத்துவாபாசம் விபக்ஷம், வியாவிருத்தி, அபாதிக விடயத்துவம், காலாத்திய யாபதிட்ட வேத்துவாபாசம், கிரியா விரோதம்" முதலிய சொற்களும் சொற்றொடர்களும் பெரும்பாலோர்க்கு விளங்கா. அளவை நூல்களில் நல்ல தேர்ச்சி உற்றோர் முனிவர் உரையைப் பொன்னே போல் போற்றுவர்.

ஆன்மானந்தவாதி மறுக்கப்பட்ட நிலையில், நிராகரணம் பண்ணப்பட வேண்டியது சிவசமவாதமே. இந்த நிராகரணம் பாடல் இருபதிற்கான உரையில் மிக விரிவாக மேற்கொள்ளப் படுகிறது. அசிதம், இரத்தினத் திரயம், அகோரசிவாசாரியர் அருளியவை, சுவாயம்புவம், மிருகேந்திரம், பவுட்கரம், சிவஞான போதம், சிவஞான சித்தியார், காமிகம், இரௌரவம், மதங்கம், கிரணம், மோக்ஷகாரிகை, சர்வஞானோத்தரம், சிவதருமோத்திரம், தத்துவப் பிரகாசிகை, திருமுறைகள், சிவப்பிரகாசம் போன்ற பல நூல்களிலிருந்து தக்க மேற்கோள்கள் உரையாசிரியரால் தரப் படுகின்றன. முனிவரின் கல்வியறிவு கடலன்னது. பகவத்கீதையின் உட்கிடையும் சைவசித்தாந்தமே என்றும் காட்டுகிறார். இப் பாடலின் உரையில் சம்ஸ்காரங்களின் உட்கிடையை வெளிப் படுத்துகிறார். தீட்சை பெற்றாரே ஓதவேண்டிய நூலிது. உரையி லிருந்து ஒரு நறுக்கு: "......புரோட்சணம் என்னும் விசேட

சம்ஸ்காரத்தான் முன்னர் ஞானசத்தி ரூபமான அர்க்கனாலே கஷ்கமாகப் பண்ணிப் பச்சையை யுலர்ந்ததென வேறுபடுத்தினாற் போலச் சடத்தைச் சிறிதென வேறுபடுத்தி நிர்மலமாக்கியும் தாடன விசேடத்தான் முன்னர்க் கிரியாசத்தி ரூபமான அக்கினி யால் தகித்து வேறு ஒன்று ஆக்கினாற் போல அப்பியுக்ஷணத்தாற் சடபாவம் போக்கிச் சிற்பாவத்தைக் கல்லிற் புலிங்கம்போல வியத்தி பண்ணியும் இச்சாசத்தி ரூபமான சோமனாலே அமிர்தாப் பிலாவனத்தை சமாந்நியாகாரமாகப் பண்ணப்பட்டாற் போல ஆநந்ததர்மமான அமிர்தீ கரணம் பண்ணித் திரவிய முழுதுஞ் சிவரூபமாக்கினவாறு." இருபதாம் பாடலுக்கான உரை 73 பக்கங் கள். அதாவது இதுவே ஒரு தனிநூல் என்று கொள்ளவேண்டும்.

சிவசமமே முத்தி எனில் அது சைவசித்தாந்த முத்தி அன்றாம். ஆகவே சிவ சமவாதி ஓர் ஏகதேச மதவாதியே அல்லாமல் சித்தாந்தி அல்லன். பாடல் இருபத்து ஒன்றுக்கு வரைந்த உரையில் சிவசமவாத பேதங்களை விளக்கி, இவர்களில் யாருமே சித்தாந்தி அல்லர் என்று நிறுவுகிறார் முனிவர். ஆன்மானந்த வாதியும் ஒருவாற்றான் இவர்களைப் போலச் சமதை கூறலின் அவனுக்கும் இந்நிராகரணம் ஒக்கும்.

சிவாகமங் கூறு முத்தியே சித்தாந்த முத்தியென முத்தி நிச்சயம் நிச்சயிக்கிறது. பாடல் இருபத்து இரண்டு கூறுவதாவது: "... கள்ளவிழ் பூங்கொத்தார் விரிசடையார் கூறு சிவாகமத்திற் சித்தாந்த முத்தியெனத் தேறு."

ஆன்மானந்த வாதம் சைவ பேதத்தும் இடம் பெறுமல் நிற்பது. ஆகவே கடியப்பட வேண்டிய ஒன்று. உள்ளது சிவானந்தமே. "சிவஞானமிருதம் பீத்வா விசரஸ்வ யதா சுகம்" என்று சர்வஞானோத்தரம் சாற்றுவதையே,

"கரும்பைத்தேனைப்பாலைக் கனியமுதைக் கண்டைக்
கட்டியையொத் திருப்பனந்த முத்தியினிற் கலந்தே"

என்று சிவஞான சித்தியாரும் சாற்றுகிறது. பஞ்சதசியும், "தேனு யின் னமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்" என்பதை அநு சரித்து, "ரஸோப்ரம்ம ரஸம் லப்த்வா ஆநந்தீ பவதி நாந்யதா" என்று அறுதியிடுகிறது. நூலை முனிவர் இங்ஙனம் நிலைநாட்டுகிறார்; "...... எனவே சிவாநந்தாநுபவமாவதே சைவசித்தாந்த முத்தி யென்பதற்கு முன்னர்ப் பாயிரத்தினுஞ் சந்தானநற் குரவர் என்னும் பாட்டினுங் கூறியவாறே, மூலாகமவுபாகம பிரகரண வேதாந்தபுராணமும், தமிழில் தொல் ஆசிரியர் செய்த திருமந்திர மாலை, சிவஞானபோத முதலிய சைவநூல்களும் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பிரபந்தக் கட்டளை, பெரிய புராணமும், பிறவும் பிரமாணமாக வந்தவாறாயிற்று. ஆகவே பிறர்கோள் பிரமாணவத் தன்மையிற் சிதைந்த தூடமாயிற்று. இந்நூலாற் போந்த பொருள் :

"வல்லான்கமலையின் ஞானப்ர காசன் வசனமுணர்ந்
தெல்லாம் வெறுமித்தை யென்றுகண் டேனின்ப வாரியுள்ளே
செல்லாமற் சென்றதைத் தேக்காமற் றேக்கித் தினந்தினமு
நில்லாம னின்றுகொண் டேனிது வேமுத்தி நிச்சயமே"

குருபாதமே துணை.

வைகாசி மாதச் சிறப்பு நாட்கள்

14—5—88	சனி, விஷ்ணுபதி புண்ணியகாலம். திருவையாறு மாதப் பிறப்புத் தீர்த்தம், ரிஷபரவி 12-12, மாத சிவராத்திரி.
15—5—88	ஞாயிறு, சர்வ அமாவாசை.
16—5—88	திங்கள், கிருத்திகை விரதம். வேளூர் கிருத்திகை.
21—5—88	சனி, சேக்கிழார் குருபூஜை. சஷ்டி விரதம். திருப்பனந்தாள் ஸ்ரீமத் அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் மாகேசுவர பூஜை. திருவையாறு வைசாக உற்சவ ஆரம்பம்.
22—5—88	ஞாயிறு, ஆயில்யவிழா.
24—5—88	செவ்வாய், தருமை ஆதீனம் 24 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக சுவாமிகள் குருபூஜை.
26—5—88	வியாழன், தருமை ஸ்ரீ ஞானம்பிகை உடனுகிய ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமிக்கு மகோற்சவ பூர்வாங்கங்கள்.
27—5—88	வெள்ளி, தருமை ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமிக்கு விழா மகோற்சவத் துவஜாரோகணம்.
28—5—88	சனி. பிரதோஷம். அக்னிநக்ஷத்திர நிவர்த்தி 7-46
30—5—88	திங்கள், வைகாசி விசாகம், பால்மாங்காய் நைவேத்யம்.
31—5—88	செவ்வாய், வைசாக உற்சவ தீர்த்தம். திருக்குறுக்கை ஸ்ரீ காமதகனமூர்த்திக்கு அபிஷேகம். பௌர்ணமி விரதம். மாதபூஜையில் சந்தனம் சாத்துதல். தருமை ஆதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி சகோபுர ரிஷப வாகனக் காட்சி.
1—6—88	புதன், ஸ்ரீ திருஞானசம்பந்தர் குருபூஜை. ஸ்ரீ திருஞானசம்பந்தர் அபிஷேகம். ஐக்கியம், ஆச்சாள்புரம் ஸ்ரீ தோத்திர பூரணாம்பிகை உடனுகிய ஸ்ரீ திருஞானசம்பந்தருக்குத் திருக்கல்யாணம். பின்னிரவு ஐக்கியம். ஜோதி தரிசனம்.
2—6—88	வியாழன், தருமை ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமிக்குத் திருக்கல்யாணம். வெள்ளி ரதத்தில் ஏகாசனக் காட்சி. திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீகுமரகுருபரசுவாமிகள்மாகேசுவரபூஜை.
3—6—88	வெள்ளி, சங்கடஹர சதுர்த்தி.
4—6—88	சனி, தருமை ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி மகோற்சவத் திருத்தேர். சிரவண விரதம்.
5—6—88	ஞாயிறு, தருமை ஞானபுரீசுவரசுவாமி மகோற்சவதீர்த்தம். தருமை ஆதீன ஸ்தாபகர் ஸ்ரீலஸ்ரீ ஆதி குருஞானசம்பந்தர் குருபூஜை. மாகேசுவரபூஜை. மாலை 26 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் திருமஞ்சனமாடி, குருபூஜை வழிபாடு. ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி துவஜாவரோகணம்.
6—6—88	திங்கள், தருமை ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயிலில் 108 சிவபூஜகர்கள் சிவபூஜை. மாகேசுவரபூஜை. இரவு 26 ஆவது குருமகாசந்நிதானம் பட்டினப்பிரவேசம்.
11—6—88	சனி, சனிமகாப்பிரதோஷம்.
12—6—88	ஞாயிறு, கிருத்திகை விரதம். மாத சிவராத்திரி. தருமை ஸ்ரீ சண்முக அபிஷேகம். வேளூர் மண்டலாபிஷேகக் கிருத்திகை.
13—6—88	திங்கள், போதாயன அமாவாசை. ஆனித் திருமஞ்சன ஆரம்பம்.
14—6—88	செவ்வாய், சர்வ அமாவாசை. ஷடசீதி, மிதுனரவி 33-26. திருவையாறு மாதப் பிறப்பு தீர்த்தம்.

JNANASAMBANDAM

வெளிநாடு Regd. No. TN / M. M.

சண்முக விலாசமும்

திருத்தேர் வீதி உலாக் காட்சியும்



குறிப்பு :- உற்சவகாலங்களில் இன்னிசைக் கருவிகளுடன் ஆதீனத் தேவாரப் பாடசாலை ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் திருமுறைப் பாராயணமும், வேத சிவாகம பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்களால் வேத பாராயணமும் நிகழ்த்தப்பெறும்.

Printed & Published by V. Ramaiah Pillai Manager, Dharmapuram,